# அறத்துப்பால் — யோக விளக்கவுரை

## அறத்துப்பால் > பாயிரவியல் | கடவுள் வாழ்த்து (1)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு. (1)

க, அ என்ற எழுத்துக்கு முதலாவதுபோல ஆதியில் பகுக்க முடியாத வானம் (பகவான்) முதலாக கொண்டது இந்த உலகம்.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின். (2)

உ, பகுத்து அறிந்தவன் பாதம் பற்றவில்லை என்றால் படித்து என்ன பயன்?

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார். (3)

ங, மலராகிய உபதேசத்தை அடைந்தவரை அடைந்தவர், நிலத்தில் நீண்ட காலம் வாழ்வார்.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு

யாண்டும் இடும்பை இல. (4)

ச, தேவை தேவையற்றது என்று பாரபட்சம் பார்க்காதவரை அடைந்தவருக்கு துன்பம் என்றும் இல்லை.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (5)

ரு, இருளாகும் இருவினைகளை சாராது இறைவனை புரிந்து கொண்டவர் புகழப்படுவது உறுதி.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறிநின்றார் நீடுவாழ் வார். (6)

சு, உடல் என்ற பொறியில் ஐந்து புலன் தந்தவனுக்கு உண்மையாக

இருந்தால் உயர்வான வாழ்வு வாழலாம்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்

மனக்கவலை மாற்றல் அரிது. (7)

எ, நிகரற்றவனின் நிழல் அடைந்தால் இன்றி மனக்கவலைகள் மாறுவது இயலாது.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்

பிறவாழி நீந்தல் அரிது. (8)

அ, முடிவை புரிந்துகொண்ட இயல்பானவன் நிழல் அடையாவிட்டால் பிறவி அறுப்பது கடினம்.

கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை. (9)

கூ, கோள்களிலோ பொறிகளிலோ குணம் என்பது இல்லை, என் குணம் கொண்டவனை வணங்குவதே தலை.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்

இறைவன் அடிசேரா தார். (10)

கo, இறைவன் அடி சார்ந்தால் பிறவி கடலை நீந்தலாம். இல்லையேல் நீந்த முடியது.

**அதிகார விளக்கம்!**

கடவுள் உண்டு அது இந்த உலகத்திற்கு துவக்கமாக உள்ளது. அதை பகுத்து அறிந்தவனை நாடி புரிந்து கொள்ளாமல் படிப்பதால் எந்த பயனும் இல்லை. அறிந்தவன், மலராகிய உபதேசப் பொருளில் நின்று வாழ்வான். தேவையானவர் தேவை அற்றவர் என்ற பாகுபாடுகளைக் கடந்த அவரே குரு. அறியாமை உண்டாக்கும் இரு வினைகளை கடந்தவனே இறைமையை புரிந்து புகழை அடைகிறான். பொறிகளுக்கு நன்றியுடன் இருந்து பொய் அற்று வாழ்பவன் சிறந்த வாழ்வை வாழ்பவனாவான். நிகரற்ற தனது உபதேசப் பொருளை அடையாமல் மனக்கவலை மாற்றுவது இயலாது. அப்படி அறமுடன் இருப்பவரை அறிந்தால் பிறவி துன்பமும் போகும். கோள்களைக் காட்டிலும் மேலான குணங்கள் படைத்தவரை வணங்குவது நல்லது. பிறவி என்ற பெரிய கடலை கடக்க இறைவனின் துணை அவசியம்.

காணொளி:-

http://youtu.be/JUyYeLfr798?list=PLXzX9wD_JRiF_ecim4GEfX_ofAFyPsuG5

**காணொளி:** http://youtu.be/JUyYeLfr798?list=PLXzX9wD_JRiF_ecim4GEfX_ofAFyPsuG5

## அறத்துப்பால் > பாயிரவியல் | நீத்தார் பெருமை (3)

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து

வேண்டும் பனுவல் துணிவு. (21)

க, ஒழுக்கத்தால் (இயல்பாக) நீர்த்து போனவர்களின் பெருமையை பகிர்ந்து கொள்ள துணிவு வேண்டும்.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து

இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. (22)

உ, துறந்தாரின் பெருமையை துணையாக கூறினால் உலகமோ

இறந்தவர்களை எண்ணிக்கொண்டது.

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்

பெருமை பிறங்கிற்று உலகு. (23)

ந, இரண்டின் வகை அறிந்து இங்கே இயல்பனார் பெருமையை பேசுவதே உலகம்.

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்

வரனென்னும் வைப்பிற்கோர் வித்தது. (24)

ச, உயிர் என்ற தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான் வாழ்வென்ற ஆதாரத்திற்கு விதை.

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்

இந்திரனே சாலுங் கரி. (25)

ரு, ஐந்தாக பிரிபவனின் ஆற்றலை அகல் விளக்கின் தீபம் போல் காக்கும் தலைவன் யானை அடக்கிய இந்திரன்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்

*செயற்கரிய செய்கலா தார்.* (26)

*சூ, அரிய செயல்களை செய்பவர் பெரியவர்கள், சிறியவர்கள்*

*அரிய செயல்களை செய்ய முடியாதவர்.*

*சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்*

*வகைதெரிவான் கட்டே உலகு.* (27)

*எ, சுவை, பார்வை, தொடுதல், கேட்டல், முகர்தல் என ஐந்தின் வகையாக அறிவதே உலகம்.*

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*

*மறைமொழி காட்டி விடும்.* (28)

*அ, நிறைவான மொழி மனிதர்களின் பெருமையை, மண்ணில்*

*மறைவான மொழி காட்டிவிடும்.*

*குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி*

*கணமேயும் காத்தல் அரிது.* (29)

*கூ, குணம் என்ற குன்றின் மேல் நிற்பவர்கள் கோபத்துடன் கண நேரம்கூட இருப்பது கடினம்.*

*அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்*

*செந்தண்மை பூண்டொழுக லான்.* (30)

*கo, அந்தணர் (அந்தம் அறிந்ததால் அதாவது முடிவு அறிந்ததால்) என்பவர்கள் அறமுடையவர் மற்ற எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால்.*

அதிகார விளக்கம்!

*போதும் என்ற நிறைவை தரும் ஒழுக்கத்துடன் வாழ்ந்து நிறைவடைந்தவர்களை விரும்பி அறிய துணிவு அவசியம். இறந்தவர்கள் எல்லாம் நிறைவானவர்கள் என்று எண்ணக்கூடாது. இரண்டால் ஆன உலகை புரிந்து கொள்ளவேண்டும். புலன்களை கட்டுப்பாட்டிற்குள் வைப்பதே சிறந்தது. அப்பொழுது, மனித ஆற்றல் முற்றிலும் உணரப்பட்டு இந்திரனைப்போல் வாழலாம். இத்தகைய பண்புள்ளவர்களே அரிய செயல்களை செய்வார்கள். புலன்கள் புலப்படுத்தும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தால் இந்த உலகை அறிகிறோம். நிறைவானவர்கள் பெருமையை போற்றுவதே மறைநூல்கள். நற்குணம் அடைந்தவர் கோபத்தை அதிக நேரம் தக்கவைத்துக்கொள்வது இல்லை. அந்தணர் என்பவர் யாவரும் எல்லா உயிரும் இன்புற்று மகிழவே எண்ணுவார்.*

காணொளி:-

https://youtu.be/WbyEbrfYLIw

***காணொளி:*** https://youtu.be/WbyEbrfYLIw

## அறத்துப்பால் > இல்லறவியல் | இல்வாழ்க்கை (5)

*இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*

*நல்லாற்றின் நின்ற துணை.* (41)

*க, குடும்பம் நடத்தும் ஒருவன் இயல்பாக மாறிய மூவருக்கும்*

*நல்லது செய்யும் துணை.*

துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்

இல்வாழ்வான் என்பான் துணை. (42)

உ, போதும் என்று நிறைவை அடைந்தவருக்கும், நிறைவு அடையாதவருக்கும், இறந்தவருக்கும், குடும்பத்தானே துணையாவான்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு

ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. (43)

ங, தெரியும் புலன் அறிந்தவர் சிறந்த மனிதர்களை உபசரிப்பது, ஐந்து புலன்கள் தலையில் ஒத்திசைவு கொள்வது போல் இருக்கும்.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை

வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். (44)

ச, பழித்துவிடாதவாறு பக்குவமாக உண்ணுவது புரிந்து விட்டால்

வாழ்க்கையின் பாதையில் இடையுறு இல்லை.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது. (45)

டு, அடுத்தவர்களும் வாழவேண்டும் என்ற மனமும், தனக்குத் தானே உண்மையாக இருக்கும் குணமும், உண்டாக குடும்ப வாழ்க்கையே பண்போடு பயன் தருவதாக இருக்கிறது .

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்

போஒய்ப் பெறுவ எவன். (46)

சூ, அறத்துடன் இருக்க குடும்பத்தானாக இருக்க வேண்டும்

புறத்தே சென்று பேறு அடைந்தவன் யார்?

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்

முயல்வாருள் எல்லாம் தலை. (47)

எ, இயல்பாக குடும்ப வாழ்க்கை வாழ்பவனே உண்மையறிய முயலும் அனைவரிலும் தலையானவன்.

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை

நோற்பாரின் நோன்மை உடைத்து. (48)

அ, வாழ்வின் முறை அறிந்து வாழ்ந்து அறத்திற்கு கேடு செய்யாத

குடும்ப வாழ்க்கை, உண்மையறிய முறை செய்வதைவிட முறையானது.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. (49)

கூ, அறம் எனப்படுவதே குடும்ப வாழ்க்கை அதுவும் பிறர் பழிக்கும்படி இல்லாமல் இருப்பது நன்று.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

தெய்வத்துள் வைக்கப் படும். (50)

கo, உலகத்தில் வாழும் முறையுடன் வாழ்பவன் வான்போன்ற

தெய்வமாக மதிக்கப்படுவான்.

அதிகார விளக்கம்!

உள்ளபடி இருத்தல் என்ற தன்மையே இல்வாழ்வு. இதன் பொருட்டு அடையும் நன்மைகள் அதிகம். துறவு மேற்கொண்டவர், வாழ்பவர், இறந்தவர் என்ற மூவருக்கும் உதவும் ஆற்றலும், விருந்தோம்பலும், பழிக்கு அஞ்சுவதும் இல்வாழ்வின் சிறப்பு கூறுகள். எனவே, அன்புடனும், அறனுடனும் நடப்பதே பண்பும், பயனுள்ளதும் ஆகும். குடுப்பத்திலிருந்து கற்க முடியாதவர் துறப்பதால் எதையும் கற்க முடியாது. இல்வாழ்வு போன்ற சிறந்த நோன்பு இல்லை. பிறர் பழிக்காதபடி வாழ்வாங்கு வாழ்ந்தால் தெய்வமாகலாம்.

காணொளி:-

https://youtu.be/GzLWW8g-AyE

**காணொளி:** https://youtu.be/GzLWW8g-AyE

## அறத்துப்பால் | இல்லறவியல் | ரு, இல்வாழ்க்கை (5)

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை. (41)

க, குடும்பம் நடத்தும் ஒருவன் இயல்பாக மாறிய மூவருக்கும்

நல்லது செய்யும் துணை.

துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்

இல்வாழ்வான் என்பான் துணை. (42)

உ, போதும் என்று நிறைவை அடைந்தவருக்கும், நிறைவு அடையாதவருக்கும், இறந்தவருக்கும், குடும்பத்தானே துணையாவான்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு

ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. (43)

ங, தெரியும் புலன் அறிந்தவர் சிறந்த மனிதர்களை உபசரிப்பது, ஐந்து புலன்கள் தலையில் ஒத்திசைவு கொள்வது போல் இருக்கும்.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை

வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். (44)

ச, பழித்துவிடாதவாறு பக்குவமாக உண்ணுவது புரிந்து விட்டால்

வாழ்க்கையின் பாதையில் இடையுறு இல்லை.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது. (45)

ரு, அடுத்தவர்களும் வாழவேண்டும் என்ற மனமும், தனக்குத் தானே உண்மையாக இருக்கும் குணமும், உண்டாக குடும்ப வாழ்க்கையே பண்போடு பயன் தருவதாக இருக்கிறது .

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்

போஒய்ப் பெறுவ எவன். (46)

சு, அறத்துடன் இருக்க குடும்பத்தானாக இருக்க வேண்டும்

புறத்தே சென்று பேறு அடைந்தவன் யார்?

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்

முயல்வாருள் எல்லாம் தலை. (47)

எ, இயல்பாக குடும்ப வாழ்க்கை வாழ்பவனே உண்மையறிய முயலும் அனைவரிலும் தலையானவன்.

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை

நோற்பாரின் நோன்மை உடைத்து. (48)

அ, வாழ்வின் முறை அறிந்து வாழ்ந்து அறத்திற்கு கேடு செய்யாத

குடும்ப வாழ்க்கை, உண்மையறிய முறை செய்வதைவிட முறையானது.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. (49)

கூ, அறம் எனப்படுவதே குடும்ப வாழ்க்கை அதுவும் பிறர் பழிக்கும்படி இல்லாமல் இருப்பது நன்று.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

தெய்வத்துள் வைக்கப் படும். (50)

கo, உலகத்தில் வாழும் முறையுடன் வாழ்பவன் வான்போன்ற

தெய்வமாக மதிக்கப்படுவான்.

அதிகார விளக்கம்!

உள்ளபடி இருத்தல் என்ற தன்மையே இல்வாழ்வு. இதன் பொருட்டு அடையும் நன்மைகள் அதிகம். துறவு மேற்கொண்டவர், வாழ்பவர், இறந்தவர் என்ற மூவருக்கும் உதவும் ஆற்றலும், விருந்தோம்பலும், பழிக்கு அஞ்சுவதும் இல்வாழ்வின் சிறப்பு கூறுகள். எனவே, அன்புடனும், அறனுடனும் நடப்பதே பண்பும், பயனுள்ளதும் ஆகும். குடுப்பத்திலிருந்து கற்க முடியாதவர் துறப்பதால் எதையும் கற்க முடியாது. இல்வாழ்வு போன்ற சிறந்த நோன்பு இல்லை. பிறர் பழிக்காதபடி வாழ்வாங்கு வாழ்ந்தால் தெய்வமாகலாம்.

காணொளி:-

https://youtu.be/GzLWW8g-AyE

## அறத்துப்பால் > இல்லறவியல் | சு, வாழ்க்கைத் துணைநலம் (6)

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (51)

க, வீட்டிற்கு தேவையானதை சிறப்புற செய்பவளை தனதாக கொண்டவன் வளம் பல காணும் வாழ்க்கைத் துணை அடைந்தவன்.

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை

எனைமாட்சித் தாயினும் இல். (52)

உ, வீட்டை சிறப்பாக ஆளும் தகுதி இல்லாதவள் இல்லத்தரசியானால் (மனைவி) வாழ்வில் எவ்வளவு சிறப்புகள் இருந்தும் பயன் இல்லை.

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்

இல்லவள் மாணாக் கடை. (53)

ங, இல்லை என்பதே இல்லத்தாளின் குணமாக இருந்தால், உள்ளது எது

இல்லத்தாளை விட துன்பம் தரும் ஒன்று.

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மைஉண் டாகப் பெறின். (54)

ச, பெண்ணை விட பெறவேண்டிய ஒன்று எதுவும் இல்லை, கற்பென்னும்

திடத்தன்மை உண்டாக்க பெற்றால்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை. (55)

ரு, சிறப்பு பெற்றவர்களை தொழ மறுத்து தனது கணவனை மட்டுமே தொழுபவள் எதிர்பார்க்கும் பொழுது பெய்யும் மழை போன்றவள்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண். (56)

சு, தன்னை காத்து, தான் கொண்டவர்களை பாதுகாத்து, தகுதிக்கு உதாரணமாய் வாய்ச்சொல் காத்து சோர்வில்லாமல் இருப்பவளே பெண்.

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்

நிறைகாக்கும் காப்பே தலை. (57)

எ, காவலில் வைத்து காப்பது என்ன செய்யும், பெண்களின் தன்னை தான் காக்கும் தன்மையே முதன்மையானது.

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்

புத்தேளிர் வாழும் உலகு. (58)

அ, அடைந்தவர் அடைந்தது அடையவேண்டிய பெண்ணை

அறிய சிறப்பும் புதிய ஒளியும் இருக்கும் உலகில்.

புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்

ஏறுபோல் பீடு நடை. (59)

கூ, புகழ் அடைந்த குடும்ப வாழ்க்கை வாழாதவருக்கு இல்லை இகழ்ந்து பேசுவார் முன் காளை போன்ற கம்பீர நடை.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்

நன்கலம் நன்மக்கட் பேறு. (60)

கo, முழுமை என்பது குடும்ப வாழ்க்கை அதன் சிறப்பே நல்ல குழந்தைகளை பெறுவது.

அதிகார விளக்கம்!

வாழ்தல் என்பது உள்ளது சிறத்தல் ஆகும். அதற்கு துணையாக இருக்கும் எதிர்பாலினம் சிறப்பாக அமைந்துவிட்டால் வளம்பல கிடைத்துவிடும். ஆனால் நிர்வாகத் திறன் இல்லாதவர் என்றால் ஏற்றம் இருக்காது.

வேண்டிய பொழுது வரும் மழைப் போன்றவள் மனைவி மேலும், தன்னைக் காத்து தன்னை சார்ந்தவரையும் காப்பவள் எனவே, பெற வேண்டியது நல்ல துணையே. அதுவே மங்கலம்.

காணொளி:-

https://youtu.be/qkq8GOEAiAo

## அறத்துப்பால் | இல்லறவியல் | சூ, வாழ்க்கைத் துணைநலம் (6)

மனைக்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (51)

க, வீட்டிற்கு தேவையானதை சிறப்புற செய்பவளை தனதாக கொண்டவன் வளம் பல காணும் வாழ்க்கைத் துணை அடைந்தவன்.

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை

எனைமாட்சித் தாயினும் இல். (52)

உ, வீட்டை சிறப்பாக ஆளும் தகுதி இல்லாதவள் இல்லத்தரசியானால் (மனைவி) வாழ்வில் எவ்வளவு சிறப்புகள் இருந்தும் பயன் இல்லை.

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்

இல்லவள் மாணாக் கடை. (53)

ங, இல்லை என்பதே இல்லத்தாளின் குணமாக இருந்தால், உள்ளது எது

இல்லத்தாளை விட துன்பம் தரும் ஒன்று.

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மைஉண் டாகப் பெறின். (54)

ச, பெண்ணை விட பெறவேண்டிய ஒன்று எதுவும் இல்லை, கற்பென்னும்

திடத்தன்மை உண்டாக்க பெற்றால்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை. (55)

ரு, சிறப்பு பெற்றவர்களை தொழ மறுத்து தனது கணவனை மட்டுமே தொழுபவள் எதிர்பார்க்கும் பொழுது பெய்யும் மழை போன்றவள்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண். (56)

சூ, தன்னை காத்து, தான் கொண்டவர்களை பாதுகாத்து, தகுதிக்கு உதாரணமாய் வாய்ச்சொல் காத்து சோர்வில்லாமல் இருப்பவளே பெண்.

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்

நிறைகாக்கும் காப்பே தலை. (57)

எ, காவலில் வைத்து காப்பது என்ன செய்யும், பெண்களின் தன்னை தான் காக்கும் தன்மையே முதன்மையானது.

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்

புத்தேளிர் வாழும் உலகு. (58)

அ, அடைந்தவர் அடைந்தது அடையவேண்டிய பெண்ணை

அறிய சிறப்பும் புதிய ஒளியும் இருக்கும் உலகில்.

புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்

ஏறுபோல் பீடு நடை. (59)

கூ, புகழ் அடைந்த குடும்ப வாழ்க்கை வாழாதவருக்கு இல்லை இகழ்ந்து பேசுவார் முன் காளை போன்ற கம்பீர நடை.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்

நன்கலம் நன்மக்கட் பேறு. (60)

கo, முழுமை என்பது குடும்ப வாழ்க்கை அதன் சிறப்பே நல்ல குழந்தைகளை பெறுவது.

அதிகார விளக்கம்!

வாழ்தல் என்பது உள்ளது சிறத்தல் ஆகும். அதற்கு துணையாக இருக்கும் எதிர்பாலினம் சிறப்பாக அமைந்துவிட்டால் வளம்பல கிடைத்துவிடும். ஆனால் நிர்வாகத் திறன் இல்லாதவர் என்றால் ஏற்றம் இருக்காது. வேண்டிய பொழுது வரும் மழைப் போன்றவள் மனைவி மேலும், தன்னைக் காத்து தன்னை சார்ந்தவரையும் காப்பவள் எனவே, பெற வேண்டியது நல்ல துணையே. அதுவே மங்கலம்.

காணொளி:-

https://youtu.be/qkq8GOEAiAo

## அறத்துப்பால் | இல்லறவியல் | கூ, விருந்தோம்பல் (9)

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு. (81)

க, இருக்கசெய்து இல்வாழ்வது, விருந்து கொடுப்பது போன்றவைகள் விவசாயம் செய்பவர்களின் பொருட்டே வந்தது.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா

மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (82)

உ , விருந்தாளி வெளியே இருக்க சாகா மருந்தாக இருப்பினும் தான் மட்டும் உண்ணுவது இல்லை.

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை

பருவந்து பாழ்படுதல் இன்று. (83)

ந, ஒவ்வொரு காலையும் விருந்தை எதிர்பார்ப்பவர் வாழ்க்கை பருவகால மாற்றத்தால் பாதிப்பது இல்லை.

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து

நல்விருந்து ஓம்புவான் இல். (84)

ச, உள்ளே இருந்து எதையும் செய்யவிடாமல் தடுக்கும் சோம்பல்

முகமலர்ச்சியுடன் விருந்தை கவனிப்பவர்களை அணுகாது.

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி

மிச்சில் மிசைவான் புலம். (85)

ரு, விதை இட வேண்டுமோ விருந்து படைத்து இன்பமுடன் மிச்சத்தை விரும்பும் மனிதர் நிலத்தில்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்வருந்து வானத் தவர்க்கு. (86)

சூ, செல்லும் விருந்தினரை வழி அனுப்பி வரும் விருந்துக்கு

எதிர்பார்ப்பவரை தெய்வீகமானவர்கள் ஆசீர்வதிப்பார்கள்.

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்

துணைத்துணை வேள்விப் பயன். (87)

எ, தன்னை விட தனக்கு துணை ஒன்று இல்லை. விருந்தின் பயன் வேள்வி பயன் போல் துணையாக இருக்கும்.

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி

வேள்வி தலைப்படா தார். (88)

அ, போதனையால் பற்றை விட்டோம் என்பார்கள் விருந்து படைக்கும் வேள்வி செய்ய முற்படாதர்வர்கள்.

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா

மடமை மடவார்கண் உண்டு. (89)

கூ, அடைந்தவைகளில் விருந்து உபசரிப்பதைபோல் இல்லை. சிறுபுத்தி உள்ளவர்களிடம் உபசரிக்காத மடத்தனம் உண்டு.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து. (90)

கಂ, முகர்ந்தாலே வாடும் அனிச்ச மலர்போல் முகத்தை திரித்து

உபசரித்தால் வீணாகி விடும் விருந்து.

அதிகார விளக்கம்!

விவசாயத்தை தொழிலாக கொண்டதால் விருந்து என்பது தோன்றியது. உயிர் காக்கும் மருத்தாக இருப்பினும் விருந்துடன் பகிர்ந்து கொள்வதே சிறப்பானது. விருந்தை எதிர்பார்ப்பவர் வறுமைக்கு ஆட்படமாட்டார். வேள்வியை விட சிறந்த விருந்தோம்பல் மென்மையானது.

காணொளி:-

https://youtu.be/AZzC2ogGloc

## அறத்துப்பால் | இல்லறவியல் | கಂ, இனியவை கூறல் (10)

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்

செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். (91)

க, மகிழ்வான வார்த்தையால் ஈரம் பெருகும், பொய்மை இன்றி உண்மையை அறிந்தவர்களின் வாய் சொல்.

அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து

இன்சொலன் ஆகப் பெறின். (92)

உ, உள்முகமாக இருந்து செய்யும் செயல்களில் நல்லது, முக மலர்ச்சியுடன் இனிய வார்த்தைகள் சொல்லுவது.

முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்

இன்சொ லினதே அறம். (93)

ங, முகத்திற்கு நேராக அமர்ந்து இனிமையாக பார்த்து

உள்ளத்திலிருந்து இனிய வார்த்தைகளை தருவதே அறம்.

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்

இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. (94)

ச, துன்புறுவதும் துவண்டு விடுவதும் இல்லாமல் போகும் யாரும்

இன்பமடையும் இனிய சொல் பேசுபவருக்கு.

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு

அணியல்ல மற்றுப் பிற. (95)

ரு, பணிவானவனாகவும் இனிமையான சொல்லை பேசுபவனாகவும் மாறுவதே ஒருவருக்கு சிறந்த அணிகலன். மற்றவைகள் இதுபோன்றவை அல்ல.

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை

நாடி இனிய சொலின். (96)

சு, தீமைகள் அழிந்து நன்மை பெருகும் நல்லது எது என்று

தேடி இனிமையான வார்த்தைகள் பேசினால்.

நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று

பண்பின் தலைப்பிரியாச் சொல். (97)

எ, நன்மை தரும் நன்றிவுணர்வும் கொடுக்கும், பயன்கருதி பக்குவமாய் பேசப்படும் வார்த்தை.

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்

இம்மையும் இன்பம் தரும். (98)

அ, குழந்தைத் தனமற்ற இனிய வார்த்தை நாளையும் இன்றும் இன்பம் தரும்.

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ

வன்சொல் வழங்கு வது. (99)

கூ, இனிய வார்த்தைகளால் இன்பம் காண்பவன் எதற்காக வன்மையான

வார்த்தைகளை வழங்குவது.

இனிய உளவாக இன்னாத கூறல்

கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. (100)

க௦, இனிமையானது இருக்கும் பொழுது இனிமையின்றி கூறுவது கனி இருக்க காய் பறிப்பது போன்றது.

அதிகார விளக்கம்!

செம்பொருள் கண்டவர் வார்த்தைகள் கண்கள்ஈரம் வழிய செய்யும், உள்ளத்தை பொருத்தே கொடுக்கும் அளவு இருக்கும் முக மலர்ச்சி பொருத்தே வார்த்தை பொருள்படும்.

காணொளி:-

https://youtu.be/--BbUSjKA0k

## அறத்துப்பால் | இல்லறவியல் | க க, செய்நன்றி அறிதல் (11)

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்

வானகமும் ஆற்றல் அரிது. (101)

க, செய்கிறோம் என்று அறியாமலேயே செய்த உதவியானது பூமியும் வானமும் வழங்குவதை விட மேலானது.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது. (102)

உ, சரியான நேரத்தில் செய்த உதவி சிறியதாக இருப்பினும் அதுவே உலகத்தின் மிகப் பெரியது.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்

நன்மை கடலின் பெரிது. (103)

ங, பயன் கருதி செய்யாமல் செய்த உதவியை எண்ணிப் பார்ப்பதின் நன்மை கடலை விட பெரியது.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்

கொள்வர் பயன்தெரி வார். (104)

ச, தினையளவு துணையாக நன்றி செய்தலும் பனையளவு துணையாக

ஏற்பார்கள் நன்றியின் பயன் தெரிந்தவர்கள்.

உதவி வரைத்தன்று உதவி உதவி

செயப்பட்டார் சால்பின் வரைத்து. (105)

ரு, உதவுவது வரையறை செய்யாமல் உதவுவது, உதவியின் தன்மை

செய்பவரின் நிலையைப் பொறுத்து அமைகிறது.

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க

துன்பத்துள் துப்பாயார் நட்பு. (106)

சு, மறக்கவேண்டாம் மாசற்றவர்களின் உறவை, துறக்க வேண்டாம்

துன்பத்துடன் இருக்கையில் விலக நினைக்காதவர் நட்பை.

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்

விழுமந் துடைத்தவர் நட்பு. (107)

எ, தோன்றும் அடுத்த பிறப்புக்கும் எண்ணுவர் தனக்கு வந்த

துன்பத்தை அழித்தவரின் நட்பை.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று. (108)

அ, பெற்ற உதவியை மறப்பது பெருமையல்ல. நமக்கு

செய்த தீங்கை உடனே மறப்பது நல்லது.

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த

ஒன்றுநன்று உள்ளக் கெடும். (108)

கூ, கொல்வதை போன்ற துன்பம் செய்தாலும் அவர் செய்த நன்மை ஒன்றை நினைக்க துன்பம் மறையும்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (110)

கo, எந்த உதவியை மறந்தவருக்கும் முக்தி உண்டு. முக்தி இல்லை தான்பெற்ற உதவியை மறந்தவருக்கு.

அதிகார விளக்கம்!

உதவுகிறோம் என்ற நினைப்பு இல்லாமல் உதவுவதே ஆனந்தம். அது இந்த வானத்தையும், பூமியையும் விட மிகப் பெரியது. பிறர் நமக்கு செய்த துன்பத்தை விட நன்மை சிறிது செய்திருந்தாலும் அதை எண்ணிப் பார்ப்பதே நமக்கு நல்லது. பெற்ற உதவியை மறப்பவர் உய்வு அடைய முடியாது.

காணொளி:-

https://youtu.be/81jm5el7Nfw

## அறத்துப்பால் | இல்லறவியல் | க உ, நடுவு நிலைமை (12)

தகுதி எனவொன்று நன்றே பகுதியால்

பாற்பட்டு ஒழுகப் பெறின். (111)

க, தகுதி என்ற ஒன்று நல்லது அது பிரித்துப் பார்க்காமல் எல்லாரிடமும் ஒன்றாக பழுக்கும் தன்மை பெற்றதால்.

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி

எச்சத்திற் கேமாப்பு உடைத்து. (112)

உ, சிறப்பு பொருந்தியவன் செயல்கள் வீணாகாமல், வளரும் சந்ததிக்கும் தனிச்சிறப்பு உடையதாய் இருக்கும்.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை

அன்றே ஒழிய விடல். (113)

ந, நன்மை தருவதாக இருப்பினும் நடுநிலை தவறிய செயல்களை உடனே ஒழித்து விட வேண்டும்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தாற் காணப்ப படும். (114)

ச, தகுதி உடையவர் தகுதி அற்றவர் என்பது அவர் விட்டுச் செல்லும் உடல் மற்றும் படைப்புகளில் காணப்படும்.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்

கோடாமை சான்றோர்க் கணி. (115)

டு, கெடுவதும் பெருகுவதும் இல்லாமல் இருக்காது மனசாட்சிக்கு மாறுபாடு அற்று இருப்பதே உதாரணமாக வாழ்பவருக்கு அழகு.

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்

நடுவொரீஇ அல்ல செயின். (116)

கூ, கெடப்போகிறேன் நான் என்பதை அறியட்டும் நெஞ்சம் நடுநிலை தவறியதை செய்தால்.

கெடுவாக வையாது உலகம் நடுவாக

நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. (117)

எ, கெடுதலாக குறைத்து பேசாது உலகம், நடுநிலையோடு நன்றியுணர்வு கொண்டவனின் வறுமையை.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்

கோடாமை சான்றோர்க் கணி. (118)

அ, சமமாக செய்து சரியாக தூக்கும் கோல் போல இருந்து யாதொரு பக்கமும் துக்கம் தராமல் இருப்பது உதாரணமாக வாழும் மனிதர்களுக்கு அழகு.

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா

உட்கோட்டம் இன்மை பெறின். (119)

கூ, வார்த்தை எல்லை இல்லாத சிறப்பு ஒரு பக்கமாக உள் எல்லை இல்லாமல் இருந்தால் வரும்.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்

பிறவும் தமபோல் செயின். (120)

கo, வியாபாரம் செய்பவருக்கு (வாங்குபவர்களுக்கு) வியாபாரம் செய்து (விற்று) பிற யாவற்றையும் தமக்கு உண்டானதை போல் செய்ய வேண்டும்.

அதிகார விளக்கம்!

அவர் இவர் என்று பாரபட்சம் பார்க்காமல் இருப்பதே தகுதி. அப்படி வாழ்பவரே தக்கார் அதை அவரது எச்சமாகிப் போன உடல் காட்டிவிடும். கேடும் பெருக்கமும் நிலைத்தவை இல்லை என்று அறிந்தவரே சான்றோர். தன்னைப் போல் பிறரை எண்ணும் தன்மையே அவருக்கு அணிகலனாக அமையும்.

காணொளி:-

https://youtu.be/Ty0VDaNRjpA

## அறத்துப்பால் | இல்லறவியல் | க ந, அடக்கம் உடமை (13)

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை

ஆரிருள் உய்த்து விடும். (121)

க, பணிவு தெயவீகமானவர்களுடன் சேர்க்கும், பணிவற்ற தன்மை மீளமுடியாத இருட்டில் சேர்த்து விடும்.

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்

அதனினூஉங் கில்லை உயிர்க்கு. (122)

உ, பொருளாக இல்லாத அடக்கத்தை பாதுகாக்க வேண்டும். அதன் பயனை விட சிறந்தது இல்லை உயிருக்கு.

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து

ஆற்றின் அடங்கப் பெறின். (123)

ந, திறன் அறியப்பட்டு நன்மைகள் விளையும், அறிய வேண்டியதை அறிந்து செயல்பட்டு அடக்கமாக இருந்தால்.

நிலையின் திரியாது அடங்கி யான் தோற்றம்

மலையினும் மாணப் பெரிது. (124)

ச, இருப்புத் தன்மையை மாற்றிக் கொள்ளாமல் அடக்கம் அடைந்தவரின் வெளிப்பாடுகள் மலையை விட பெரியது.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்

செல்வர்க்கே செல்வம் தகைத்து. (125)

ரு, எல்லாருக்கும் நல்லது பணிதல், அப்படியானவர்களின் மனம் செல்வந்தருக்கும் செல்வம் தர வல்லது.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்

எழுமையும் ஏமாப் புடைத்து. (126)

சூ, ஒன்றில் மட்டும் ஆமைப் போல் ஐந்து புலன்களையும் அடக்க செய்தால் எழுந்து செயல்படும் பொழுதெல்லாம் காவலாக இருக்கும்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்

சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (127)

எ, எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும், இல்லையென்றால் சோகத்தைக் காக்க நேரிடும் சொல் குற்றம் ஏற்பட்டு.

ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்

நன்றாகா தாகி விடும். (128)

அ, ஒரே ஒரு தீமையான சொல் அதன் அர்த்தம் விளங்கும் பொழுது நன்மைகள் தாராது போகும்.

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட வடு. (129)

கூ, தீ பட்ட காயம் ஆறிப்போகும், நாவில் திட்டிய காயம் வடுவாக மாறும்.

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி

அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. (130)

க௦, முடிவை முன்னிறுத்தி கற்று அடங்கி நடப்பவன் இடத்தில் அறமும் வழி பார்த்து நுழையும்.

அதிகார விளக்கம்!

தெய்வீகமானவர்களுடன் சேர்க்கும் அடக்கத்தை அதன் செறிவு அறிந்து காக்க வேண்டும் அவர் மலையை விட பெரியவராய் கருதப்படுவார். வாய்ச்சொல் தவறிவிடாதபடி காப்பதே அவசியம் காரணம் தீ ஏற்படுத்தும் காயத்தைவிட பெரிய காயத்தை உண்டாக்கிவிடும். முழுமையாக கற்று அறிந்தவர் பணிதலுடன் வாழ்வார்.

காணொளி:-

https://youtu.be/Mh3eEX15C_I

## அறத்துப்பால் | இல்லறவியல் | க ச, ஒழுக்கமுடைமை (14)

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும். (131)

க, சுயமுன்னேற்றத்திற்கான வரைமுறையால் சுயத்தை அறியலாம் சுயமுன்னேற்றத்திற்கான வரைமுறை உயிரை விட சிறந்ததாக காக்க வேண்டும்.

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்

தேரினும் அஃதே துணை. (132)

உ, விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டும் சுயமுன்னேற்றதிற்கான வரைமுறையை புரிந்து கொண்டு நடப்பவருக்கும் அதுவே துணையாக இருக்கிறது.

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்

இழிந்த பிறப்பாய் விடும் (133)

ங, ஒழுக்கத்தின் வெளிப்பாடே குடும்பம், இழுக்கம் பிறப்பையே அசிங்கப் படுத்தி விடும்.

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்

பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். (134)

ச, பார்ப்பவனுக்கு நினைவிழந்து போனாலும் ஏற்றுக் கொள்ளலாம், பிறப்பொழுக்கம் அற்றுப் போனால் ஏற்றுக் கொள்ளமுடியாது.

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை

ஒழுக்க மிலான்கண் உயர்வு. (135)

ரு, அழுக்கு மனம் உள்ளவனின் வளர்ச்சி இல்லா தன்மைப்போல் ஒழுக்கம் இல்லாதவனுக்கு வளர்ச்சி இல்லை.

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்

ஏதம் படுபாக் கறிந்து. (136)

சு, ஒழுக்கத்தில் தவறாதவர்கள் உயர்ந்தவர்கள், அவர்கள் இழுக்கத்தின் அவல நிலை அறிந்து உள்ளார்கள்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்

எய்துவர் எய்தாப் பழி. (137)

எ, ஒழுக்கத்தால் உன்னதமான நிலையை அடைவார்கள், இழுக்கத்தால் இதுவரை இல்லாத பழி வரும்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்

என்றும் இடும்பை தரும். (138)

அ, நன்றியுணர்வுக்கு விதையாக நல்லொழுக்கம் அமையும், தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தை தரும்.

ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய

வழுக்கியும் வாயாற் சொலல். (139)

கூ, ஒழுக்கமானவர்கள் தீமையானவற்றை தவறியும் வாயில்கூட சொல்லுவது இல்லை.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்

கல்லார் அறிவிலா தார். (140)

கo, உலக மனிதர்களுடன் ஒத்திசைவு கொள்ள கற்காதவர் பல துறை அறிவு பெற்றும் அறிவில்லாதவரே.

அதிகார விளக்கம்!

வாழ்தலுக்கான வரைமுறையே ஒழுக்கம் அது வீடுபெறு அடைய உதவும் என்பதால் உயிரைவிட போற்றவேண்டும். ஒழுக்கத்தின் வெளிப்பாடே குடும்பம். நல்லொழுக்கம் என்பதே நன்றியுணர்வுடன் இருப்பது. அதிலும் உலகத்துடன் ஒத்திசையும் படி நடப்பவர் கற்று அறிந்தவர்.

காணொளி:-

https://youtu.be/ZtQHsj9p9tc

## அறத்துப்பால் | இல்லறவியல் | க ரு, பிறன்இல் விழையாமை (15)

பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து

அறம்பொருள் கண்டார்கண் இல். (141)

க, அடுத்தவர் பொருளையே பயன்படுத்திக் கொள்ளும் அறியாமை அறிவினால் நேர்மையின் பொருள் அறிந்தவரிடத்தில் இல்லை.

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை

நின்றாரின் பேதையார் இல். (142)

உ, அறம் கடந்து இருப்பவர்களைக் காட்டிலும் பிறரை சார்ந்து நிற்கும் அறிவிலிகள் இல்லை.

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்

தீமை புரிந்துதொழுகு வார். (143)

ங, ஏசப்படவேண்டியவர் வேறு ஒருவர் இல்லை நன்கு அறிந்தவருக்கு தீமை செய்து பழுகுபவரைத் தவிர.

எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்

தேரான் பிறனில் புகல். (144)

ச, எத்தனை துணைகளை பெற்றிருந்தால் என்ன, தினையளவு தேர முடியாது அடுத்தவர் பொருள் மேல் பற்றுகொண்டால்.

எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்

விளியாது நிற்கும் பழி. (145)

ரு, எளிதாக இருக்கிறது என்று இல்லத்தை துறப்பவன் எய்தும் ஒன்று அழியாது இருக்கும் பழி மட்டுமே.

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்

இகவாவாம் இல்லிறப்பான் கண். (146)

சூ, பகை, பாவம், பயம், பழி என்ற நான்கும் பிரியாமல் இருக்கும் இல்லறத்தை துறந்தவன் இடத்தில்.

அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்

பெண்மை நயவா தவன். (147)

எ, உண்மையான குடும்பத்தான் என்பவன் பிறருக்கு உரிமையான பெண்ணை நாடதவனாக இருப்பான்.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு

அறனொன்றோ ஆன்ற வொழுக்கு. (148)

அ, அடுத்த வீட்டை ஆராயாத ஆண்மையே முன்மாதிரியாக வாழும் மனிதர்க்கு அறமும் நல்ல ஒழுக்கமும் ஆகும்.

நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்

பிறர்க்குரியாள் தோள்தோயா தார். (149)

கூ, நலமுடன் இருக்க உரியவர் யாரென்றால் தங்கும் உடல் நீரை அடுத்தவருக்கு உரிமையானவளின் தோல் தொட்டு தராதவர்.

அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்

பெண்மை நயவாமை நன்று. (150)

கo, அறமாக வரையறுத்தவைக்கு எதிராக செய்தாலும் பிறருக்காக வரையறுக்கப் பட்டவளின் பெண்மையை நாடாததே நன்று.

அதிகார விளக்கம்!

அடுத்தவரின் பொருள்களை பயன்படுத்திக் கொள்வது அறம் என்றால் என்ன என்று அறிந்தவர்கள் செய்வதில்லை. பகை, பாவம், பழி, பயமும் அற்றவர் இல்லறத்தார் ஆவர். அவர் அடுத்தவர் குடும்ப வாழ்வை சிதைக்க காரணமாக இருக்க மாட்டார்.

காணொளி:-

https://youtu.be/1IeE0XBKFJQ

## அறத்துப்பால் | இல்லறவியல் | க சு, பொறை உடைமை (16)

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (151)

க, தோண்டுபவரையும் தாங்கும் பூமியைப் போல் தன்னை தரக்குறைவாய் பேசுபவரையும் பொருத்துக் கொள்வதே தலை சிறந்தது.

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை

மறத்தல் அதனினும் நன்று. (152)

உ, மரணம் வரை பொறுத்துக் கொள்வதைக் காட்டிலும் அதனை மறந்து விடுவதே நன்று.

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்

வன்மை மடவார்ப் பொறை. (153)

ங, இன்னலில் இன்னல் விருந்தை கவனிக்க முடியாமை, வலிமையில் வலிமை மடையர்களை பொறுத்தல்.

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை

போற்றி ஒழுகப் படும். (154)

ச, நிறைவுத் தன்மை நீங்காமல் இருக்க பொறுமையை போற்றி ஏற்று நடக்க வேண்டும்.

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்

பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. (155)

ரு, பொறுக்காதவரை ஒரு பொருட்டாக நினைப்பது இல்லை, பொறுத்துக் கொள்பவரை பொன் போல் போற்றுவார்கள்.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்

பொன்றுந் துணையும் புகழ். (156)

௬, பொறுக்காதவருக்கு ஒரு நாள் கிடைக்கும் இன்பம் பொறுத்தவருக்கு துணையாகவும் போற்றும் புகழாகவும் இருக்கும்.

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து

அறனல்ல செய்யாமை நன்று. (157)

௭, திறன் இல்லாதவற்றை பிறர் செய்தாலும் துன்பப்பட்டு அறம் அற்றவைகளை செய்யாததே நன்று.

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்

தகுதியான் வென்று விடல். (158)

௮, மிகைப் படுத்தி துன்பம் செய்தவரை நாம் நமது தகுதியால் வென்று விடலாம்.

துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்

இன்னாச்சொல் நோற்கிற் பவர். (159)

௯, துறவியை விட தூய்மையானவர் தீய சொற்களை பேசுபவரை இறந்தவர் வாய் பேச்சு என்று பார்ப்பவர்.

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்

இன்னாச்சொல் நோற்பாரின் பின். (160)

௧௦, உண்ணா நோன்பு இருக்கும் பெரியவர்களும், பிறர் சொல்லும் இழிவான சொல்லை அலட்சியம் செய்பவருக்கு பின்தான்.

அதிகார விளக்கம்!

பொறுத்துக் கொள்ளும் பண்பு அவசியம் தன்னை வெட்டும் மனிதனையும் தாங்கும் பூமித் தாய் போல் வாழ் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. நமது தகுதியால் அடுத்தவர் தவிர்க்கப்படுவார் மேலும், அடுத்தவரின் அசட்டுத்துத் தனமான வார்த்தைக்கு மதிப்பளிக்காதவரே நோன்பில் சிறந்தவர்.

காணொளி:-

https://youtu.be/HZntrq1YO8c

## அறத்துப்பால் | இல்லறவியல் | க எ, அழுக்காறாமை (17)

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து

அழுக்காறு இலாத இயல்பு. (161)

க, ஒழுக்கம் மாறாது இருக்க ஒருவர் தன் மனதில் பொறாமை அற்ற இயல்பை பெறவேண்டும்.

விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்

அழுக்காற்றின் அன்மை பெறின். (162)

உ, விரும்ப வேண்டியதில் நிகரானது இல்லை யாரிடத்திலும் பொறாமைபெறா நிலையை பெற்றால்.

அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்

பேணாது அழுக்கறுப் பான். (163)

ந, அறச் செயல்கள் தேவையற்றது என்பவர்கள் பிறச் செயல்களையும் செய்யாமல் அழுக்கற்றுப் போவார்கள்.

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்

ஏதம் படுபாக்கு அறிந்து. (164)

ச, அழுக்கு மனதுடன் (பொறாமை) தேவையற்றதை செய்யமாட்டார்கள் இழிவான குணத்தால் ஏற்படும் துன்பத்தை அறிந்து.

அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்

வழுக்காயும் கேடீன் பது. (165)

ரு, அழுக்கு மனம் (பொறாமை) உடையவர்கள் அதை சார்ந்து இருக்கமாட்டார்கள் வழக்காக மாறும் துன்பம் அது என்பதால்.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்

உண்பதூஉம் இன்றிக் கெடும். (166)

சு, கொடுப்பதை பொறாமையால் தடுப்பவன் உறவுகளும், உடுப்பதும், உண்ணுவதும் இல்லாமல் கெட்டு போகும்.

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்

தவ்வையைக் காட்டி விடும். (167)

எ, ஆர்வமுடன் அழுக்கு மனம் (பொறாமை) உடையவனை செயல்களின் நாயாகி தன் ஆற்றலை காட்டி விடும்.

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்

தீயுழி உய்த்து விடும். (168)

அ, அழுக்கு மனம் (பொறாமை) என்ற பாவச்செயல் திருவை தீய வழியில் தள்ளி விடும்.

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்

கேடும் நினைக்கப் படும். (169)

கூ, அழுக்கான நெஞ்சம் கொண்டவரின் செயல்களும், செம்மையானவரின் அழிவும் நினைக்கப் படும்.

அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃதுஇல்லார்

பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல். (170)

கo, அழுக்கு மனம் அற்றவரை உலகம் அகற்றிவிடுவது இல்லை, அழுக்கு மனம் உள்ளவர் எவ்வளவு அடைந்தாலும் நிறைவடைவது இல்லை.

அதிகார விளக்கம்!

பொறாமை இல்லாதவரே ஒழுக்கமானவர், பகைவர் தரும் அழிவைவிட பொறாமை தந்துவிடும். பொறாமையுள்ளவர் பிறவி மூப்போ, பொருள்களினால் நிறைவோ அடையமாட்டார்கள்.

காணொளி:-

https://youtu.be/--xEyZdPtbY

## அறத்துப்பால் | இல்லறவியல் | கஅ, வெஃகாமை (18)

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்

குற்றமும் ஆங்கே தரும். (171)

க, நடுநிலை தவறி நல்ல பொருள் என்று வேட்கை கொண்டால் குடும்ப ஒழுக்கம் கெட்டு குற்ற உணர்வும் தந்து விடும்.

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்

நடுவன்மை நாணு பவர். (172)

உ, பயன்பாடு கருதி வேட்கை கொண்டு பழிக்கப்படுவதை செய்யமாட்டார்கள் நடுநிலைக்கு அஞ்சும் நபர்கள்.

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே

மற்றின்பம் வேண்டு பவர். (173)

ந, சிறிய இன்பத்திற்காக வேட்கை கொண்டு நீதியற்றதை செய்யமாட்டார்கள் மாறாத இன்பம் நாடுபவர்கள்.

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற

புன்மையில் காட்சி யவர். (174)

ச, இல்லாமை அடைந்தோம் என்று வேட்கை கொள்ள மாட்டார்கள் புலன்களை வென்ற மனித இனத்தில் பார்க்க வேண்டியவர்கள்.

அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்

வெஃகி வெறிய செயின். (175)

ரு, புரிதல் அற்ற (மனச் சிதைவு) அறிவாகிவிடும் யாராக இருப்பினும் வேட்கை கொண்டு வெறியுடன் நடந்தால்.

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்

பொல்லாத சூழக் கெடும். (176)

சு, அருள் நாடி வேட்கை கொண்டு ஒழுக்க வழி நின்றவர் பொருள் மீது வேட்கை கொண்டால் பொல்லாப்பு வந்து அருள் வாழ்வு அழியும்.

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்

மாண்டற் கரிதாம் பயன். (177)

எ, விரும்ப வேண்டாம் வேட்கையால் வருவதை, அதன் விளைவோ மரணித்தவர் அடைந்த பயன் போன்றது.

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை

வேண்டும் பிறன்கைப் பொருள். (178)

அ, அழியாமை செல்வத்திற்கு எதுவென்றால், வேட்கை கொள்ளாமை வேண்டும் பிறர் பயன்படுத்தும் பொருளின் மீது.

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்

திறன்அறிந் தாங்கே திரு. (179)

கூ, நீதியை அறிந்து வேட்கையை விட்ட அறிவுடையவரின் திறமையை அறிந்து உயர்வு வந்து சேரும்.

இறலீனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்

வேண்டாமை என்னுஞ் செருக்கு. (180)

கம, கேட்டை விளைவிக்கும் என்று எண்ணவேண்டாம் வேட்கையை, வெற்றியை விளைவிக்கும் வேண்டுதல் அற்ற மனமகிழ்ச்சி.

அதிகார விளக்கம்!

நடுநிலையற்ற வேட்கை நல்லதல்ல. பேரின்ப வீட்டுற்கு அது தடையாக இருக்கிறது. ஆக்கப்பூர்வமான செயல்களுக்கு வேட்கை அவசியம் என்றாலும் அடுத்தவரின் பொருள் மேல் ஆர்வம் கொள்ளுதல் கூடாது. வேட்கையை விட வேண்டாம் என்ற செருக்கு இன்பம் தரும்.

காணொளி:-

https://youtu.be/yzpl7xBvUt8

## அறத்துப்பால் | இல்லறவியல் | கக, புறங்கூறாமை (19)

அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்

புறம்கூறான் என்றல் இனிது. (181)

க, நீதியை பேசாமல் தேவையற்றதை செய்யும் ஒருவன் அடுத்தவரை பற்றி அவதூறு பேசாமல் (புறம்கூறாமை) இருந்தால் இனிமையானது.

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே

புறனழீஇப் பொய்த்து நகை. (182)

உ, அறம் அற்றதும் தேவையற்றதும் செய்வதை விட தீதானது புறம் பேசி பொய்யாக நகைப்பது.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்

அறங்கூறும் ஆக்கத் தரும். (183)

ந, புறம் பேசி பொய்யாக உயிர் வாழ்வதை விட மரணிப்பதே அறம் கூறும் நன்மையை தரும்.

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க

முன்னின்று பின்நோக்காச் சொல். (184)

ச, கண் எதிரே நின்று கண்ணை பார்த்து சொன்னாலும், சொல்லாக்கூடாது பின்விளைவுகளை முன்னே ஆராயாத சொல்லை.

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்

புன்மையாற் காணப் படும். (185)

ரு, அறம் பேசும் மனித மனத்தின் தன்மையை புறம் பேசும் தன்மையால் கண்டு கொள்ளலாம்.

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்

திறன்தெரிந்து கூறப் படும். (186)

சு, பிறரை பழித்து பேசுபவர் தன்னை பழிப்பதற்க்கான காரணத்தையும் திறமையுடன் அறிந்து கூற வேண்டும்.

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி

நட்பாடல் தேற்றா தவர். (187)

எ, குறை சொல்லி உறவை பிரிப்பார்கள் நிறை சொல்லி நட்பை வளர்க்க இயலாதவர்கள்.

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்

என்னைகொல் ஏதிலார் மாட்டு. (188)

அ, நெருக்கமானவர் குற்றத்தை பரப்பும் பழக்கமுடையவர்கள், அறியாதார் பற்றி என்னவெல்லாம் செய்வார்களோ.

அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்

புன்சொல் உரைப்பான் பொறை. (189)

கூ, நீதியின் பொருட்டு வழிமுறைப் படுத்துகிறதோ உலகம் இடம் பார்த்து புறம் பேசுபவரையும் பொறுமையால்.

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்

தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. (190)

கo, யாரோ ஒருவர் குறையை போல் தனது குறைகளை கண்டப் பின்பு கெடுதல் வருமோ புரிந்துகொள்ளும் உயிர்க்கு.

அதிகார விளக்கம்!

அறமற்று தேவையற்றதை செய்பவரும் புறங்கூறாது இருப்பது நல்லது. புறம் பேசி வாழ்வதைவிட இறப்பது நன்று. நேருக்கு நேர் நின்று தாங்கமுடியா வார்த்தை சொன்னாலும் பரவயில்லை பின்னாக புறம் பேசாதே. தன் குற்றத்தை நீக்க முயல்பவர் பிறரை புறம் செய்யமாட்டார். யாரோ ஒருவர் குற்றம் போல் தன் குற்றத்தை ஆராய்ந்து திருத்தினால் துன்பம் என்பது இல்லாமல் போகும்.

காணொளி:-

https://youtu.be/7sVFeD5qqPM

## அறத்துப்பால் | இல்லறவியல் | உo, பயனில சொல்லாமை (20)

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்

எல்லாரும் எள்ளப் படும். (191)

க, பல மனிதர்கள் முன்னிலையில் பயனற்றதை பேசுபவரை அனைத்து மனிதர்களும் ஏளனம் செய்வார்கள்.

பயனில பல்லார்முன் சொல்லல் நயனில

நட்டார்கண் செய்தலின் தீது. (192)

உ, பயனற்றதை பல மனிதர்கள் முன்னிலையில் சொல்வது நன்மை அற்றதை நண்பர்களுக்கு செய்வதை விட தீமையானது.

நயனிலன் என்பது சொல்லும் பயனில

பாரித் துரைக்கும் உரை. (193)

ங, நன்மை செய்பவன் இல்லை என்பதை பேசும் பொழுது பயனற்றதை விரிவாக பேசுவதே உரைத்துவிடும்.

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்

பண்பில்சொல் பல்லா ரகத்து. (194)

ச, நேர்மையற்றவை நன்மை தருவதை நீக்கிவிடும். பயன் தராது பண்பற்ற சொல் பலர் இடத்தை அடைத்தும்.

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில

நீர்மை யுடையார் சொலின். (195)

ரு, சீரும் சிறப்பும் விலகும் பயனற்ற நீர்த்து போனவர்கள் இடத்தில் சொன்னால்.

பயனில்சொல் பராட்டு வானை மகன்எனல்

மக்கட் பதடி யெனல். (196)

௬, பயன் அற்ற பேச்சை பாராட்டுபவனை குழந்தை என்பதா? குழந்தை போன்ற பதர் என்பதா?

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்

பயனில சொல்லாமை நன்று. (197)

௭, நளினமற்று சொன்னாலும் சொல்லலாம் உதாரணமாக இருப்போர் பயனற்றதை சொல்லாததே நன்று.

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்

பெரும்பயன் இல்லாத சொல். (198)

௮, அரிதான பயனை ஆராயும் அறிவுள்ளவர்கள் சொல்லமாட்டார்கள் பெரிய பயனை விளைவிக்காத சொல்லை.

பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த

மாசறு காட்சி யவர். (199)

௯, பொருள் அழிந்ததை மறந்தும் சொல்லமாட்டார்கள் அறியாமை அழிந்த மாசற்ற காட்சி போன்றவர்.

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க

சொல்லிற் பயனிலாச் சொல். (200)

௧௦, சொல்லவேண்டும் சொல்லுவதால் பயன் உண்டாகும்படி. சொல்லக்கூடாது சொல்லுவதால் பயன் உண்டாகாத சொல்லை.

அதிகார விளக்கம்!

ஏளனத்திற்கு உரிமை கொண்டாடும் பயனற்றதை பேசுபவன் மக்கள் என்பதில்லை பதர் என்றே கொள்ளலாம், பயன் தராதவற்றை பெரியவர்கள் எப்பொழுதும் உரைப்பதில்லை. ஐயமற அறிந்தவர்கள் தேவையற்றதை சொல்லுவதில்லை.

காணொளி:-

https://youtu.be/UGZKSxYEA-4

## அறத்துப்பால் | இல்லறவியல் | ௨ ௧, தீவினை அச்சம் (21)

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்

தீவினை என்னும் செருக்கு. (201)

௧, கேடுசெய்பவர் அஞ்சுவது இல்லை வாழ்வை நேசிப்பவர் அஞ்சுவார்கள் தீய வினை என்ற அகங்காரத்திற்கு.

தீயவை தீய பயத்தலால் தீயவை

தீயினும் அஞ்சப் படும். (202)

௨, கெடுதல் கெடுதலை உண்டாக்குவதால் கெடுதல் நெருப்பை விட அஞ்சப்படும். (குறிப்பு ;- நெருப்பு மேலும் நெருப்பை உண்டாக்க வல்லது)

அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய

செறுவார்க்கும் செய்யா விடல். (203)

௩, அறியவேண்டியதில் எல்லாம் முதன்மையானது தீயதை செய்தவர்க்கும் செய்யாது விடுவது.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்

அறஞ்சூழம் சூழ்ந்தவன் கேடு. (204)

ச, நினைவு அற்ற நிலையிலும் பிறருக்கு கெடுதல் ஏற்படுத்தாதே. ஏற்படுத்தினால் அறம் ஏற்படுத்தும் ஏற்படுத்தியவனுக்கு கெடுதலை.

இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்

இலனாகும் மற்றும் பெயர்த்து. (205)

ரு, இல்லை என்று கெடுதலை செய்யவேண்டாம், செய்தால் இல்லாமல் போகும் மற்றவைகளும் வேறுபட்டு.

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால

தன்னை அடல்வேண்டா தான். (206)

சு, கெடுதல் பல பிறருக்கு செய்யக்கூடாது, நோய் பல தனக்கு வரக்கூடாது என்று நினைப்பவர்.

எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை

வீயாது பின்சென்று அடும். (207)

எ, எந்தவித எதிர்ப்பு பெற்றவரும் உயர்வடைவார். செயலால் வரும் எதிர்ப்போ ஓயாது சென்று வீழ்த்தும்.

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை

வீயாது அடிஉறைந் தற்று. (208)

அ, கேடு செய்தவரை கெடுதல் நிழல் போல் விலகாமல் தொடரும்.

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்

துன்னற்க தீவினைப் பால். (209)

கூ, தன் மீது தனக்கே நேசம் உள்ளவனாக இருந்தால் எப்பொழுதும் அழிக்கவேண்டும் கெடுதல் சார்ந்தவைகளை.

அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்

தீவினை செய்யான் எனின். (210)

கo, அருளால் கேட்டை அடைய மாட்டன் என்று அறியவேண்டும், இயல்புக்கு மாறாக சென்று கெடுதல் செய்யவில்லை என்றால்.

அதிகார விளக்கம்!

வாழ்வை நேசிப்பவர் பகைவருக்கும் கேடு செய்ய அஞ்சுவார். தீய செயல்கள் தீமையானதையே செய்யும். தீவினைகள் நம்மை நிழல் போல் தொடரும். தன்னைத் தானே நேசிப்பவர் வீடுபெறு பெற நினைப்பவர் தீமை செய்யாது விலக வேண்டும்.

காணொளி:-

https://youtu.be/L4e_MJlFFkc

## அறத்துப்பால் | இல்லறவியல் | உ உ, ஒப்புரவு அறிதல் (22)

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு

என்ஆற்றுங் கொல்லோ உலகு. (211)

க, மாற்றுப்பொருள் வேண்டாத கண்ணியம் மழைக்கு என்று நெறிப்படுத்திக் கொள்ளுமோ உலகம்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு

வேளாண்மை செய்தற் பொருட்டு. (212)

உ, ஊக்கமுடன் கொடுத்த பொருள்கள் யாவும் தகுதியுடையவருக்கு உபகாரம் செய்திட வேண்டியே.

புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே

ஒப்புரவின் நல்ல பிற. (213)

ந, புதிய உலகத்திற்கும் இப்போது உள்ளதற்கும் பெற அரிதானது, மற்ற நன்மைகளில் ஒத்திசைவுக் கொள்வதே.

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்

செத்தாருள் வைக்கப் படும். (214)

ச, பொதுவான அறம் போற்றுவான் உயிர் வாழ்பவன். மற்றவர்கள் மரித்தவர்கள் கணக்கில் வைக்கப்படும்.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்

பேரறி வாளன் திரு. (215)

ரு, ஊர் குளம் நீரால் நிறைந்து பயன் தருவதைப்போலவே உலகத்திற்கு உயர் ஞானம் பெற்றவர்களின் உயர்வு உள்ளது.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்

நயனுடை யான்கண் படின். (216)

சு, பயன் தரும் மரம் இருக்கும் ஊரில் பழுத்து பயன் தருவதைப் போன்றே செல்வம் நல்ல அறிவு உள்ளவருக்கு கிடைப்பது.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்

பெருந்தகை யான்கண் படின். (217)

எ, மருந்தாக இருந்து தவறு இழைக்காத மரத்தை போன்றது செல்வம் பெருமை பல உள்ளவரிடம் கிடைப்பது.

இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்

கடனறி காட்சி யவர். (218)

அ, இடர் ஏற்படும் காலத்திலும் உதவ தயங்காதவர் கட்டாயம்

பார்க்க வேண்டியவர்.

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர

செய்யாது அமைகலா வாறு. (219)

கூ, நற்சிந்தை உள்ளவன் நீண்ட அமைதியடைவது செய்ய வேண்டியதை செய்யமுடியாத சூழல் அமையும் பொழுதே.

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்

விற்றுக்கோள் தக்க துடைத்து. (220)

கo, அடுத்தவர் வாழ வேண்டும் என்ற பண்பினால் வரும் கேடு என்னவென்றால், அது ஒருவர் விற்றுக்கோள் என்று தனக்கு அவசியமானதையும் கொடுப்பது.

அதிகார விளக்கம்!

எதிர்பார்ப்பு இல்லாத மழைப் போல் உதவிட முனைதல் வேண்டும். தகுதியானவற்கு உதவுதல் போன்ற சிறந்த செயல் இல்லை. இடர்பட்ட காலத்திலும் உதவும் ஒருவர் காணக்கூடிய தெய்வம். யாவரும் வாழ நினைக்கும் நல்ல மனிதர்கள் மட்டுமே உயிர் வாழும் மனிதர்கள் மற்றவர்கள் இறந்தவர்கள் கணக்கில் வைக்க வேண்டும்.

காணொளி:-

https://youtu.be/obB2CETNvoc

## அறத்துப்பால் | இல்லறவியல் | உங, ஈகை (23)

வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்

குறியெதிர்ப்பை நீர துடைத்து. (221)

க, வளமற்றவர்களுக்கு உதவுவதே உதவி மற்றவை எல்லாம் குறிப்பறிந்து மீண்டும் பெரும் தன்மை உடையது.

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்

இல்லெனினும் ஈதலே நன்று. (222)

உ, நல்ல நதி என்றாலும் மூழ்கி விடுதல் கெடுதலாகும். மேல் ஒரு உலகம் (சுவர்க்கம்) இல்லை என்றாலும் கொடுப்பதே நன்மை தரும்.

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்

குலனுடையான் கண்ணே யுள. (223)

ங, இல்லை என்ற துன்பத்தை சொல்லாத தன்மை கொடுக்கும் குணம் படைத்த குடும்பத்தாருக்கே உண்டு.

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்

இன்முகங் காணும் அளவு. (224)

ச, இல்லை என்று சொல்லாமல் கொடுப்பது, கேட்பவர் முகம் மலர்ச்சி அடையும்வரை இருப்பதே அளவு.

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை

மாற்றுவார் ஆற்றலின் பின். (225)

ரு, வழிகாட்டுபவர் வழிகாட்டுவது பசிக்க வழிகாட்டுவது, அப்பசியை மாற்றிக்கொள்வார் வழிகாட்டுதலுக்குப் பின்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்

பெற்றான் பொருள்வைப் புழி. (226)

சு, இல்லாதவர்களின் அழிபசி தீர்த்துவிடுதல் ஒருவர் தான் பெற்ற பொருளை வைப்பதற்கான இடமாகும்.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்

தீப்பிணி தீண்டல் அரிது. (227)

எ, பார்த்து உன்ன மறுப்பவனை (பகிர்ந்து உன்ன நினைப்பவனை) பசி என்ற தீய நோய் தீண்டுவது கடினம்.

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை

வைத்திழக்கும் வன்க ணவர். (228)

அ, கொடுத்து உதவும் இன்பத்தை அறியமுடியுமோ தனது உடமை என்று வைத்திருந்து இழந்துவிடும் வன்மையானவர்கள்.

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய

தாமே தமியர் உணல். (229)

கூ, கேட்பதை விட கொடுமையானது தேவைக்கு அதிகமாக தன்னால் பெறப்பட்டதை தானே உண்ணுவது.

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்

ஈதல் இயையாக் கடை. (230)

கo, மரணத்தை விட கொடியது இல்லை அதுவும் இன்பமாகும் கொடுக்க முடியாத நிலை அடைந்தால்.

அதிகார விளக்கம்!

இல்லை என்ற துன்பமான சொல்லை சொல்ல மன வறுத்தம் வேண்டும். நல்ல ஆறு என்றாலும் மூழ்கினால் மரணிப்போம், சொர்க்கம் இல்லை என்றாலும் உதவி செய்து வாழ்வதே மனிதனுக்கு அழகு. நல்ல மனிதர்கள் அடுத்தவர் பசி தீர்ப்பதற்கே தான் சாம்பதித்ததை சேர்த்து வைக்கிறார்கள். ஆற்ற வேண்டிய ஒன்று உண்டு என்றால் அது அடுத்தவர் பசி ஆற்றல். பகிர்ந்து உண்பவற்கு பசிக் கொடுமை வராது. கொடுக்க முடியா சூழலைவிட மரணம் இனிமையானது.

காணொளி:-

https://youtu.be/z7umXlLlXh8

## அறத்துப்பால் | இல்லறவியல் | உச, புகழ் (24)

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு. (231)

க, கொடுப்பது, ஒத்திசைவுடன் வாழ்வது அதை விட சிறந்த ஊதியம் இல்லை உயிருக்கு.

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று

ஈவார்மேல் நிற்கும் புகழ். (232)

உ, பேசுபவர் பேசுவது எல்லாம் கேட்கப் படுபவருக்கு கொடுப்பவரின் சிறப்பை பற்றியே இருக்கும்.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்

பொன்றாது நிற்பதொன் றில். (233)

ந, ஒத்திசைவு இல்லாத உலகத்தில் பாராட்டப்படுவதைத் தவிர அழியாமல் இருப்பது வேறொன்றும் இல்லை.

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்

போற்றாது புத்தேள் உலகு. (234)

ச, பூமியில் உள்ளவரை பெரும் பாராட்டுக்குறியதை செய்தால் எழுத்தாளரைப் பாராட்டாது புதிதாக தோன்றும் உலகம்.

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்

வித்தகர்க் கல்லால் அரிது. (235)

ரு, இரவைப்போல் கேட்டதையும் நிலைப்பதற்காக மரணமும் வித்தை அறிந்தவருக்கு அல்லாமல் மற்றவருக்கு அரிது.

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று. (236)

கூ, துவங்கினால் சிறப்பாக துவங்கவேண்டும் அப்படி முடியாதவர் துவங்குவதைவிட, துவங்காமல் இருப்பதே நல்லது.

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை

இகழ்வாரை நோவது எவன். (237)

எ, சிறப்பாக வாழாதவர்கள் தன்னை கடிந்துக் கொள்ளாமல் தன்னை இழிவாக பேசுபவரை கடிந்து கொள்வதால் என்ன பயன்.

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்

எச்சம் பெறாஅ விடின். (238)

அ, குற்றம் என்பேன் உலகில் உள்ளவர்க்கெல்லாம் ஒத்திசைவு கொண்டவன் (நல்லவன்) என்ற முடிவை பெறாவிடின்.

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா

யாக்கை பொறுத்த நிலம். (239)

கூ, குற்றமற்ற சிறந்த நன்மையையும் குறையும் ஒத்திசைவு இல்லா உடம்பை பொறுத்துக்கொண்ட நிலத்திற்கு.

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய

வாழ்வாரே வாழா தவர். (240)

கo, குற்றங்கள் ஒழிய வாழ்பவரே வாழ்பவர், ஒத்திசைவு ஒழிய வாழ்பவர் வாழாதவர்.

அதிகார விளக்கம்!

கொடுப்பதும் ஒத்திசைவு கொள்ளவதுமே ஓர் உயிரின் ஊதியம். கொடுக்கும் ஒருவரை புகழ்வதே சிறந்த பேச்சாக அமையும். தன் குற்றத்தை திருத்திக் கொள்ளாமல் அடுத்தவரை கடிந்துக் கொள்வது குற்றம். புகழோடு தோன்றுவதே சரியானது. குற்றமற்றவரே வாழ்பவர்.

காணொளி:-

https://youtu.be/QZM5YGKxooI

## அறத்துப்பால் | துறவறவியல் | உ கூ, புலால் மறுத்தல் (26)

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்

எங்ஙனம் ஆளும் அருள். (251)

க, தனது உடல் பெருக்கத்திற்காக மட்டும் அடுத்த உடலை உண்ணுபவன் எப்படி அருளால் ஆளப்படுவான்.

பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி

ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. (252)

உ, பொருள்களை ஆளும் தன்மை போற்றும் அறிவு இல்லாதார்க்கு இல்லை, அருளால் ஆளப்படுவது அப்பொழுது இல்லை உடல் உண்ணுபவருக்கு.

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்

உடல்சுவை உண்டார் மனம். (253)

ந, படைகள் வைத்திருப்பவர் நெஞ்சம் போலவே நல்லதை நினைக்காது ஒன்றின் உடல் சுவையை விரும்புபவர் மனம்.

அருளல்லது யாதெனின் கொல்லாமை கோறல்

பொருளல்லது அவ்வூன் தினல். (254)

ச, அருள் அற்றது எது என்றால் உயிர்களை அழிக்காமல் இருப்பதை அழிப்பது பொருள் அற்றது அந்த உடல் உண்ணுவது.

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண

அண்ணாத்தல் செய்யாது அளறு. (255)

ரு, உண்ணாமல் இருக்கும் தன்மையுள்ளது உயிரின் நிலை, உடலை உண்ணுவதை செய்தால் வெளியேற்றுதல் செய்யாது நரகம்.

தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்

விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல். (256)

சு, உண்ணுவதன் காரணமாக பறிக்காது உலகம் என்றால் எந்த மனிதரும் விலைக் கொடுத்து உண்ணுவது முடியாது.

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்

புண்ணது உணர்வார்ப் பெறின். (257)

எ, உண்ணாது இருக்க வேண்டும் உடலை, அடுத்த ஒன்றின் புண் அது என்ற உணர்வுப் பெற்றால்.

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்

உயிரின் தலைப்பிரிந்த ஊன். (258)

அ, செயல்களில் தலைமைப் படுவதை விலகிப் பார்ப்பவர் உண்ணமாட்டார் உயிரின் தலை பிரிந்த உடலை.

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்

உயிர்செகுத் துண்ணாமை நன்று. (259)

கூ, நெய் ஊற்றி ஆயிரம் வேள்வி செய்வதிலும் ஒன்றின் உயிரை அழித்து உண்ணாமை நல்லது.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி

எல்லா உயிருந் தொழும். (260)

கo, உயிர்களை கொல்லாதவரையும் புலன்களை மறுத்தவர்களையும் எல்லா உயிரும் போற்றி வணங்கும்.

அதிகார விளக்கம்!

உடல் வளர்க்கவே உணவு என்ற எண்ணம் தவறு அருளை வளர்ப்பதே அவசியம். உணவின் மீது ஆர்வம் அதிகரித்தால் அருள் விலகும், பொருள்கள் மீது ஆர்வம் குறைந்தால் பொருள் விலகும். உணவின் சுவை படை கொண்டவர் மனநிலைப் போல் நன்மைகளை நாடாது. உயிரின் இயல்பை வளர்க்க உணவு அவசியமில்லை. உணவிற்கு விலை கொடுக்க மறுத்தால் உற்பத்தி செய்பவரும் இல்லாமல் போவர்கள். புலன் என்ற ஒருமையின் பன்மை சொல்லாகவும் புலால் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. கொல்லாதவரை புலன்கள் அடங்கி மறுக்கப்பட்டவரை எல்லா உயிரும் போற்றும்.

காணொளி:-

https://youtu.be/haQm2mmCVLY

## அறத்துப்பால் | துறவறவியல் | உ எ, தவம் (27)

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை

அற்றே தவத்திற் குரு. (261)

க, தான் அடைந்த குற்றங்களை விளக்கிக் கொள்வது உயிருக்கு துன்பம் செய்யாது இருப்பது இதுவே ஏற்படுத்திக் கொண்ட தவத்திற்கு அடையாளம்.

தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை

அஃதிலார் மேற்கொள் வது. (262)

உ, தவம் செய்வது தவம் செய்ய வல்லவருக்கு மட்டுமே இயலும் மற்றவர் முயற்சிப்பது பயன் தராது.

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்

மற்றை யவர்கள் தவம். (263)

ங, துறந்தவர்களுக்கு உதவிட எண்ணி மறந்துவிட்டார்களோ மற்றவர்கள் தவம் செய்வதை.

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்

எண்ணின் தவத்தான் வரும். (264)

ச, ஒத்திசைவு அற்றவர்களை விலக்கலும் மகிழ்வானவர்களை உருவாக்குவதும் தவம் செய்பவர் நினைத்தால் வரும்.

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்

ஈண்டு முயலப் படும். (265)

ரு, தேவையை தேவைக்கு ஏற்றப்படி பெறுவதால் தவம்செய்ய இங்கே முயற்சிக்கப் படுகிறது.

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்

அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு. (266)

சு, தவம் செய்பவர் தனது சுயம் நிறைவடையும் (கருமம்) செயல் செய்வார் மற்றவர்கள் தவத்திற்கு எதிரானதை செய்கிறார்கள் ஆசைக்கு அடிமைப்பட்டு.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்

சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (267)

எ, காய்ச்சுவதால் பளபளக்கும் தங்கத்தைப் போலவே ஒளி பரவும் துன்பம் வர வர தவப் பார்வை அகலாதவர்க்கு.

தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய

மன்னுயி ரெல்லாம் தொழும். (268)

அ, தனது உயிரே தனக்கு அறம் செய்ய வல்லதாய் பெற்றவரை மண்ணில் வாழும் மற்ற எல்லா உயிர்களும் வணங்கும்.

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்

ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. (269)

கூ, மரணத்தை மாற்றும் தகுதியும் உண்டாகும் தவத்தின் பயனாக ஆற்றல் அடைந்தவருக்கு.

இலர்பல ராகிய காரணம் நோற்பார்

சிலர்பலர் நோலா தவர். (270)

கo, இல்லாமையுடன் பலர் இருக்க காரணம் தன்னை அறிய முயற்சிப்பவர் (நோற்பவர்) சிலராகவும் தன்னை அறிய முயலாதவர்கள் (நோலர்) பலராகவும் இருப்பதே.

அதிகார விளக்கம்!

தனது துன்பத்தை நீக்கி அடுத்தவர் துன்பத்தை ஒழிப்பதே தவம். இதை அனைவரும் சாதிப்பது இயலாது. தவம் செய்பவர்க்கு உதவ பலர் தவம் செய்வதை தவிர்கிறார்கள். தகுதியானவர்களை தக்க வைக்க தவத்தால் இயலும். தன் உயிரை தெளிவாக அறிந்தவரை மற்றய உயிர்கள் போற்றும். காலனும் தன் கடமை செய்ய அஞ்சுவான் சிலராக இருக்கும் தவம் செய்பவரை கண்டு.

காணொளி:-

https://youtu.be/ap9qmFv1GMQ

## அறத்துப்பால் | துறவறவியல் | உஅ, கூடா ஒழுக்கம் (28)

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்

ஐந்தும் அகத்தே நகும். (271)

க, ஏமாற்றும் மனம் கொண்டவன் நடித்து நடக்கும் பழக்கத்தை கண்டு நீர் நிலம் காற்று நெருப்பு ஆகாயம் என்ற ஐந்து பூதங்களும் வெட்கப்படும்.

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்

தான்அறி குற்றப் படின். (272)

உ, பெரிய உருவம் பெற்று என்ன பயன் தனது நெஞ்சம் தன்னை குற்றம் கொண்டவனாக அறிந்தால்.

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்

புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. (273)

ந, வலியை தாங்க முடியாதவன் வன்மையான உருவம் பெற்றிருப்பது புலியின் தோலை போர்த்திக் கொண்டு புல்லை மேய்வது போன்றது.

தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து

வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. (274)

ச, தவம் செய்பவர் போல் தன் உண்மை நிலையை மறைத்து தீமைகளை செய்வது, புதரில் மறைந்து வேடன் பறவையை பிடிப்பது போன்றது.

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று

ஏதம் பலவுந் தரும். (275)

ரு, பற்று இல்லாமல் போனது என்பவர்களின் படித்து நடக்கும் ஒழுக்கம் ஏன் இப்படி செய்தோம் என்கிற அளவிற்கு துன்பம் பலவும் தரும்.

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து

வாழ்வாரின் வன்கணார் இல். (276)

கூ, நெஞ்சத்தில் தேவைகளை அகற்றாமல் தேவை அற்றவர்போல் சூழ்ச்சி செய்து வாழ்பவரை விட வன்மையானவர்கள் இல்லை.

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி

மூக்கிற் கரியார் உடைத்து. (277)

எ, வெளியே குற்றம் அறியாதபடி இருப்பவரானாலும் மனதில் உள்ள குற்றம் மூக்கில் எமனை பெற்றுவிடும்.

மனத்தது மாசாக மாண்டார் நீராடி

மறைந்தொழுகு மாந்தர் பலர். (278)

அ, மனத்தால் அழுக்கை நீக்காமல் இறந்தார்கள், குளிப்பதும் வேதங்கள் ஓதுவதும் செய்த பல மாந்தர்கள்.

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன

வினைபடு பாலால் கொளல். (279)

கூ, நேரான அம்பு கொடுமை செய்ய வல்லது யாழ் என்னும் இசைக்கருவியோ நேரானது இல்லை என்றாலும் செம்மையான இசை தரவல்லது அதுபோல செயலின் பயன் கருதி ஏற்க வேண்டும்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்

பழித்தது ஒழித்து விடின். (280)

கo, மொட்டை அடித்துக்கொள்வதும் தாடி வைத்துக்கொள்வதும் தேவை இல்லை உலகம் பழிக்கின்ற செயல்களை விட்டொழித்தால்.

அதிகார விளக்கம்!

வஞ்சகத்தாரைக் கண்டு பூதங்கள் ஐந்தும் எள்ளி நகையாடும். வான் அளவு வளர்ந்தாலும் தன் நெஞ்சம் குற்ற உணர்வுடன் இருந்தால் என்ன பயன். ஆசை தீர்ந்தவர் போல் நடிப்பவரும், தேவைகள் அற்றவர் போல் வேடம் அணிந்தவரும் திருட்டுத் தனமாக வேடனைப் போல் மறைந்து தன் வேட்கையை தீர்த்துக் கொள்வார்கள். முரண்பட்ட யாழ் போல் ஒருவர் தோற்றம் அளித்தாலும் அதன் இசைப் போல் மனதால் இருக்கக்கூடும். உலகம் பழிக்காதபடி வாழ்பவர் அடுத்தவர் மதிக்க வேண்டும் என்று மொட்டையோ, தாடியோ வைத்துக் கொள்ளத் தேவையில்லை.

காணொளி:-

https://youtu.be/NCCDjDuFqMI

## அறத்துப்பால் | துறவறவியல் | உ கூ, கள்ளாமை (29)

எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்

கள்ளாமை காக்கதன் நெஞ்சு. (281)

க, எள்ளி நகைக்கக் கூடாது என்று விரும்புபவர் எப்போதும் திருட்டுத்தனம் தோன்றாமல் காக்க வேண்டும் தன் நெஞ்சை.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்

கள்ளத்தால் கள்வேம் எனல். (282)

உ, மனத்தால் எண்ணுவதும் குற்றமாகும் அடுத்தவர் பொருளை திருட்டுத் தனத்தால் திருடலாம் என்று.

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து

ஆவது போலக் கெடும். (283)

ந, திருட்டுத் தனத்தால் உருவாகிய செல்வம் அளவு குறைந்து வளர்வது போல் கெட்டுவிடும்.

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்

வீயா விழுமம் தரும். (284)

ச, திருட்டுத் தனத்தால் தோன்றிய காதல் விளைவிப்பது அழியா துன்பமே ஆகும்.

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்

பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல் (285)

ரு, இயற்கையின் பரிசை எண்ணி அன்பு மேலோங்கி வாழ்தல் என்பது பொருள்களைப் பார்த்து பொறாமை அடைபவருக்கு இல்லை.

அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்

கன்றிய காத லவர். (286)

சு, அளவை தீர்மானித்து செயல்களை செய்யாதவர்கள் திருட்டுத்தனத்தில் மிகவும் ஆர்வம் அடைவார்கள்.

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்

ஆற்றல் புரிந்தார்கண் இல். (287)

எ, திருட்டுத்தனம் என்ற திடமான செயல், தேவைகளின் அளவை அறிந்துக் கொண்ட ஆற்றல் மிகுந்தவரிடத்தில் இல்லை.

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்

களவறிந்தார் நெஞ்சில் கரவு. (288)

அ, தேவைகளின் அளவை அறிந்தவர்களின் நெஞ்சம் அறத்துடன் இருப்பதைப்போலவே, திருட்டுத்தனம் அறிந்த நெஞ்சில் வஞ்சனை இருக்கும்.

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல

மற்றைய தேற்றா தவர். ( 289)

கூ, தேவைக்கு அதிகமாக செய்து வீழ்வார்கள் திருட்டுத்தனம் மட்டுமின்றி மற்றவற்றிலும் தேர்ச்சி அற்றவர்களே.

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்வார்க்குத்

தள்ளாது புத்தே ளுளகு. (290)

க0, திருடருக்கு உயிர் நிலைத்தல் சாத்தியம் இல்லை, திருடர்களுக்கும் தெய்வீக உலகம் சாத்தியம்.

அதிகார விளக்கம்!

பிறர் ஏளனம் செய்யாதிருக்க வேண்டும் என்றால் அடுத்தவர் பொருளை களவாட நினைக்க கூடாது. மனதளவிலும் கள்ளத்தனம் இல்லாதவரே நிறைவாக வாழ்வார். தேவையின் அளவு அறிந்தவர் திருடுவது இல்லை.

காணொளி:-

https://youtu.be/gSqonaxl72A

## அறத்துப்பால் | துறவறவியல் | ௩௦, வாய்மை (30)

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்

தீமை இலாத சொலல். (291)

க, வாய்மை என்பது எது என்றால் எந்த ஒரு வகையிலும் தவறு இல்லாமல் சொல்வது.

பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த

நன்மை பயக்கும் எனின். (292)

உ, பொய்மை வாய்மை போன்றதே குற்றம் தீர்த்து நன்மை செய்யும் என்றால்.

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்

தன்நெஞ்சே தன்னைச் சுடும். (293)

ங, தனது நெஞ்சம் அறிந்து பொய் சொல்லக்கூடது பொய்யாக இருப்பின் தனது நெஞ்சே தன்னை துன்புறுத்தும்.

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்

உள்ளத்து ளெல்லாம் உளன். (294)

ச, உள்ளத்தால் நினைப்பதே பொய்மை இன்றி இருக்கும் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் இருக்கும்.

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு

தானஞ்செய் வாரின் தலை. (295)

ரு, மனதுடன் வாய்மையாக பேசுபவர் தவம் மற்றும் தானம் செய்பவர்களை விட தலை சிறந்தவர்.

பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை

எல்லா அறமும் தரும். (296)

சு, பொய்யற்ற தன்மைப் போல் புகழுடையது இல்லை, ஏமாற்றாத தன்மை எல்லா நன்மையையும் தரும்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற

செய்யாமை செய்யாமை நன்று. (297)

எ, பொய்மையை பொய்யாக்கி வாழ்ந்தால் மற்ற அறச்செயல்கள் செய்யாமலேயே நன்மை தரும்.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை

வாய்மையால் காணப் படும். (298)

அ, வெளிச்சுத்தம் தண்ணீரால் ஏற்படும், உள்ளே உள்ள உள்ளத்தின் சுத்தம் வாய்மையால் அறியப்படும்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்

பொய்யா விளக்கே விளக்கு. (299)

கூ, இருள்நீக்க ஏற்றப்படும் விளக்குகளோ, அறியாமை நீக்க விளக்கப்படும் விளக்கங்களோ விளக்கு ஆகாது. உதாரணமாக இருப்பவருக்கு பொய்யற்ற விளக்கே விளக்கு.

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்

வாய்மையின் நல்ல பிற. (300)

க௦, நான் உண்மையாய் அறிந்தவற்றுள் இல்லை என தோன்றுவது வாய்மையை விட நல்ல ஒன்று.

அதிகார விளக்கம்!

உண்மை என்பது அடுத்தவருக்கு துன்பம் தராமல் இருப்பது. பொய்யும் உண்மை போன்றது நன்மை தரும் சமயத்தில். தனக்குத் தானே உண்மையாக இல்லாவிடின் நமக்கு நாமே எதிரியாக இருப்போம். மனதளவிலேயே பொய்யற்றவர் மக்கள் மனதில் நிலைப்பார் இதுவே தானம் தவம் கடந்த மேலானது. நீரில் குளிப்பது புற உடலை தூய்மை செய்யும் என்றால் உண்மையுடன் இருப்பது அகத்தூய்மை செய்யும். வெளிச்சம் போன்ற தீர்க்கமான முடிவை பெற நினைக்கும் சான்றோர் பொய்யாமையை போற்ற வேண்டும். உண்மையை விட சிறந்தது உலகில் இல்லை.

காணொளி:-

https://youtu.be/8_OUa-adb6o

## அறத்துப்பால் | துறவறவியல் | ௩ க, வெகுளாமை (31)

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்

காக்கின்என் காவாக்கால் என். (301)

க, செல்லத்தகுந்த இடத்தில் காப்பவரே சினத்தை காப்பவர், செல்லத்தகாத இடத்தில் அடக்கினாலும் அடக்காவிட்டாலும் என்ன?

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்

இல்அதனின் தீய பிற. (302)

உ, செல்லத்தகாத இடத்தில் சினம் தீமையானது, செல்லத் தகுந்த இடத்திலும் அதைவிட தீமையானது இல்லை.

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய

பிறத்தல் அதனான் வரும். (303)

௩, மறுத்துவிட வேண்டும் கோபத்தை யாராக இருப்பினும் தீமை பிறப்பது அதனால் வரும்.

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்

பகையும் உளவோ பிற. (304)

ச, இன்பத்தையும் கொண்டாட்டத்தையும் கொன்றுவிடும் சினத்தை விட வேறு பகையும் உண்டோ?

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்

தன்னையே கொல்லும் சினம். (305)

ரு, தன்னை தானே காத்துக் கொள்ள சினம் வராமல் காக்க வேண்டும், இல்லையென்றால் தன்னையே கொன்றுவிடும் சினம்.

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்

ஏமப் புணையைச் சுடும். (306)

சூ, சினம் என்ற தன்னை சேர்ந்தவரை அழிப்பது இனம் என்ற பெரிய கடலையே வற்ற செய்துவிடும்.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு

நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. (307)

எ, சினத்தை சிறந்ததாக எண்ணி போற்றுபவர் அடையும் கெடுதல் பூமியை கையால் அடித்து வலியால் துடிப்பதைப் போன்றது.

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்

புணரின் வெகுளாமை நன்று. (308)

அ, மலர் பறித்து வீசுவதைப் போல் துன்பம் செய்தாலும் இணக்கம் கொள்ள வந்தால் சினம் அன்றி சேர்த்துக்கொள்வது நன்று.

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்

உள்ளான் வெகுளி எனின். (309)

கூ, நினைத்ததை எல்லாம் உடனே அடையும், உள்ளத்தில் சினம் இருந்தால் எப்படி சாத்தியமாகும்?

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்

துறந்தார் துறந்தார் துணை. (310)

கo, மரணித்தவர் (சினம் கொண்டவர்) மரணித்தவருக்கு ஒப்பானவர் சினத்தை விட்டோழித்தவர் துறவிக்கும் துணையாகிறார்.

அதிகார விளக்கம்!

சினம் செல்லுபடி ஆகாத இடத்தில் காப்பது பயன் அற்றது. சினம் தீமை பயப்பதால் அதை மறத்தல் வேண்டும். மகிழ்வையும் கொண்டாட்டத்தையும் அழிக்கும் பகைவனாக சினம் இருக்கிறது. தனக்கும் தன் இனத்திற்கும் எதிரியாக இருக்கும் சினத்தை தவிர்போம். உள்ளதை அடையும் ஆற்றலை இழக்கச் செய்யும் சினம். சினத்தை துறந்தவர் துறவிக்கும் மேலானவர்.

காணொளி:-

https://youtu.be/qaZD7rXcDms

## அறத்துப்பால் | துறவறவியல் | ௩ உ, இன்னா செய்யாமை (32)

சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா

செய்யாமை மாசற்றார் கோள். (311)

க, சிறப்பு தரும் செல்வங்கள் பல பெற்றாலும் அடுத்தவருக்கு துன்பம் செய்யாதது அழுக்கு அற்றவர்களின் பண்பு.

கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா

செய்யாமை மாசற்றார் கோள். (312)

உ, வெறுப்புடன் துன்பம் தருபவருக்கும், எதிர்த்து துன்பம் செய்யாதது அழுக்கு அற்றவர்களின் பண்பு.

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்

உய்யா விழுமம் தரும். (313)

௩, பகைகொண்டு ஏதும் செய்யாதவர்களுக்கு துன்பம் செய்தால் பின்பு மீளமுடியாத தொல்லை ஏற்படும்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயம் செய்து விடல். (314)

ச, துன்பம் தந்தவரை தண்டித்தல் என்பது அவர் வெட்கப்படும்படி நல்லது செய்து விடுவதே.

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்

தந்நோய்போல் போற்றாக் கடை. (315)

ரு, அறிவினால் சாதிப்பது உண்டா? அடுத்ததின் துன்பத்தை தனது துன்பம் போல் கருதுவதை விட.

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை

வேண்டும் பிறன்கண் செயல். (316)

சூ, துன்பம் எதுவென்று நாம் உணர்ந்ததை அடுத்தவருக்கு செய்யாமல் இருக்க வேண்டும்.

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்

மாணாசெய் யாமை தலை. (317)

எ, எதன்பொருட்டும் எப்பொழுதும் யாருக்கும் மனதளவிலும் பகை உணர்வு கொள்ளாமையே தலை சிறந்தது.

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ

மன்னுயிர்க்கு இன்னா செயல். (318)

அ, தனது உயிருக்கு குற்றம் வரக்கூடாது என்று அறிந்தவன் எதன் பொருட்டு மண்ணில் வாழும் உயிருக்கு துன்பம் செய்கின்றானோ?

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா

பிற்பகல் தாமே வரும். (319)

கூ, அடுத்தவருக்கு துன்பத்தை காலையில் செய்தால் தனக்கு துன்பம் மாலையில் தானாகவே வரும்.

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்

நோயின்மை வேண்டு பவர். (320)

கo, தீமை என்பது தீமை செய்பவருக்கே உரியது. தீமையைச் செய்யாதவரே தீமை இன்றி வாழத் தகுதியுடையவர்.

அதிகார விளக்கம்!

சிறப்பு தரும் பொருள் இருப்பினும் அடுத்தவருக்கு துன்பம் தராதவரே குற்றமற்றவர். துன்பம் தந்தவரையும் தண்டிக்காதவர் தூய்மையானவர். துன்பம் தந்தவருக்கும் நன்மை செய்வதே நல்லது அதுவே தண்டிக்கும் வழி. பிறருக்கு நோய் என்ற தீங்கு செய்வதே தனக்குத் தானே செய்வது எனவே, நாம் முற்பகல் செய்யும் தீங்கு பிற்பகல் வந்து சேரும்.

காணொளி:-

https://youtu.be/Midq_VxW9SQ

## அறத்துப்பால் | துறவறவியல் | ங ங, கொல்லாமை (33)

அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்

பிறவினை எல்லாந் தரும். (321)

க, அறமான செயல் என்னவென்றால் அழிக்காமை வேண்டுவது. மற்ற செயல் எல்லாவற்றையும் தரும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாந் தலை. (322)

உ, பகிர்ந்து உண்ணுவதும் பல உயிர்களை காப்பதும் படித்தவர் சிறப்பித்து தந்த எல்லாவற்றிலும் முதன்மையானது.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்

பின்சாரப் பொய்யாமை நன்று. (323)

ந, ஒரே நல்லது கொல்லாமை மற்றபடி அதற்கு பின்னே உள்ள பொய்யாமை நன்று.

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்

கொல்லாமை சூழும் நெறி. (324)

ச, நல்வழி என்பது எது என்றால் எந்த ஒன்றையும் கொல்லாமை வேண்டும் என்ற ஒழுக்கம்.

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்

கொல்லாமை சூழ்வான் தலை. (325)

ரு, தனது நிலைக்கு பயந்து துறவு கொள்பவர்களைக் காட்டிலும், கொலைக்கு பயந்து கொல்லாமை மேற்கொள்பவரே தலைச் சிறந்தவர்.

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்

செல்லாது உயிருண்ணுங் கூற்று. (326)

சூ, கொல்லாமை கடைபிடித்து நடப்பவரின் வாழும் நாட்களை அழிக்க வராது உயிரை எடுக்கும் எமன்.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது

இன்னுயிர் நீக்கும் வினை. (327)

எ, தனது உயிர் போய்விடும் என்றாலும் செய்யக்கூடாது தன்னை போன்ற அடுத்தவரின் இன்பமான உயிரை போக்கும் காரியத்தை.

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்

கொன்றாகும் ஆக்கம் கடை. (328)

அ, நல்லதாக மாறும் காரியம் பெரியது ஆகும் என்றாலும் உதாரணமாக விளங்கும் மனிதர்களுக்குக் கொன்றுதான் ஆகவேண்டும் என்பது கடைசியே.

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்

புன்மை தெரிவா ரகத்து. (329)

கூ, கொலையை தொழிலாக செய்யும் மானிடப் பதர்கள் சிறுமையை அறிந்தவர் உள்ளத்தில் கீழான இடம் பெறுவர்.

உயிர் உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்

செல்லாத்தீ வாழ்க்கையவர். (330)

கo, உயிரை உடம்பிலிருந்து நீக்கியவர் (கொலைசெய்தவர்கள்) எனப்படுவர்கள் செயல்படும் உடம்பில் செல்லாத தீய வாழ்க்கை வாழ்வார்கள்.

அதிகார விளக்கம்!

அறமான செயல் என்பது அழிக்காமல் இருப்பதே இதனால் மற்ற அறச்செயல்கள் தானாக வரம்படும். எல்லா உயிர்களுடன் பகுத்து உண்பதே நூல் தரும் கருத்துக்களில் எல்லாம் தலைச் சிறந்தது. தேவையின்றி அழிப்பவன் தலை இல்லாத முண்டம் போன்றவன்.

காணொளி:-

https://youtu.be/YpAqtyVvHUA

## அறத்துப்பால் | துறவறவியல் | ௩ ௪, நிலையாமை (34)

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்

புல்லறி வாண்மை கடை. (331)

௧, நிலையில்லாதவற்றை நிலையது என்று உணர்வது அறிவற்றவர்களின் ஆணவச் செயல்.

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்

போக்கும் அதுவிளிந் தற்று. (332)

௨, கூத்துப் பார்க்கக் கூடும் கூட்டம் போலவே நிறையும் செல்வம் அது களைவது போலவே கலைந்தும் போகும்.

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்

அற்குப ஆங்கே செயல். (333)

௩, நிலைக்காத இயல்புடைய செல்வத்தை அடைந்துவிட்டால் அதைக்கொண்டு நிலையானதை செய்யவேண்டும்.

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்

வாளது உணர்வார்ப் பெறின். (334)

௪, ஒரு நாள் என்று காட்டப்படுவது உயிர் என்ற மரத்தை அறுக்கும் வாள் என்று உணர்வுள்ளவர்கள் அறிவார்கள்.

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை

மேற்சென்று செய்யப் படும். (335)

௫, நாக்கு விக்குளால் அடைபடுவதற்கு முன் (மரணத்திற்கு முன்) நல்ல செயல்களை விரும்பி செய்திடல் வேண்டும்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்

பெருமை உடைத்துஇவ் வுலகு. (336)

௬, நீண்ட நாட்கள் இருந்த ஒருவர் இன்று இல்லை என்ற பெருமை படைத்தது இந்த உலகம்.

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப

கோடியும் அல்ல பல. (337)

௭, சிறிது நேரம் கூட வாழ்வதை தெரிந்துக் கொள்ளாதவர் நினைக்கும் கோடியும் தேவையற்ற பலவே.

குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே

உடம்பொடு உயிரிடை நட்பு. (338)

௮, ஓட்டை பிரிந்து தனியே பறந்துவிடும் பறவைப் போலவே உடம்புடன் உயிர் கொண்ட நட்பு.

உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி

விழிப்பது போலும் பிறப்பு. (339)

௯, தூங்கிவிடுவது போன்றது மரணம், தூங்கிப் பின்பு விழிப்பதுப் போன்றது பிறப்பு.

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்

துச்சில் இருந்த உயிர்க்கு. (340)

கo, புகலிடம் அமையாமல் அலைகிறதோ உடம்பில் சிலகாலம் இருக்கும் உயிர்.

அதிகார விளக்கம்!

நிலையற்றதை நிலை என்று நினைக்கும் அறிவுள்ள யாரும் கீழானவர்களே. சிறுக சேர்ந்த கூட்டம் உடனே வெளியேறும் கூத்தாட்டு மைதானத்தின் நிகழ்வே செல்வத்தின் நிலை. உலகின் சிறப்பே நேற்று இருந்தவர் இன்று இல்லை என்பதாகும். எனது என்ற பற்று அறுத்தவனே எல்லாம் உடையவன். மரணமும் நிலையின்றி தூக்கம் போல் நித்தம் நிகழ்கிறது. எதார்த்த சூழலை உணர்ந்தவரே பிறப்பை முடித்துக் கொள்கிறார்.

காணொளி:-

https://youtu.be/6WRdiK4a_Gc

## அறத்துப்பால் | துறவறவியல் | ௩ ௫, துறவு (35)

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்

அதனின் அதனின் இலன். (341)

க, எதுவென்று எதுவென்று அறிந்து விலக்கியவன் வருத்தப்படுவது அதனால் அதனிடத்தில் இல்லை.

வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்

ஈண்டுஇயற் பால பல. (342)

உ, வேண்டியது (தேவையானது) கிடைக்க துறக்க வேண்டும் துறந்தப் பின்பு இயல்பால் பலப்பல அடையலாம்.

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்

வேண்டிய எல்லாம் ஒருங்கு. (343)

௩, வெற்றிக் கொள்ள வேண்டும் புலன்கள் ஐந்தையும், விட்டொழிக்க வேண்டும் தேவையானவை ஒன்றாக கிடைக்க.

இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை

மயலாகும் மற்றும் பெயர்த்து. (344)

ச, இயல்பான நோன்பு என்பது ஒன்றும் இல்லாது இருத்தல், உடைமையாக கொண்டால் மயக்கமுற்று அடுத்ததை உடமையாக்க முற்படும்.

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்

உற்றார்க்கு உடம்பும் மிகை. (345)

ரு, அடுத்து தொடர்வதை யார் விரும்புவது? பிறவிக் கடக்க முற்பட்டவருக்கு உடம்பும் மிகையானதே.

யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு

உயர்ந்த உலகம் புகும். (346)

சூ, நான் எனது என்ற ஆணவம் அழித்தவன் தேவர்களுக்கும் மேலான உலகத்தை அடைவான்.

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்

பற்றி விடாஅ தவர்க்கு. (347)

எ, பற்றி விடாது தொல்லைகள் பற்றினை பற்றி விடாத மனிதர்களுக்கு.

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி

வலைப்பட்டார் மற்றை யவர். (348)

அ, தீர்க்கமாக ஆராய்ந்து தலைப்பட்டவரே துறந்தவர், மற்றவர்கள் பயன் கருதி மயக்கத்தால் வலைப்பட்டவர்கள்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று

நிலையாமை காணப் படும். (349)

(காட்சிகளை தன் விருப்பத்தில் காண்கிறோம் என்ற அனுபவம் பெரும் பொழுதே வள்ளுவரின் இக்குறள் எவ்வளவு ஆழமானது என்று புரியும்)

கூ, பற்றுகளை துறந்த கண்ணே பிறப்பு அற்ற நிலையை உண்டாக்கும் மற்றபடி நிலையாமையே காணப்படும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு. (350)

கo, ஏற்றுக்கொள் எதிர்பார்ப்பு அற்றவன் எதிர்பார்ப்பை, அப்படி ஏற்றுக்கொள்வதை ஏற்றுக்கொள் எதிர்பார்ப்புகளை விடுவதற்கு.

அதிகார விளக்கம்!

எது எது என்று அறிந்து விலகியவர் அதனிடமிருந்து துன்பம் அடைவதே இல்லை. தேவைகள் சரியாக நடக்க துறவு அவசியம், துறவால் நன்மைகள் பலபல உண்டு. பார்வையிலேயே பற்று இல்லாமல் இருக்க வேண்டும் அப்படி இல்லாதவர் பற்று உள்ளவரே. பற்று இல்லாதவரைப் பற்றினால் பற்றை விடலாம்.

காணொளி:-

https://youtu.be/UmmQeQTq1M0

## அறத்துப்பால் | துறவறவியல் | ௩ கூ, மெய் உணர்தல் (36)

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்

மருளானாம் மாணாப் பிறப்பு. (351)

க, நிலைத்த பொருளாக இல்லாததையெல்லாம் நிலைக்கும் பொருள் என்று உணர்வது மாறுபாடுடைய சிறப்பற்ற பிறப்பு.

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி

மாசறு காட்சி யவர்க்கு. (352)

உ, இருள் நீக்கப்பட்டு இன்பம் பயனாக அமையும், மாறும் தன்மையுள்ள யாவற்றையும் நீக்கி மாசற்றதை காட்சியாக கண்டவருக்கு.

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்

வானம் நணிய துடைத்து. (353)

௩, சந்தேகம் அற்று தீர்க்கமாக அறிந்தவருக்கு பூமியிலும் வானம் நெருக்கம் கொண்டது.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே

மெய்யுணர்வு இல்லா தவர்க்கு. (354)

ச, மெய்யுணர்வு இல்லாத மனிதர்களுக்கு சந்தேக உணர்வு கொண்ட கண்களால் பயன் இல்லை.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு. (355)

ரு, எந்த பொருள் எந்த தன்மையுடையதாக இருப்பினும் அந்த பொருளின் உண்மைத் தன்மையை அறிந்துக் கொள்வதே அறிவு.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்

மற்றீண்டு வாரா நெறி. (356)

சு, கற்று இங்கே மெய்ப்பொருளைக் கண்டவர் முன்னேறுவர் மறந்தும் இங்கே வாராத வழியில்.

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்

பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. (357)

எ, உள்ளாத்தால் ஆராய்ந்து உள்ளதை உணர்ந்தால் ஒரு பக்கமாய் பிளவுப் பட்டுள்ள பிறப்பு தேவைப்படாது.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்

செம்பொருள் காண்பது அறிவு. (358)

அ, பிறப்பு என்ற அறியாமை விலகிட சிறப்பு என்ற செழுமையான (உபதேசம்) பொருள் காண்பதே அறிவு.

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்

சார்தரா சார்தரு நோய். (359)

கூ, சார்ந்து இருப்பதை உணர்ந்து சார்ந்து இல்லாதவாறு வாழ்ந்தால் மற்றவை அழிந்து சார்ந்து இருப்பதை தராது சார்ந்து இருக்கச் செய்யும் நோய்.

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்

நாமம் கெடக்கெடும் நோய். (360)

க0, ஆசைப்படுதல், அளவுக்கு அதிக கோபப்படுதல், எதன்மீதும் மயக்கம் அடைதல் இந்த மூன்றின் பெயர்களையும் அழித்தால் அழியும் நோய்.

அதிகார விளக்கம்!

உண்மை பொருள் எது என அறியாமல் உலகில் உள்ளவற்றை எல்லாம் பொருள் என எண்ணவதே இழிவானப் பிறப்பு. மாசு இல்லா காட்சியே இருளை நீக்கும். காட்சி அறியும் கண்களும் பயன் அற்றது உண்மை அறியாவிடின். மெய்ப்பொருள் காணும் அறிவே அறிவு. பெயருக்கு கேடு உண்டாக்கும் காமம் வெகுளி மயக்கம் அழித்தால் நோய் இல்லை.

காணொளி:-

https://youtu.be/GGo9fKw2HiM

## அறத்துப்பால் | ஊழியல் | ௩ அ, ஊழ் (38)

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்

போகூழால் தோன்றும் மடி. (371)

க, கைப்பொருள் ஆகவேண்டும் என்றால் அசைவற்ற ஆர்வம் தோன்றும் அழிவதென்றால் சோர்வு தோன்றும்.

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்

ஆகலூழ் உற்றக் கடை. (372)

உ, முட்டாளாக மாற்றும் இழிவான ஊழ்வினை அறிவை அகற்றிவிடும், ஆக்கம் தரும் ஊழ்வினையோ அனைத்தையும் முடிவுக்கு கொண்டு வரும்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்

உண்மை அறிவே மிகும். (373)

ங, நுட்பம் நிறைந்த நூல்கள் பல படித்தாலும் மாறாக பிறவியால் பெற்ற உண்மையான அறிவே மிகும்.

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு

தெள்ளிய ராதலும் வேறு. (374)

ச, இரண்டு வேறுபாடுகள் உலகத்தில் இயற்கையாக அமைந்துள்ளது, மதிக்கப்படுபவராக இருத்தல் வேறு தெளிந்த ஞானம் உள்ளவராக இருத்தலும் வேறு.

நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்

நல்லவாம் செல்வம் செயற்கு. (375)

ரு, நல்லது எல்லாம் தீமையாகவும் மாறும் தீமையும் நல்லதாகிவிடும் செல்வம் அடைய ஊழ் இருந்தால்.

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்

சொரியினும் போகா தம. (376)

சு, பாதுகாப்பினும் முடியாது தம்பால் உரிமையற்றது, முயன்று விளக்கினும் விலகாது தமக்குரியது.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி

தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. (377)

எ, வரையறுத்துக் கொடுத்தவன் தந்த வாய்ப்பு அல்லாமல் கோடி தொகுத்தாலும் அனுபவித்தல் அரிது.

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால

ஊட்டா கழியும் எனின். (378)

அ, துறந்தவர் போன்றே அறிவில்லாதார் உடன்படுவார் ஊழ் உடன்படுத்தும் எனின்.

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்

அல்லற் படுவ தெவன். (379)

கூ, நாற்று நடும் பொழுது நல்லது என்று அறிந்தவர் அறுவடைக்கு துன்பம் அடைந்தது யார்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று

சூழினுந் தான்முந் துறும். (380)

கo, விதியை விட (ஊழ்) வலிமையானது வேறொன்று நம்மை ஆட்படித்தினும் விதியே முந்தி இருக்கும்.

அதிகார விளக்கம்!

பிறவிப் பயன் பொருத்தே ஆர்வமும் சோர்வும் தோன்றுகிறது. அறிவு சார்ந்த நூல்கள் கற்றாலும் தன் பிறவி அறிவே மேலோங்கி இருக்கிறது. தவறு சரியாகவும் சரி தவறாகவும் பிறவிப்பயனால் மாறுகிறது. இரு வேறு உலகம் இருக்கிறது திருவுடையவன் தெளிந்தவன் என உயர்வை தருகிறது. விதி என்ற பிறவிப் பயன் மட்டுமே மாற்றவே முடியாத நிலையில் இருக்கும்.

காணொளி:-

https://youtu.be/OVtUOYGr7rE

அறத்துப்பால் அதிகார விளக்கம்

அறத்துப்பால் பொதுவாக பால் என்றால் பற்றியிருப்பது என்று அர்த்தம். அறத்தை பற்றியிருப்பதால் அறத்துப்பால். அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும் பிறன்பழிப்ப தில்லாயின் நன்று என வள்ளுவப் பெருந்தகையே அறத்திற்கு புதிய இலக்கணம் வகுக்கிறார்.

இல்வாழ்க்கையே அதாவது வாழ்க்கையை வாழ்பவனுக்கு தேவையான பொருளை அடைவதற்கு முன்பு வாழ்க்கை என்பது என்னவென்றும் எது சரி எது தவறு என்றும் வாழ்க்கை என்பது எப்படியிருக்கிறது என்று வரையறுத்தும் பேசுகையில் வள்ளுவனார் மீண்டும் முதல் அதிகாரத்தையே சுட்டிக்காட்டுகிறார்.

எது நமக்கு ஆரம்பமோ அல்லது துவக்கமோ அந்த கடவுளையே முன்மொழிந்து மேலும் கடவுளுக்கு அடுத்தபடியாக உள்ள சிறப்பு மிகுந்த வான்மழையை சொல்லி அப்படியே நீர்த்தவர்கள் அதாவது நம்மிலிருந்து பிரிந்தவர்களின் பெருமையையும் சொல்லி அறத்தை வலியுறுத்துகிறார்.

அறத்தின் பயனான இல்வாழ்க்கையின் உண்மையுரைத்து அதில் வாழ்க்கைத்துணையின் பங்களிப்பான நலமுள்ள புதல்வர்களைப் பெறுதலின் மேன்மை சொல்லியும் அன்பை உடைமையாக கொண்ட விருந்தோம்பல் மூலம் தமிழினத்தின் பண்பாட்டை வழிமொழிந்து விருந்தோம்பல் வேள்விக்கு நிகரானது என்று பெருமை பேசுகிறார்.

மேலும் இனியவை கூறும் தன்மையின் பண்பை வெளிப்படுத்தி செயநந்நன்றி அறிதலின் முக்கியத்துவம் சொல்லி நடுவு நிலைமையோடு அடக்கத்தை உடமையாக கொண்டும் ஒழுக்கத்தை வாழ்வின் உடமையாக போற்றியும் அந்த ஒழுக்கத்தின் மேன்மை பிறனில் விழையாமை என்று பயன் சொல்லியும் வாழ்வின் எத்தருணத்திலும் பொறையுடைமையோடு நடந்து அழுக்காறாமை வழி நின்றே வெஃகாமை நிலையறிவித்து புறம் பேசாமையை வழியுறுத்தி பயனில சொல்லாதே என்று பேச்சிற்கே புதிய அறம் வகுக்கிறார்.

பயனற்ற பேச்சால் தீவினையின் அச்சம் ஏற்படும் என்று எச்சரித்தும் ஒப்புரவு அறிந்து ஈகை செய்து எல்லோர்க்கும் உதவியாய் இருந்து புகழ் பெற வேண்டுமாய் வள்ளுவர் அறத்தை வழியுறுத்துகிறார்.

மேலும் புகழடைந்த மனிதன் புனிதத்தன்மை அடைய அருளை உடைமையாக கொண்டு முன்னேறிடவும் புலன்களின் இச்சையை அதாவது புலால் மறுத்து தவம் செய்திட கூடா ஒழுக்கம் நீங்கி கள்ளாமையென்ற நிலை மாறி வாய்மை வசப்பட்டு வெகுளாமை குணத்தால் இன்னாமை செய்யாதும் கொல்லாமையை வழியுறுத்தி உலகில் உள்ள எதுவும் நிலையாமையை காட்டுவதை சீர்தூக்கிக் காட்டி இயல்பாய் ஒவ்வொன்றிலும் வாழ்ந்து நிறைவையடைந்தால் துறவு தானாகவே ஏற்பட்டு மெய்யுணர்தலின் பக்கம் வரவும் மேலும் கவனம் வைத்து அவா அறுத்து அதாவது பிறவியை அறுப்பதற்கு துணைக்கூறி இவற்றையெல்லாம் ஊழ் தன்மையை உணர்ந்தால் அடையலாம் என்று போற்றிப் பாடுகிறார்.

அறத்தைப்பற்றி இப்படி பல காரணங்களை அல்லது வாழ்வியல் முறைகளையும் வாழ்வின் எதார்த்தங்களையும் அறத்தோடு அடைவது எப்படி என்பதையும் மேலும் அறத்தை முதலாவதாக கொள்பவனே பொருள் நிறைந்த வாழ்க்கையின் இன்பத்தை அனுபவிக்கிறான் என்று வள்ளுவர் வாயிலாக அறிகிறோம்...

## பொருட்பால் | அரசியல் | சo, கல்வி (40)

கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக. (391)

க, படிக்க வேண்டும் பழுது இல்லாமல் படித்த பின் படித்ததற்கு ஏற்றபடி நடக்க வேண்டும்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (392)

உ, எண் எனப்படுவதும் மற்றும் எழுத்து எனப்படுவதுமாகிய இந்த இரண்டும் கண்களைப் போன்றது அறிவுடன் வாழும் உயிர்களுக்கு.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லா தவர். (393)

ங, கண் உள்ளவர்கள் என்றால் கற்றவர்கள், முகத்தில் புண் உள்ளவர்கள் கல்லாதவர்கள்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்

அனைத்தே புலவர் தொழில். (394)

ச, விருப்பமுடன் ஒன்றாக கூடி உள்ளத்தால் பிரிந்து இருத்தல் எல்லாம் புலவர்கள் தொழில்.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்

கடையரே கல்லா தவர். (395)

ரு, உள்ளவர் முன் இல்லாதவர் நிலைப் போலவே எவ்வளவு கற்றிருந்தாலும் மேலும் கற்றுக்கொள்பவரே கற்றவர் அவ்வாறு செய்யாதவரே கல்லாதவர்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத் தூறும் அறிவு. (396)

சூ, தோண்டும் அளவிற்கு நீர் பெருகும் மணல் பாங்கான கிணற்றில் அதுபோலவே மனிதர்களுக்கு கற்கின்ற அளவிற்கு பெருகும் அறிவு.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்

சாந்துணையுங் கல்லாத வாறு. (397)

எ, எந்த ஒன்றையும் நாடி அணுகாமல் உணராமல் எவன் ஒருவன் சிறிதளவும் கற்காமல் இருப்பது.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப் புடைத்து. (398)

அ, தனிமையிலும் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு உயர்ச்சியிலும் சிறந்ததாக மாறும்.

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு

காமுறுவர் கற்றறிந் தார். (399)

கூ, தான் இன்பம் அடைந்தது போலவே உலகில் கண்டு மேலும் கற்க ஆசைக் கொள்வார் கற்று அறிந்தவர்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடல்ல மற்றை யவை. (400)

கo, கேட்டை விளைவிக்காத விரும்பும் செல்வம் கல்வி அது ஒருவருக்கு பணத்தைப் போன்றது அல்லாமல் வேறொன்று இல்லை.

அதிகார விளக்கம்!

கல்வி கசடு என்ற கருத்து பேதத்தை உருவாக்கும் என்பதால் கசடற கற்பது அவசியம். எண்ணும் எழுத்துமான கல்வியே உலகை உணர்த்தும் கண்கள். கற்காமல் யாரும் இருக்க முடியாது கல்வியின் பொருட்டு இன்பம் அடைந்தவர் அடுத்தவரும் இதை அடைய ஆசைப்படுவார். கேடு விளைவிக்காத கல்வியே சிறந்த செல்வமாகும்.

காணொளி:-

https://youtu.be/DFQLkpExCYM

## பொருட்பால் | அரசியல் | ச க, கல்லாமை (41)

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய

நூலின்றிக் கோட்டி கொளல். (401)

க, அரங்கம் இல்லாமல் வட்டாட்டம் ஆடுவதைப் போன்றதே நிறைந்த நூல்கள் இல்லாமல் கூட்டத்தைக் கூட்டுவது.

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்

இல்லாதாள் பெண்காமுற் றற்று. (402)

உ, கல்வி அறிவு இல்லாதவர் கருத்து சொல்ல ஆசைப்படுவது, மார்பழகு இல்லாதவள் பெண்மைக்கான ஆசைக்கொள்வதைப் போன்றது.

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்

சொல்லா திருக்கப் பெறின். (403)

ங, கல்வி அறிவு இல்லாதவர்களும் மிகவும் சிறந்தவர்கள், கல்வி அறிவு பெற்றவர் முன் பேசாது இருந்துவிட்டால்.

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்

கொள்ளார் அறிவுடை யார். (404)

ச, கல்வி அறிவு இல்லாதவர்களின் வரையறை கழிக்க முடியாத நல்லதாக இருப்பினும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் அறிவுடையவர்கள்.

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து

சொல்லாடச் சோர்வு படும். (405)

ரு, கல்லாத ஒருவர் ஆர்வப்பட்டு முன்னின்று பேசினால் கேட்பவர்களுக்கு சோர்வு ஏற்படும்.

உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்

களரனையர் கல்லா தவர். (406)

சூ, இருக்கிறார் என்ற அளவுடையார் அன்றி பயன்படாத களர் நிலத்தை போன்றவரே கல்லாதவர்.

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்

மண்மாண் புனைபாவை யற்று. (407)

எ, நுட்பமுடன் ஆராயும் ஆற்றல் இல்லாதவர்களின் அழகு மண்ணால் செய்யப்படும் பொம்மை போன்றது.

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே

கல்லார்கண் பட்ட திரு. (408)

அ, நல்லவருக்கு ஏற்பட்ட வறுமையை விட கொடியது கல்லாதவருக்கு ஏற்பட்ட உயர்வு.

மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்

கற்றார் அனைத்திலர் பாடு. (409)

கூ, சமூக அமைப்பில் மேல் பிறந்த கல்லாதவர் கீழ் பிறந்த கற்றார் முன் ஏதும் அற்றவரே.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர். (410)

கo, விலங்குகளுடன் மக்கள் இருப்பதைப் போன்றது, இலக்கை விளக்கும் நூல்களை கற்றவருடன் மற்றவர்கள்.

அதிகார விளக்கம்!

பல நூல்களை படிக்காமல் அரங்கம் ஏறுவது கட்டம் இல்லாமல் பகடை ஆடுவது போன்றது. படிக்காதவன் பேச முனைவது முலையில்லா பெண் காமுறுவதைப் போன்றது. எனவே கல்லாதவரின் சொல்லை கேட்க வேண்டாம் அது சோர்வை தரும், வறுமை தரும் துன்பத்தை விட அதிக துன்பம் தரும். சமூக ஏற்றத்தாழ்வு ஒழிக்கும் ஆற்றல் கல்விக்கு உண்டு. கல்லாதவர் உயர்குலப் பிறப்பு என்றாலும் அவர் தாழ்ந்தவரே. கல்லாதவர் விலங்குகளுக்கு ஒப்பானவர்களே.

காணொளி:-

https://youtu.be/EAYV5THzhRU

**காணொளி:** https://youtu.be/EAYV5THzhRU

# பொருட்பால் | அரசியல் | ச ந, அறிவுடைமை (43)

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்

உள்ளழிக்க லாகா அரண். (421)

க, அறிவு அழிவிலிருந்து காக்கும் கருவி, பகை கொண்டவருக்கு உள்ளே வந்து அழிக்கமுடியாத அரண்.

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ

நன்றின்பால் உய்ப்ப தறிவு. (422)

உ, சென்ற இடத்திற்கு ஏற்ப மாறாமல் தீமைகளைக் களைந்து நன்மைகளை ஏற்பது அறிவு.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு. (423)

ந, எதைப்பற்றியும் யார் யார் என்ன சொல்ல கேட்பினும், அதைப்பற்றிய உண்மையான பொருளை காண்பதே அறிவு.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்

நுண்பொருள் காண்ப தறிவு. (424)

ச, எண்ணும் பொருளை உணர்தும்படிச் சொல்வதும், அடுத்தவர் வார்த்தையில் நுண்பொருள் காண்பதும் அறிவு.

உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்

கூம்பலும் இல்ல தறிவு. (425)

ரு, உலகத்தை ஒட்டிய நட்பு பாராட்டினாலும் மலர்வதும் சுருங்குவதும் இல்லாததே அறிவு.

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு

அவ்வ துறைவது அறிவு. (426)

சு, உலக இயக்கம் எப்படி என்று அறிந்து அதற்கு ஏற்றார்ப் போல் உலகத்துடன் இணக்குவது அறிவு.

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்

அஃதறி கல்லா தவர். (427)

எ, அறிவு உள்ளவர்கள் அடுத்து நடப்பதை அறிவார்கள், அறிவு இல்லாதவர்கள் அதை அறிய கல்லாதவர்கள்.

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது

அஞ்சல் அறிவார் தொழில். (428)

அ, பயப்பட வேண்டியதற்கு பயம் இல்லாது இருப்பது அறியாமை, பயப்பட வேண்டியதற்கு பயப்படுவது அறிவாளிகளின் தொழில்.

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை

அதிர வருவதோர் நோய். (429)

கூ, எதிர்ப்பில் இருந்து தற்காத்துக் கொள்ளும் அறிவுடையவருக்கு இல்லை நடுங்கச் செய்யும் நோய்.

அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்

என்னுடைய ரேனும் இலர். (430)

கo, அறிவு உள்ளவர்கள் எல்லாம் உள்ளவர்கள், அறிவு இல்லாதவர்கள் என்ன பெற்றிருந்தாலும் இல்லாதவர்களே.

அதிகார விளக்கம்!

பகைவரால் கொள்ளை கொள்ள முடியாத அழிவையும் காக்கும் கருவியான அறிவு நன்றியுணர்வைத் தரும். யார் எதைப் பேச கேட்பினும் உண்மைப் பொருளை உணர்வதே அறிவு. உலகத்தில் ஒட்டி வாழ்ந்தாலும் உண்மைத் தன்மையுடன் இருப்பதே அறிவு. நடுக்கமோ, பயமோ, அஞ்சுவதோ இல்லாமல் தேவையான எல்லாம் உடையவரே அறிவுடையவர்.

காணொளி:-

https://youtu.be/17lm56OwX0g

**காணொளி:** https://youtu.be/17lm56OwX0g

## பொருட்பால் | அரசியல் | ச ச, குற்றம் கடிதல் (44)

செருக்குஞ் சினமும் சிறுமையும் இல்லார்

பெருக்கம் பெருமித நீர்த்து. (431)

க, நான் என்ற ஆணவத்தால் வரும் செருக்கும், ஒத்திசைவு கொள்ளாத சினமும், தாழ்வு மனம் கொண்ட சிறுமையும் இல்லாதவர்களின் வளர்ச்சி அகங்காரம் என்ற பெருமிதம் நீர்த்ததாய் இருக்கும்.

இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா

உவகையும் ஏதம் இறைக்கு. (432)

உ, ஆசைப்படுதலும், மதிக்க மறக்கும் மானமும், அர்த்தமற்ற மகிழ்வும் குற்றமாகும் உயர்நிலை அடைபவருக்கு.

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்

கொள்வர் பழிநாணு வார். (433)

ந, தினையளவு தவறு நேர்ந்தாலும் பனையளவாகக் கருதுவார் பழிக்கு அஞ்சுபவர்.

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே

அற்றந் தரூஉம் பகை. (434)

ச, குற்றம் செய்வதை விடாமல் காக்கும் பொருளாக்கும் குற்றமே அழிவைத் தரும் பகை.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்

வைத்தூறு போலக் கெடும். (435)

ரு, குற்றத்தால் துன்பம் வருமுன் தன்னை காத்துக் கொள்ள தவறியவரின் வாழ்க்கை, தீயின் முன்னே வைத்த வைக்கோல் போலக் கெடும்.

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்

என்குற்ற மாகும் இறைக்கு. (436)

சூ, தன்னிடம் உள்ள குறைகளை அழித்துப் பிறரது குறையை காணும் வழிகாட்டுபவருக்கு எந்த குறையும் இருக்காது.

செயற்பால செய்யா திவறியான் செல்வம்

உயற்பால தன்றிக் கெடும். (437)

எ, செய்யவேண்டுயதைச் செய்யத் தவறியவன் செல்வம், உயர்வு பல அடையாமல் கெடும்.

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்

எண்ணப் படுவதொன் றன்று. (438)

அ, எனக்கு மட்டும் என்ற ஆசைப்படும் பற்று கொள்ளும் உள்ளம், என்ன உள்ளம் என்று எண்ணப்படும் ஒன்று.

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க

நன்றி பயவா வினை. (439)

கூ, தன்னைத் தானே எதன்பொருட்டும் வியப்பாக எண்ணாதே, நன்றிக் கெட்டச் செயல்களை எப்போதும் விரும்பாதே.

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்

ஏதில ஏதிலார் நூல் (440)

கo, காதலுடன் காதல் கொண்டு அறியாமையை உணர்ந்துக் கொண்டால் எதிர்க்கவேண்டியது இல்லை எதிரிகளின் நூலை.

(அன்புள்ளம் கொண்டவன் உண்மையை உணர்ந்து முட்டாள்தனமான நூல்களை மதிப்பிழக்கச் செய்கிறான்)

அதிகார விளக்கம்!

நான் என்ற செருக்கும், சினமும், தாழ்வு மனப்பாண்மையும் இல்லாதவரின் வளர்ச்சி ஆணவம் இல்லாமல் இருக்கும். ஆசை, மதிக்காத மனங்கேட்ட செயல், உண்மையற்ற மகிழ்ச்சி உயர்வை தடுக்கும். சிறிய தவறையும் பெரிதாக பார்க்க வேண்டும். தன்னைத் தானே வியத்தல் குற்றமாகும். அறியாமையை அழிக்க காதல் கொண்டால் ஏதும் அற்ற நூலை தேவையற்றது என மாற்றிவிடலாம்.

காணொளி:-

https://youtu.be/3ifqFDtl-f0

# பொருட்பால் | அரசியல் | தெரிந்து செயல்வகை(47)

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்

ஊதியமும் சூழ்ந்து செயல். (461)

க, எந்தமாதிரியான தீங்கு வரும் எந்தமாதிரியான நன்மை வரும் இதனால் கிடைக்கும் ஊதியம் என்ன என்பதை முற்றிலும் ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு

அரும்பொருள் யாதொன்றும் இல். (462)

உ, பழக்கமான கூட்டத்தில் தேவையானவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுடன் ஆலோசித்து கூட்டாக செயல்படுபவருக்கு அடையமுடியாத பொருள் என்று எதுவும் இல்லை.

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை

ஊக்கார் அறிவுடை யார். (463)

ங, வரவை எண்ணி மூலப் பொருளை இழக்கும் செயலை செய்யத்தூண்ட மாட்டார் அறிவுடையவர்.

தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்

ஏதப்பாடு அஞ்சு பவர். (464)

ச, தீர்க்கமாக அறியமுடியா ஒன்றை செய்ய முற்படமாட்டார்கள் இகழ்ச்சி என்ற குற்றத்திற்கு அஞ்சுபவர்கள்.

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்

பாத்திப் படுப்பதோ ராறு. (465)

ரு, இன்னது இப்படி இருக்கவேண்டும் என்று வகைப்படுத்தாமல் செயல்படுதல் எதிரிகள் நிரந்தரமாய் இருக்க வழி செய்துவிடும்.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க

செய்யாமை யானுங் கெடும். (466)

சூ, செய்யத்தகாதவற்றை செய்வதால் கெடுதல் உண்டாகும், செய்யவேண்டியதைச் செய்யாது இருப்பினும் கெடுதல் உண்டாகும்.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்

எண்ணுவம் என்பது இழுக்கு. (467)

எ, என்னென்ன நேரிடும் என்பதை எண்ணி ஒரு செயலை துவங்க வேண்டும், துவங்கிய பின்பு எண்ணலாம் என்பது இழுக்கு.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று

போற்றினும் பொத்துப் படும். (468)

அ, நடைமுறைக்கு ஒத்துவராது என்று அறிந்தும் துவங்கினால் பலரால் பாராட்டப் பட்டாலும் தடைப் பட்டுவிடும்.

நன்றாற்ற லுள்ளுந் தவுறுண்டு அவரவர்

பண்பறிந் தாற்றாக் கடை. (469)

கூ, நன்மை செய்தாலும் தவறு நடப்பதுண்டு ஒவ்வொரு தனிமனித பண்பை அறியாமல் செய்யப்படுவதால்.

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மோடு

கொள்ளாத கொள்ளாது உலகு. (470)

கo, பிறரால் இகழாதபடி சிந்தித்து செயல்பட வேண்டும் காரணம் தனக்கு பொருத்தமற்றதை ஏற்காது உலகு.

அதிகார விளக்கம்!

வரவும் செலவும் வரும் ஆதாயமும் ஆராய்ந்து செயல்பட வேண்டும் பழகியவர்கள் இடத்திலேயே தேவையானவர்களை தேர்ந்தெடுத்து செயல்பட்டால் தோல்வி வராது. செயல்படும் முன் சிந்திக்க வேண்டும் செயல்பட துவங்கிய பின் சிந்திப்பது தவறு. நன்மையிலும் தீமை உண்டாகும் காரணம் அதை பெறுபவர் பண்பைப் பொருத்ததே. பிறர் இகழாதபடி நன்கு சிந்தித்து செயல்பட வேண்டும்.

காணொளி:-

https://youtu.be/EMPiPEjpWNM

## பொருட்பால் | அரசியல் | சஅ, வலியறிதல் (48)

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்

துணைவலியும் தூக்கிச் செயல். (471)

க, செயல்பட தேவைப்படும் ஆற்றல், தனக்கு இருக்கும் ஆற்றல், அடுத்தவரின் ஆற்றல், துணையாக அமையும் ஆற்றல் இவைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்

செல்வார்க்குச் செல்லாதது இல். (472)

உ, செய்ய முடிந்ததை அறிந்து அதன்படி செயல்படுபவருக்கு சாதிக்க முடியாதது இல்லை.

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி

இடைக்கண் முரிந்தார் பலர். (473)

ந, உடைமையாக கொண்ட வலிமையை சரியாக அறியாமல் ஆர்வமுடன் ஆரம்பித்து இடையிலேயே முடித்துக் கொண்டவர்கள் பலர்.

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை

வியந்தான் விரைந்து கெடும். (474)

*ச, வாய்த்த சூழலை அறிந்து நடக்காமல் தனது வலிமையின் அளவை அறியாமல் ஆர்வப்பட்டவர்கள் விரைவில் அழிவார்கள்.*

*பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்*

*சால மிகுத்துப் பெயின்.* (475)

*ரு, மயில் இறகை போன்றதாலும் அச்சு முறியும், அதுவே அளவில் மிகுந்தால்.*

*நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்*

*உயிர்க்கிறுதி ஆகி விடும்.* (476)

*சு, நுனி மரத்திற்கு ஏறியவர் போல் தனது திறனை உயர்ந்ததாக மதிப்பிட்டவர் கிளை முறிந்து உயிர் முடிவை காண்பது போலவே முடிந்து விடுவார்.*

*ஆற்றின் அறவறிந்து ஈக அதுபொருள்*

*போற்றி வழங்கு நெறி.* (477)

*எ, வழிபடுத்தும் அளவை அறிந்து கொடுக்க வேண்டும் அதுவே பொருளைப் போற்றி வழங்கும் நெறி.*

*ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை*

*போகாறு அகலாக் கடை.* (478)

*அ, ஆக்கம் தரும் வரவு அளவில் குறைந்தாலும் கேடு ஏற்படாது, செலவு பெரியதாக இல்லாது இருந்தால்.*

*அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல*

*இல்லாகித் தோன்றாக் கெடும்.* (479)

*கூ, எது எப்படி என்ற அளவறிந்து எல்லைகள் கொண்டு வாழாதவர் வாழ்க்கை, எல்லாம் இருப்பதுபோல் தோன்றி ஏதும் அற்றதாய் கெடும்.*

*உளவரை தூக்காத ஒப்புர வாண்மை*

*வளவரை வல்லைக் கெடும்.* (480)

*கo, தன்னிடம் உள்ளதை ஆய்ந்து அறியாது முறைவைத்து கொடுப்பது வளத்தை வலமாக கெடுக்கும்.*

*அதிகார விளக்கம்!*

*செயலின் வலிமை சுயம் மற்றும் துணையானவர்களின் வலிமை எதிரியின் வலிமை அறிந்து எது வேண்டாதது அதை விலக்கி செயல்பட சாதிக்க முடியாதது இல்லை. இளகுவானதாக இருப்பினும் அளவில் அதிகமானால் பாரம் கூடும். எனவே அளவறிந்து வாழ வேண்டும். வரவு குறைந்ததாக இருப்பினும் செலவு மிகாமல் இருக்க வேண்டும். தன்னிடம் உள்ளதை அறிந்து வாழ வேண்டும்.*

*காணொளி:-*

https://youtu.be/3M3-xDiWqts

## *பொருட்பால் | அரசியல் | ரு௦, இடனறிதல்* (50)

*தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்*

*இடங்கண்ட பின்அல் லது.* (491)

*க, முழுமையாக இடத்தை அறிந்து கொள்ளாமல் துவங்கக் கூடாது, எந்தச் செயலையும் இகழவும் கூடாது.*

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்

ஆக்கம் பலவுந் தரும். (492)

உ, முரண்பாடு உடைய கூட்டத்தை அடைந்தவருக்கும் நல்ல இடம் அமைந்தால் நன்மைகள் பல கிடைக்கும்.

ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து

போற்றார்கண் போற்றிச் செயின். (493)

ந, வழியற்றவரும் வழி கிடைத்து நல்ல இடம் அமர்ந்தால், வாழ்த்தாதவரும் வாழ்த்தும் வாய்ப்பை பெறுவார்.

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து

துன்னியார் துன்னிச் செயின். (494)

ச, எண்ணிய எண்ணத்தையே மாற்றிக் கொள்வார்கள் சேரும் இடம் அறிந்து சேர்ந்துக் கொண்டால்.

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்

நீங்கின் அதனைப் பிற. (495)

ரு, நிறைந்த நீரில் வெற்றிப் பெரும் முதலையை நீர் அற்ற இடத்தில் பிறவகைகளில் வெல்லப்படும். (இடம் பொறுத்தே நம் பலம் தீர்மானிக்கப் படுகிறது)

கடல்ஓடா கால்வால் நெடுந்தேர் கடல்ஓடும்

நாவாயும் ஓடா நிலத்து. (496)

சூ, நிலத்தில் ஓடும் தேர் கடலிலும், கடலில் ஓடும் நாவாய் நிலத்திலும் ஓடாது. இடம் பொறுத்தே செயல்பாடுகள் இருக்கும்.

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை

எண்ணி இடத்தால் செயின். (497)

எ, அஞ்சாமைத் தவிர வேறு துணை வேண்டாம், அளவுக்கு அதிகமாய் எண்ணம் இல்லாமல் சரியான இடத்தை அறிந்துச் செயல்பட்டால்.

சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்

ஊக்கம் அழிந்து விடும். (498)

அ, சிறிய படை என்றாலும் தனக்கு உரிய இடத்தில் இருந்து செயல்பட, வலிமையான படையும் தனது ஆர்வத்தை இழக்கும்.

சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்

உறைநிலத்தோடு ஒட்டல் அரிது. (499)

கூ, சீரும் சிறந்த பாதுகாப்பும் இல்லையென்றாலும், மனிதனைத் தான் வாழும் இடத்திற்குச் சென்று தாக்குவதுக் கடினம்.

காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா

வேலாள் முகத்த களிறு. (500)

க௦, கால்கள் சேற்றில் சிக்கிக் கொண்டால் நரியும் வீழ்த்திவிடும், வேல்கண்டும் அஞ்சாதுப் போரிட்ட யானையை.

அதிகார விளக்கம்!

தடைகளை ஆய்ந்து அறிந்தபின் தகுந்த இடம் கண்டு எதையும் துவங்கலாம். தேர்ந்தெடுத்து செயல்பட்டால் தோல்வி வராது. செயல்படும் முன் சிந்திக்க வேண்டும் செயல்பட துவங்கிய பின் சிந்திப்பது தவறு. நன்மையிலும் தீமை உண்டாகும் காரணம் அதை பெறுபவர் பண்பைப் பொருத்ததே. பிறர் இகழாதபடி நன்கு சிந்தித்து செயல்பட வேண்டும். சேற்றில் மாட்டிக் கொண்ட யானையை சிறு நரியும் சாய்க்கும் எனவே இடம் அறிந்து செயல்பட வேண்டும்.

காணொளி:-

https://youtu.be/lBWyJnCEhqY

## பொருட்பால் | அரசியல் | ரு க, தெரிந்து தெளிதல் (51)

ரு க, தெரிந்து தெளிதல் (51)

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்

திறந்தெரிந்து தேறப் படும். (501)

க, அறம் என்ற அகவாழ்வு, பொருள் என்ற புறவாழ்வு, இந்த இரண்டிலும் இன்பம் காணுதல், இவற்றின் ஆதாரமாகிய உயிரின் தன்மை ஆகிய நான்கினைத் திறம்படத் தெரிந்து கொண்டால் தேர்ச்சிப் பெறலாம்.

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்

நாணுடையான் கட்டே தெளிவு. (502)

உ, தான் பிறந்த குடியின் குற்றத்தை நீக்கி அவமானத் தழும்புக்கு அஞ்சுபவரே தெளிவுக்கு அடையாளமானவர்.

அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்

இன்மை அரிதே வெளிறு. (503)

ங, சிறப்பானவற்றைக் கற்றுக் குற்றங்கள் இல்லாதவர் இடத்திலும் தேடினால் குறை வெளிப்படாமல் இருப்பது கடினம்.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்

மிகைநாடி மிக்க கொளல். (504)

ச, ஒருவரின் குணத்தை அறிந்துக் குற்றமும் அறிந்து அவைகளில் அதிகமானதை அறிந்து அதுவே அவரது பண்பாய்க் கொள்ளவேண்டும்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்

கருமமே கட்டளைக் கல். (505)

ரு, மதிக்கப்படுவதற்கும் மற்றபடி சிறுமைப் படுவதற்கும் அவரவர் செயல்களே அவரவர்களை வழி நடத்தும் கட்டளைக் கல்.

(கட்டளைக் கல் என்பது மன்னர்கள் மக்களுக்கு வழங்கும் கட்டளைகள் பொறிக்கப்பட்டு இருப்பது)

அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்

பற்றிலர் நாணார் பழி. (506)

சு, இல்லாதவரை வளர்க்க விரும்பவேண்டும் மற்றவர்கள் பற்று இல்லாமல் பழிக்கு அஞ்சாதவர்கள்.

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்

பேதைமை எல்லாந் தரும். (507)

எ, ஆசையால் உந்தப்பட்டு அறிவற்றவரை முன்னேற்ற நினைப்பது எல்லா சிறுமைத் தனத்தையும் தரும்.

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை

தீரா இடும்பை தரும். (508)

அ, தன்னளவில் தேர்ச்சிப் பெறாமல் அடுத்தவர் தேர்ச்சிப் பெற வழிகள் செய்தால் மாறாத துன்பம் ஏற்படும்.

தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்

தேறுக தேறும் பொருள். (509)

கூ, ஆராயாமல் யாரையும் தேர்ச்சிப் பெற்றவராக ஏற்கக் கூடாது. தேர்ந்தெடுத்தப் பின்பு தேர்ச்சிப் பெரும் பொருள்களைக் கேட்டு தெளிய வேண்டும்.

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்

தீரா இடும்பை தரும். (510)

கo, தேர்ச்சிப் பெறாதவரின் விளக்கமும் தெளிந்தவரின் ஐயமும் மாறாத துன்பம் தரும்.

அதிகார விளக்கம்!

அகம் சார்ந்த அறமும், புறம் சார்ந்த பொருளும், நிலையான இன்பமும். உயரின் தன்மையும் அச்சமும் என நான்கையும் தெரிந்து தேறுவதையே தெளிவு எனலாம். நல்ல சூழலில் பிறந்தாலும் குற்றம் அற்றவனாக வாழ்வதே தெளிவு. அரியன கற்பதைக் காட்டிலும் தன் குற்றத்தை நீக்குவதே தெளிவு. குணம் குற்றம் சீர்தூக்கிப் பார்த்து மிகையானதை எடுத்துக் கொள்ள வேண்டும். தேராதவரின் பின் சென்றால் தீராத துன்பம் விளையும். தேறியவரின் ஐயமும் தேராதவரின் தெளிவும் தீராத துன்பம் தரும்.

காணொளி:-

https://youtu.be/KRVJwC4c8V4

## பொருட்பால் | அரசியல் | ருந, சுற்றந்தழால் (53)

ருந, சுற்றந்தழால் (53)

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்

சுற்றத்தார் கண்ணே உள. (521)

க, உரிமைக் கொண்டாட ஒன்றும் இல்லாத பொழுதும் உறவுப் பாராட்டுவது சுற்றத்தாரிடத்தில் உண்டு.

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா

ஆக்கம் பலவும் தரும். (522)

உ, விருப்பம் நீங்க சுற்றம் அமைந்தால் அழிவற்ற ஆக்கம் பல உண்டாகும்.

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்

கோடின்றி நீர்நிறைந் தற்று. (523)

ந, உறவாடி மகிழாதவன் வாழ்க்கை கரையற்ற குளத்தில் நீர் நிறையாதுப் போன்று கெடும்.

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்

பெற்றத்தால் பெற்ற பயன். (524)

ச, அக்கம் பக்கம் உள்ள உறவுகளுடன் இணைந்து வாழ்வது செல்வத்தால் வரும் பயன்.

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய

சுற்றத்தால் சுற்றப் படும். (525)

ரு, கொடுப்பதும், இனிமையாய் பேசுவதும் நடைமுறைப் படுத்தினால் இருக்கும் உறவுகளுடன் மேலும் உறவுகள் வளரும்.

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்

மருங்குடையார் மாநிலத்து இல். (526)

சு, நிறைய கொடுப்பதும் சினத்தை சேர்க்காமலும் இருப்பவர் பக்கம் இருக்கும் சுற்றம் போல் மாநிலத்தில் மற்றவருக்கு இல்லை.

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்

அன்னநீ ரார்க்கே உள. (527)

எ, காகம் மறைக்காமல் அழைத்து உண்ணும் செயல்போல சுற்றம் பாராட்டுபவரின் செயலும் உள்ளது.

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்

அதுநோக்கி வாழ்வார் பலர். (528)

அ, பொது நோக்கு அற்று அரசு பாகுபடுத்திப் பார்த்தால் மக்களில் பலர் பாகுபாடுக் கொண்டே வாழ்வார்கள்.

தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்

காரணம் இன்றி வரும். (529)

கூ, உறவினராய் இருந்து பிரிந்தவர் காரணம் பொருந்தாமல் மீண்டும் உறவு வரும்.

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்

இழைத்திருந்து எண்ணிக் கொளல். (530)

கo, தன்னிடம் இருந்து பிரிந்து மீண்டும் ஒரு காரணத்திற்காக வந்தவரை ஆட்சியாளர்கள் ஆராய்ந்து ஏற்கவேண்டும்.

அதிகார விளக்கம்!

இல்லாமையிலும் உறவு பாராட்டுவது உற்றார்களின் பண்பு. விருப்பம் குறையாத உறவு ஒரு சிறப்பானது. உறவு இல்லாத வாழ்வு கரையற்ற குளம் போன்றது. காகம் போல் கூடி உண்ணுதல் உறவுக்கு பெருமை. உறவு பிரிந்தாலும் மீண்டும் கூடும் வாய்ப்பு வரும். பிரிந்த உறவை இணையும் தருணத்தில் அவசியம் இணைத்துக் கொள்ள வேண்டும்.

காணொளி:-

https://youtu.be/DKgnHOLAcAQ

## பொருட்பால் | அரசியல் | ரு ச, பொச்சாவாமை (54)

ரு ச, பொச்சாவாமை (54)

இறந்த வெகுளியின் தீதே சிறந்த

உவகை மகிழ்ச்சியிற் சோர்வு. (531)

க, அழிந்துவிடும் வெகுளியைவிடத் தீமையானது, சிறந்த உவகையால் கிடைக்கும் மகிழ்ச்சியின் பொருட்டு சோர்ந்து செயல்கள் சரிவர செய்யாதது.

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை

நிச்ச நிரப்புக் கொன் றாங்கு. (532)

உ, மறதி புகழை அழிக்கும், அறிவு சார்ந்த செயலை தொடரும் துன்பம் அழிப்பதைப் போன்று.

பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து

எப்பால்நூ லோர்க்கும் துணிவு. (533)

ங, மறதி உள்ளவருக்கு புகழ் இல்லை, அது உலகத்தின் அனைத்து துறை எழுத்தாளர்களின் முடிவு.

அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை

பொச்சாப் புடையார்க்கு நன்கு. (534)

ச, அச்சம் உள்ளவருக்கு பாதுகாப்பு அரண் இல்லை அதுபோலவே இல்லை மறதி உள்ளவருக்கு நன்மை.

(உலகமே பாதுக்காப்பு அரணாக நினைப்பவர் அச்சம் தவிர்க்கிறார், நினைவாற்றால் உள்ளவர் நன்மை அடைகிறார்)

முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை

பின்னூறு இரங்கி விடும். (535)

ரு, முன்னமே ஆய்ந்து காக்க வேண்டியதைக் காக்காமல் செயல்பட்டவருக்கு தனது பிழையால் எதிர்க்காலம் ஏற்றம் அற்றதாய் அமையும்.

இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை

வாயின் அதுவொப்பது இல். (536)

சு, நினைவை இழக்காமை யார் இடத்தில் என்றும் வழுக்காமல் இருக்கிறதோ அதற்கு ஒப்பானது இல்லை.

அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்

கருவியால் போற்றிச் செயின். (537)

எ, முடியாத செயல் என்று எதுவும் இல்லை மறதியற்ற நிலை என்ற கருவியை போற்றி செயல்பட்டால்.

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது

இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். (538)

அ, சிறப்பானவற்றை விரும்பிச் செய்திட வேண்டும், மறுத்து ஏளனம் செய்தவருக்கு அடுத்தது உயர்வு இல்லை.

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாந்தம்

மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. (539)

கூ, அவமதித்து அழிந்தவரை எண்ணிக்கொள்ள வேண்டும், நாம் நமது மகிழ்வால் மறதி அடையும் பொழுது.

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்

உள்ளியது உள்ளப் பெறின். (540)

கം, எண்ணியதை அடைவது எளிது அதற்கு நாம் எண்ணியதை எண்ணியபடியே இருக்கச் செய்யவேண்டும்.

அதிகார விளக்கம்!

வெற்றியின் பெருமிதம் தரும் மறதி கோபத்தின் விளைவைவிட மோசமானதாக இருக்கும். மறதியற்ற தன்மையே அரண் போல் நம்மை காக்கும். இகழ்ந்து பேசி கெட்டவர்கள் உண்டு என்பதை மறக்க வேண்டாம். நினைத்தபடி அடைவது எளிது நினைத்தபடியே நினைவு கூறும் ஆற்றல் இருந்தால்.

காணொளி:-

https://youtu.be/0tdZbTSlQhU

## பொருட்பால் | அரசியல் | ருசு, கொடுங்கோன்மை (56)

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு

அல்லவை செய்தொழுகும் வேந்து. (551)

க, கொலை செய்வதையே தொழிலாக கொண்டவரை விட கொடுமையானது, அலை போல் தொடர்ந்து அர்த்தமற்ற செயல்களைச் செய்யும் ஆட்சியாளர்களின் ஆட்சி.

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்

கோலொடு நின்றான் இரவு. (552)

உ, கொலைக் கருவியைக் காட்டி கொடு என்பதைப் போன்றது ஆணைகள் கொண்டு மிரட்டும் ஆட்சியாளர்களின் கண்முடித்தனம்.

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்

நாடொறும் நாடு கெடும். (553)

ங, நாள்தோறும் ஆராய்ந்து செயலாற்றாத ஆட்சியாளர்களின் நாடு நாள்தோறும் கெடும்.

கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்

சூழாது செய்யும் அரசு. (554)

ச, பொருளையும், குடிமக்களையும் சேர்ந்து இழக்கும் ஆணைகளை சிறப்புறச் செய்யாத அரசு.

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே

செல்வத்தைத் தேய்க்கும் படை. (555)

ரு, துன்பத்தை தாங்காமல் அழும் கண்ணீர், இருக்கும் செல்வத்தை அழிக்கும் படை போன்றது.

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்

மன்னாவாம் மன்னர்க் கொளி. (556)

சு, ஆட்சியாளருக்கு அவசியம் சிறந்த ஆணைகள், அப்படி இல்லையென்றால் ஆட்சியாளருக்கு நற்புகழ் வாய்க்காது.

துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்

அளியின்மை வாழும் உயிர்க்கு. (557)

எ, மழைத்துளி இல்லாது போனால் இவ்வுலகிற்கு ஏற்றது இல்லை. அதைப் போலவே ஆட்சியர் கொடுக்கும் தன்மையற்று இருப்பது, வாழும் உயிர்க்கு ஏற்றது இல்லை.

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா

மன்னவன் கோற்கீழ்ப் படின். (558)

அ, துன்பத்திலும் துன்பமானது நல் ஆணைகள் கொண்டு ஆளாத ஆட்சியாரின் கீழ் உடைமைக் (குடியுரிமை)கொண்டு இருப்பது.

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி

ஒல்லாது வானம் பெயல். (559)

கூ, ஆணைகள் கோடி ஆட்சியாளர் செய்வது, வானம் பெய்தும் கோடி நீர்தங்கும் இடத்தில் நீர் தங்காமல் போவதைப் போன்றதே.

(நீர் நிலைகள் மழையை தக்கவைத்துக் கொள்ளாததைப் போலவே ஆணைகள் அதிகம் செய்யும் அரசால் நன்மைகள் இருக்காது)

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்

காவலன் காவான் எனின். (600)

கo, ஆக்கப் பணிகள் குறையும், தொழில் நுட்ப நூல்கள் பெருகாது, ஆட்சியாளர் அரசை கவனிக்காமல் இருந்தால்.

அதிகார விளக்கம்!

கொலை பாதகரை விட கொடுமையானவர் கொடிய ஆட்சியர். துன்பத்தை விட துன்பமும் அவரே தருவார். அர்த்தமற்ற ஆணைகள் குடி மக்களை இழுக்கச் செய்யும். ஆக்கப் பூர்வமான செயல்கள் குறையும்படி செய்பவர்கள் நல்லாட்சி தருபவர்கள் இல்லை.

காணொளி:-

https://youtu.be/cmGhzfK-qys

## பொருட்பால் | அரசியல் | ரு எ, வெருவந்த செய்யாமை (57)

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்

ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. (561)

க, தகுந்த ஆதாரத்தை ஆராய்ந்து மீண்டும் அந்தச் செயலில் (குற்ற) தலைப்படாது இருக்க ஏற்றபடி தண்டிப்பது அரசின் செயல்.

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்

நீங்காமை வேண்டு பவர். (562)

உ, ஆக்கபூர்வமான செயல்கள் தொடர வேண்டுபவர் கடுமையாய் விமர்சித்து மென்மையாய் தண்டிக்க வேண்டும்.

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்

ஒருவந்தம் ஒல்லைக் கெடும். (563)

ங, வெறுப்பு வந்து செயல்படும் கொடிய ஆட்சியாளன் இருந்தால் ஒற்றுமை பகைமையாய் மாறி உள்ளதும் கெடும்.

இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்

உறைகடுகி ஒல்லைக் கெடும். (564)

ச, இறை விரும்பாதவன் என்று சொல்லப்படும் கடுஞ் சொல்லுக்கு உட்பட்ட ஆட்சியாளர் எல்லை சுருங்கி சீக்கிரத்தில் அழிவார்.

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்

பேஎய்கண் டன்னது உடைத்து. (565)

ரு, அரிதாக கேட்டு இனிமை அற்று பார்ப்பவன் அடைந்த அதிகபட்ச செல்வம் ஏதும் செய்யமுடியாத பேய் கண்ட காட்சி போன்றது.

கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்

நீடின்றி ஆங்கே கெடும். (566)

சு, கடுமையான வார்த்தையும், கருணையற்ற பார்வையும் உடையவனின் அதிகபட்ச செல்வம் நீண்ட நாள் நிலைக்காமல் அழியும்.

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்

அடுமுரண் தேய்க்கும் அரம். (567)

எ, வன்மையான வார்த்தையும் தாங்கமுடியா தண்டனையும் ஆட்சியாளரின் எதிரியற்ற தன்மையை அறுக்கும் அரம் போன்றது.

இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்

சீறின் சிறுகும் திரு. (568)

அ, மனிதாபிமானத்துடன் செயலாற்ற எண்ணாத ஆட்சியாளர் சினத்துடன் செயல்பட்டால் மங்கும் புகழ்.

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்

வெருவந்து வெய்து கெடும். (569)

கூ, போர் மூண்ட காலத்தில் அடக்கி ஆள ஆடசியாளர் வெருப்படைந்து சீர் கெடுவர்.

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது

இல்லை நிலக்குப் பொறை. (570)

கo, கற்று அறியாதவர்களை இணைக்கும் கடுமையான ஆட்சி. அதைவிட வலிமையானது இல்லை நிலத்திற்குச் சுமை.

அதிகார விளக்கம்!

வெறுப்புடன் நோக்காமல் தகுந்த ஆதாரத்தை அறிந்து தீர்ப்பு கூறுவது ஆட்சியர் கடமை. மேலும் வெறுப்புடன் தீய சொற்களை பயன்படுத்துவதும் மனிதாபிமானமற்ற செயல் செய்வதும் தீரா துன்பத்தையும் நிலத்திற்கு ஆறாத பழியும் உண்டாக்கும்.

காணொளி:-

https://youtu.be/C7vJ65XvIoM

## பொருட்பால் | அரசியல் | ருகூ, ஒற்றாடல் (59)

ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்

தெற்றென்க மன்னவன் கண். (581)

க, நடப்புகளை அறிவதும், விளக்கம் தரும் நூல்களும் என இரண்டும் சிறந்த ஆட்சியாளருக்கு கண் போன்றது.

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்

வல்லறிதல் வேந்தன் தொழில். (582)

உ, எல்லா தரப்பு மக்களுக்கும் எப்படியெல்லாம் ஆட்சி மாற்றங்களை நிகழ்த்துகிறது என்பதை எல்லா வகையிலும் சரியாக அறித்திருப்பது ஆட்சியாளர்களின் தொழில்.

ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்

கொற்றங் கொளக்கிடந்தது இல். (583)

ரு, ஆய்ந்து அறிபவரை அறிந்து நடப்புகளை தெரிந்துக் கொள்ளா ஆட்சியாளரின் வெற்றி நிலைத்த வெற்றியாய் இருக்காது.

வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு

அனைவரையும் ஆராய்வது ஒற்று. (584)

ச, செயல்படுபவர், தனக்கு உறவு முறைக் கொண்டவர், வேண்டத்தகாதவர் என்று பாகுபாடு அற்று அனைவரையும் ஆராய்வதே ஒற்று.

கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்

உகாஅமை வல்லதே ஒற்று. (585)

ரு, கண்டுக்கொள்ள முடியாத உருவமுடன், எதைக்கண்டும் அஞ்சாமல், எந்நிலையிலும் உள்ளதை சொல்லாமல், வல்லமையுடன் செயல்படுவதே ஒற்று.

துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்து

என்செயினும் சோர்விலது ஒற்று. (586)

சு, எதன்மீதும் பற்று இல்லாத துறந்தவர்கள் போல் மாறி தன்னலம் மறந்து ஆராய்ந்து எத்துன்பம் செய்தாலும் சோர்வு இல்லாமல் செயல்படுவதே ஒற்று.

மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை

ஐயப்பாடு இல்லதே ஒற்று. (587)

எ, அறியமுடியாமல் மறைந்தவற்றை கேட்டு அறிந்து, அப்படி அறிந்ததில் ஐயப்பாடு இல்லாமல் செயல்படுவதே ஒற்று.

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்

ஒற்றினால் ஒற்றிக் கொளல். (588)

அ, கண்காணித்து தந்த தகவல்களை மேலும் ஒரு கண்காணிப்பினால் கண்காணித்து அறிந்துக் கொள்ளவேண்டும்.

ஒற்றெற் றுணராமை ஆள்க உடன்மூவர்

சொற்றொக்க தேறப் படும். (589)

கூ, கண்காணித்து தந்த தகவல்களை சரியாக உணரவேண்டும் என்றால் மேலும் மூன்று நபர்களின் தகவலுடன் ஒப்பிட்டு அறிந்துக் கொள்ளவேண்டும்.

சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்

புறப்படுத்தான் ஆகும் மறை. (590)

கo, சிறப்பானது என்று கண்காணித்தலை பாராட்டுவது செய்யக்கூடாது. செய்தால் மறைப்பொருளை வெளிப்படுத்தியது போல் ஆகும்.

அதிகார விளக்கம்!

நடப்புகளை அறிந்து நூல்களில் தெளிவு பெற்று இருப்பதற்கே கண் உள்ளது. கண்காணிப்பதற்கும் இதுவே அவசியம். செயல்களில் மாற்றம் இல்லாதபடியும், அதே சமயத்தில் செயல்கள் தந்த மாற்றத்தை காண்காணிப்பதும் ஆட்சியாளர்களின் பணி. காண்காணிப்பை பலர் மூலம் உறுதி செய்வது நல்லது.

காணொளி:-

https://youtu.be/8Yvy8GfVmPk

## பொருட்பால் | அரசியல் | சூ௦, ஊக்கமுடைமை (60)

உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்

உடையது உடையரோ மற்று. (591)

க, உலக நன்மைகளை பெற்றவர் எனப்படுவது உற்சாகமுடன் ஆர்வமாய் செயல்படுவது, அப்படி இல்லை என்றால் உள்ளதும் உள்ளபடி இல்லாமல் மாறும்.

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை

நில்லாது நீங்கி விடும். (592)

உ, உள்ளத்தில் உரிமையாக அடைந்ததே உரிமையானது. பொருளை அடைந்தது நிலை இல்லாமல் விலகிவிடும்.

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்

ஒருவந்தம் கைத்துடை யார். (593)

ங, பயன் அற்றுப் போனதே என்று தன்நிலை இழக்க மாட்டார், ஊக்கத்தை ஒருவர் தனது கைத்துணையாய் வைத்துக்கொண்டால்.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா

ஊக்க முடையா னுழை. (594)

ச, பயனுள்ள செயல்கள் வீணாகாமல் நடக்கும், தளராத ஊக்கத்தை உரிமையாக அடைந்த ஒருவர் இடத்தில்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்

உள்ளத் தனையது உயர்வு. (595)

ரு, நீரின் அளவு தண்டு நீண்டு, மலரை வெளிக்காட்டும் அதுபோலவே உள்ளத்தின் அளவிற்கு ஏற்ப மனிதர்களின் உயர்வும் இருக்கும்.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது

தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (596)

சூ, உள்ளத்தின் எண்ணங்கள் அனைத்தும் உயர்வானதாகவே இருக்கவேண்டும். உயர்வற்றவை, விலக்கினாலும் விலகாவிட்டாலும் வீரியம் அற்றுப்போகும்.

சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்

பட்டுப்பா டூன்றுங் களிறு. (597)

எ, அழியும் தருணத்திலும் தளரமாட்டார்கள் உள்ளத்தில் வலிமை உடையவர்கள், அம்புகளால் மறைத்தாலும் அடங்காது செயல்படும் ஆண்யானை போன்று.

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து

வள்ளியம் என்னும் செருக்கு. (598)

அ, ஊக்கம் கொண்ட உள்ளம் இல்லாதவர் உலகத்தை வென்றோம் என்ற பெருமை அடையமுடியாது.

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை

வெரூஉம் புலிதாக் குறின். (599)

கூ, கூரிய தந்தம் இல்லை என்றாலும் யானையை மடக்கும் ஆர்வம் கொண்ட புலியே ஊக்கத்திற்கு அடையாளம்.

உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃ தில்லார்

மரம்மக்க ளாதலே வேறு. (600)

கo, ஒருவருக்கு உரமாக இருப்பது உள்ளம் எண்ணமற்று வெறுமை அடையும் செல்வம். அப்படி அடையாதவர்கள் செய்யப்பட்ட மனிதர்களே அன்றி வேறு இல்லை.

அதிகார விளக்கம்!

உரிமையாக அடையவேண்டிய உடைமைப் பொருள் ஊக்கம், அது இல்லை என்றால் அடைந்த எல்லாம் மாறும். ஊக்கம் உள்ளவர்கள் தோல்வி கடந்து வெற்றி அடைவார். ஊக்கமே வாழ்வின் நிலைப்பாட்டை தீர்மானிக்கும். தந்தம் உள்ள யானையை எதிர்க்கும் புலி ஊக்கத்திற்கு நல்ல உவமை. ஊக்கம் இல்லாதவர் இயந்திர மனிதனே.

காணொளி:-

https://youtu.be/kASgF5a1Cks

## பொருட்பால் | அரசியல் | சூ உ, ஆள்வினையுடைமை (62)

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்

பெருமை முயற்சி தரும். (611)

க, அரியது என்று செயல்பட அச்சம் அடைவது கூடாது. முயற்சி செய்வதே பெருமையானது.

வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை

தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு. (612)

உ, செயல்படும் நேரம் செயல் சிதைய செய்வதும் முழுமை பெறாமல் விட்டுவிடுவதுமாய் இருப்பவரை உலகம் ஏற்பது இல்லை.

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே

வேளாண்மை என்னுஞ் செருக்கு. (613)

ங, ஊக்கம் என்ற உயர்பண்பின் வெளிப்பாடே அடுத்தவருக்கு உதவிடும் மகிழ்வை தருகிறது.

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை

வாளாண்மை போலக் கெடும். (614)

ச, ஊக்கம் இல்லாதவர் உதவுதல், வீரம் இல்லாதவர் கையில் இருக்கும் கத்தி போல் பயனற்றுப் போகும்.

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்

துன்பம் துடைத்தூன்றும் தூண். (615)

ரு, இன்பத்தை இலக்காக எண்ணாமல் செயலைச் செய்ய முற்படுபவர், தனது உறவுகளுக்கு துன்பம் துடைத்துக் காக்கும் தூண் போன்றவர்.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும். (616)

சு, முயற்சி (ஆர்வமுடன் செயல்பட துணிவது) நற்செயல்களை உருவாக்கும். முயற்சி அற்று இருப்பது வறுமையை ஏற்றுக்கொள்ளும்.

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்

தாளுளான் தாமரையி னாள். (617)

எ, முயற்சி அற்றவர் இடத்தில் மூதேவி இருக்கிறாள். முயற்சி உள்ளவரிடம் கலைமகள் தங்குகிறாள்.

(ஆர்வமற்றவருக்கு மூளை செல்கள் பலமற்று திறமைகள் குறைகிறது. ஆகவே அதை மூதேவி (முடக்கப்பட்ட மூளை) என்றும், ஆர்வமுடன் செயல்பட மூளை செல்கள் மேலும் விரிகிறது, எனவே ஆயிரம் தாமரை மலரில் ஆற்றல் வளர்கிறது)

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து

ஆள்வினை இன்மை பழி. (618)

அ, புலன் இல்லாமல் இருப்பது எந்த மனிதருக்கும் பழிக்கும் ஒன்றாக இருக்காது. செய்யவேண்டியதை செய்யாமல் இருந்தால் பழிக்கப்படும்.

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலி தரும். (619)

கூ, வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வீக நிலை அடைந்தவரால் முடியாத செயல்களையும் தனது உடல் வருத்தி செய்யும் முயற்சியால் சாதிக்க முடியும்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்

தாழாது உஞற்று பவர். (620)

கo, தலைவிதியையும் தனக்கு சாதகமாக பார்ப்பார் சோர்வின்றி தளராது பெருமுயற்சி செய்பவர்.

அதிகார விளக்கம்!

செயல்பட ஆர்வமாக இருப்பதே எல்லா வெற்றிக்கும் ஆதாரம். எனவே முழுமை அடையும் வரை செயல்பட துணிய வேண்டும். ஐம்பொறியில் சில இல்லாது போனாலும் பழியாகாது ஆள்வினை இல்லாது இருப்பதே பழி. வாழ்வாங்கு வாழ்பவரை கடந்து வாழ உடல் வருத்த உழைத்தால் முடியும். தலைவிதியையும் மாற்றும் வல்லமை உழைப்பிற்கு உண்டு.

காணொளி:-

https://youtu.be/qFfzVeynp5I

## பொருட்பால் | அரசியல் | சுந, இடுக்கண் அழியாமை (63)

இடுக்கண் வருங்கால் நகுக அதனை

அடுத்தூர்வது அஃதொப்ப தில். (621)

க, இக்கட்டான நேரங்களை மகிழ்வுடன் எதிர்கொள். அதற்கு அடுத்து வருவது அதைப்போல் இருக்காது.

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்

உள்ளத்தின் உள்ளக் கெடும். (622)

உ, வெள்ளத்தில் முழ்கும் அளவு வரும் தொல்லைகள், அறிவு உடையவர்களின் மனதின் எண்ணத்தினாலேயே அழிந்துவிடும்.

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு

இடும்பை படாஅ தவர். (623)

ங, துன்பத்திற்கு துன்பம் தருவர் துன்பத்திற்கு துன்பப்படாதவர்.

மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற

இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. (624)

ச, கரடுமுரடான பாதையை கடக்கும் களிறு போல், தனக்கு வந்த துன்பத்தினால் இடர்படாமல் கடக்க வேண்டும்.

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற

இடுக்கண் இடுக்கட் படும். (625)

ரு, அடுத்தடுத்து தொடர்ந்து வந்தாலும் அழிவற்றவர் பெற்ற துன்பம் துன்பப்பட்டு போகும்.

அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று

ஓம்புதல் தேற்றா தவர். (626)

சூ, விலகிவிட்டது என்று வேதனைபடலாமா? பெற்றதைக் கொண்டு சரியாக வாழாதவர்.

இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்

கையாறாக் கொள்ளாதாம் மேல். (627)

எ, இயல்பு, உடல் துன்பமடைதல் என்பதால் கலக்கமடைவதை கைகொள்ளாது மேன்மையான அறிவு.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்

துன்பம் உறுதல் இலன். (628)

அ, இன்ப நாட்டம் இல்லாமல் இடர்பாடுகள் இயல்பு என்று உணர்ந்தவர் துன்பப்படுவது இல்லை.

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்

துன்பம் உறுதல் இலன். (629)

கூ, இன்பமான சுழலில் இன்பத்தின் மேல் அக்கறை இல்லாதவர் துன்பமான சுழலில் துன்பம் அடைவது இல்லை.

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்

ஒன்னார் விழையுஞ் சிறப்பு. (630)

கo, இடர்பாடுகள் இன்பமானது என்று செயல்படுபவர் எதிரிகளும் பாராட்டும் சிறப்பை பெறுவார்.

அதிகார விளக்கம்!

இடர் கண்டு அழியாமல் இருக்க நகைப்புடன் அதைப்பார்த்து உள்ளத்தின் திறத்தை வளர்த்து இடர்பாட்டிற்கே இடர்பாடு தரவேண்டும். இடர்பாடுகள் நம்மை வளர்க்கும் அற்புத சுழல் என உணர்ந்தவர் இன்பத்தில் நிலைக்கிறார். இன்பம் கருதி செயல்படாமல் இடர்பாடுகளும் இன்பத்திற்கே என்பதே சிறப்பு.

காணொளி:-

https://youtu.be/MkkCtAX-rCs

## பொருட்பால் | அமைச்சியல் | சூ ரு, சொல்வன்மை (65)

நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்

யாநலத்து உள்ளதூஉம் அன்று. (641)

க, நன்மை பயக்கும் வார்த்தையே நாநலம் என்ற நலனுடைமை (ஆரோக்கியம்) அத்தகைய நலம் போல் அடைந்த நலத்தில் சிறந்தது இல்லை.

ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்

காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. (642)

உ, வளர்ச்சியும் அழிவும் வார்த்தையால் வருவதால் நிதானித்தும் சோர்வு ஏற்படாமலும் பேச வேண்டும்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்

வேட்ப மொழிவதாம் சொல். (643)

ங, கேட்பவரின் மனநோய் தீர்க்க உகந்ததாகவும், கேட்காதவர் கேட்க விரும்பும் வகையிலும், வார்த்தைகள் அமைத்துப் பேசவேண்டும்.

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்

பொருளும் அதனினூஉங்கு இல். (644)

ச, கேட்பவரின் திறனை அறிந்து வார்த்தையை பயன்படுத்த வேண்டும். அத்தகைய சொற்களைப் போல் அறமும் பொருளும் வேறு இல்லை.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை

வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. (645)

ரு, சொல்லப்படும் சொல்லுக்கு மேலான சொல் இல்லாதபடியும், வெல்ல முடியாதபடியும் ஆராய்ந்து சொல்லவேண்டும்.

வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்

மாட்சியின் மாசற்றார் கோள். (646)

சூ, வேண்டியதை சொல்வதும், அடுத்தவர் சொல்லின் பயனை கேட்டு அறிவதும், உன்னதத்தின் குறையற்றவர்களின் குறிக்கோள்.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை

இகல்வெல்லல் யார்க்கும் அரிது. (647)

எ, சொல்வதில் வல்லவனை, சோர்வில்லாதவனை, எதற்கும் அஞ்சாதவனை, இழிவு செய்து வெல்வது எந்த ஒருவருக்கும் அரிதானதே.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது

சொல்லுதல் வல்லார்ப் பெறின். (648)

அ, கேட்டவுடன் விரைந்து செயல்படும்படி தூண்டும் விநோதம் வரிசைப்பட இனிமையாக சொல்ல வல்லவரிடத்தில் இருந்து சொல்களைப் பெற்றால்.

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற

சிலசொல்லல் தேற்றா தவர். (649)

கூ, அளவிற்கு அதிகமான பல சொற்களை சொல்ல ஆசைப்படுவார்கள் இடத்திற்கு தேவையான குறைவற்ற சில சொற்களில் தேர்ச்சி பெறாதவர்கள்.

இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது

உணர விரித்துரையா தார். (650)

கo, நற்கொடியில் மலர்ந்தும் வாசம் வீசாத மலருக்கு ஒப்பானவர், தான் கற்றதை அடுத்தவர் உணரும்படி விளக்கிச் சொல்ல முடியாதவர்.

அதிகார விளக்கம்!

நலம் அடைந்தவர் என்றால் சொல் வளம் பெற்றவர். சொல் வெல்லவும் வீழ்த்தவும் செய்யும் என்பதால் திறனறிந்து சொல்ல வேண்டும். பல சொல்ல விரும்பாமல் மறுக்க முடியாதபடி சொல்லை சொல்ல வேண்டும். நல்வாசம் வீசும் செடியில் பூத்தும் வாசம் தராத மலர் போன்றவர் தான் அறிந்ததை அடுத்தவர் உணரச் செய்யாதவர்.

காணொளி:-

https://youtu.be/5eetE-YTRDc

## பொருட்பால் | அமைச்சியல் | சூ சூ, வினைத்தூய்மை (66)

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்

வேண்டிய எல்லாம் தரும். (651)

க, நல்ல துணை சிறந்த வெற்றியை தரும், நல்ல செயல் தேவையான அனைத்தும் தரும்.

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு

நன்றி பயவா வினை. (652)

உ, எப்போதும் வேண்டாம் என்று ஒதுக்க வேண்டும் பெருமையும், அடுத்தவருக்கு உதவி செய்து நன்றி பெரும் தன்மையும், இல்லாத செயல்களை.

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை

ஆஅதும் என்னு மவர். (653)

ங, ஒழிக்க வேண்டும் உண்மை ஒளி மறைக்கும் செயல்களை மேன்மையை வேண்டுபவர்.

இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்

நடுக்கற்ற காட்சி யவர். (654)

ச, இக்கட்டான சுழல் ஏற்பட்டாலும் பழிக்கப்படும் செயலை செய்யமாட்டார் தெளிவான ஒன்றை பார்த்தவர்.

எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்

மற்றன்ன செய்யாமை நன்று. (655)

டு, ஏற்க முடியாததையும், இழிவானதையும் செய்யக்கூடாது. தவறி செய்தாலும் மீண்டும் அதை செய்யாது தவிர்த்துவிடுவது நன்று.

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க

சான்றோர் பழிக்கும் வினை. (656)

சு, பெற்றதாயின் பசியை தணிப்பது என்றாலும், உதாரணமாக வாழ்பவர்கள் பழிக்கும் செயலை செய்யக்கூடாது.

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்

கழிநல் குரவே தலை. (657)

எ, அதிகபட்ச பழியுடன் அடையும் உயர்வைவிட, முன்மாதிரியாய் இருந்து, கழிந்துவிடும் வறுமையை அடைவது முதன்மையானது.

கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்

முடிந்தாலும் பீழை தரும். (658)

அ, வெறுக்கப்பட்டதை வெறுக்காமல் ஏற்று செய்தவருக்கு, அச்செயல் முடிவு பெற்றாலும் பெருந்துன்பமே விளையும்.

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்

பிற்பயக்கும் நற்பா லவை. (659)

கூ, பிறர் வறுந்தப் பெற்றதெல்லாம் தான் வறுந்தப் போகும், நல்வழியில் பெற்றதோ இழப்பினும் பிறகு நன்மை தரும்.

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்

கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று. (660)

கo, சூழ்ச்சியால் பொருள் ஈட்டி வைத்தால், சுடாத மண்பாத்திரத்தில் நீர் நிரப்ப கரைவது போல் உரிய பலன் அற்றுப்போகும்.

அதிகார விளக்கம்!

துணையால் வரும் நன்மை ஆக்கம் தரும் என்றால் செயல்படுவதால் தேவையான எல்லாம் தரும். எனவே செயல்படுதல் பெருமைக்காக இல்லாமல், இழிவானதாகவும் இல்லாமல் திடமாக இருக்க வேண்டும். சூழ்ச்சியால் சேர்க்கும் பொருள் சுடாத மண்பாத்திரத்தில் வைத்தது போல் கரையும்.

காணொளி:-

https://youtu.be/E7QM8GZq5Xw

## பொருட்பால் | அமைச்சியல் | சூஅ, வினைசெயல்வகை (68)

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு

தாழ்ச்சியுள் தங்குதல் தீது. (671)

க, சூழ்நிலைகளை ஆராய்ந்து முடிவுகளை முன் நிறுத்தி செயல்பட துணியவேண்டும். அப்படி துணிந்தப்பின் செயல்படாமல் இருப்பது தீங்காகும்.

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க

தூங்காது செய்யும் வினை. (672)

உ, இயல்பாய் விடு இயல்பாகவே பல செயல்கள் நடக்கும். இயல்பாக விடாதே துணையாக இருக்கவேண்டிய செயல்களை.

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்

செல்லும்வாய் நோக்கிச் செயல். (673)

ந, செய்யமுடிந்ததை எல்லாம் நன்மைக்காக செய்யுங்கள். முடியாததை முடிப்பதற்கான வழி அறிந்து செய்யுங்கள்.

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்

தீயெச்சம் போலத் தெறும். (674)

ச, செயல், எதிர்ப்பு என்ற இரண்டின் முடிவற்றதன்மையை ஆராய்ந்தால் தீயின் முடிவு போல் தொடரும். (எனவே முழுமையாக முடிக்க வேண்டும்)

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்

இருள்தீர எண்ணிச் செயல். (675)

ரு, எதை, எத்தகைய கருவியுடன், எப்பொழுது, எவ்விடத்தில், செய்யவேண்டும் என்ற ஐந்தையும் ஐயமற சிந்தித்து செயல்பட வேண்டும்.

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்

படுபயனும் பார்த்துச் செயல். (676)

சு, செயல் முடிவும், இடையில் உண்டாகும் தடைகளும், செயல் முடிவில் உண்டாகும் பயனையும் ஆராய்ந்து செய்யவேண்டும்.

செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை

உள்ளறிவான் உள்ளம் கொளல். (677)

எ, செய்யவேண்டிய செயல்களை செய்பவரின் செயல்பாடுகள் முறையாக இருப்பின், அச்செயல்களை உணர்பவரின் உள்ளம் கவரப்படும்.

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்

யானையால் யானையாத் தற்று. (678)

அ, செயல்படுபவர் செயல்படுவதிலிருந்து பிற செயல்களையும் செய்துகொள்வதை எண்ணிப் பார்க்கையில் யானையை பயன்படுத்தி யானையைப் பிடிப்பது தோன்றுகிறது.

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே

ஒட்டாரை ஒட்டிக் கொளல். (679)

கூ, நாடியவர்களுக்கு நன்மை செய்யவேண்டும். அதைவிட விரைந்து இணக்கமற்றவரை இணங்கச் செய்ய வேண்டும்.

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்

கொள்வர் பெரியார்ப் பணிந்து. (680)

கo, உடன் இருப்போர் அஞ்சி நடுங்கும் குறையை அறிந்து, பெரியார் என்றும் பணிந்துக் கொள்வர்.

அதிகார விளக்கம்!

சூழ்நிலை அறிந்து துணிந்தால் தீமைகளை தடுக்கலாம். இயல்பாக சில செயல் நடக்கும் எனவே இயல்பாகவும் இருக்கவேண்டும், தேவை என்றால் தகந்த கருவியுடன் செயல்பட வேண்டும். உடன் வருபவர் அஞ்சினால் அச்சத்தை போக்குவது பெரியவர்களின் பண்பு.

காணொளி:-

https://youtu.be/RVl3ePS7Pio

## பொருட்பால் | அமைச்சியல் | சுகூ, தூது (69)

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்

பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. (681)

க, அன்பை உடமையாகவும், சிறந்த குடும்பத்தை சேர்ந்தவராகவும், ஆட்சியாளரை மதிக்கும் பண்புள்ளவராகவும் இருப்பது தூது உரைப்பவர்களின் பண்பு.

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு

இன்றி யமையாத மூன்று. (682)

உ, அன்பு, அறிவு, தேர்ந்தெடுத்த வார்த்தைகளை உரைக்கும் திறன், இவைகள் தூது உரைப்பார்க்கு முக்கியமான மூன்று.

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்

வென்றி வினையுரைப்பான் பண்பு. (683)

ந, நூல் படைப்பவர்களில் வல்லமையான நூல் படைக்க அவைகளை கற்று அறிய வேண்டும். அதுபோலவே, வேல் பாய்ச்சுபவர்களை கடந்து வெற்றிக்கான செயல்களை உரைப்பது பண்பு.

அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்

செறிவுடையான் செல்க வினைக்கு. (684)

ச, அறிவு, உருவம், தேர்ந்த கல்வி, இம் மூன்றையும் செழுமையான அடைந்தவர் செல்லலாம் செயல்முடிக்க.

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி

நன்றி பயப்பதாம் தூது. (685)

ரு, தொகுத்துச் சொல்லித் தேவையற்றதை நீக்கி இன்புறும்படி எடுத்துரைத்து நன்றி பாரட்டும்படி நன்மை தரவல்லதாக அமைவதே தூது.

கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்

தக்கது அறிவதாம் தூது. (686)

சு, கற்று அறிந்து காண்பதற்கு அஞ்சாமல் சொல்லவேண்டியதை சொல்லி தகுந்த நேரத்தில் சரியானதை அறிவதே தூது.

கடனறிந்து காலங் கருதி இடனறிந்து

எண்ணி உரைப்பான் தலை. (687)

எ, ஆற்றவேண்டிய கடமை அறிந்து, தகுந்த காலத்தை கருத்தில் கொண்டு, இடத்தை அறிந்து, சிந்தித்து எடுத்துரைப்பதே தூதின் தலைமையானது.

தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்

வாய்மை வழியுரைப்பான் பண்பு. (688)

அ, தேவையற்றதை நாடாத தூய்மை, நன்மைக்கு துணையாதல், அச்சமற்ற துணிவு இம்மூன்றின் உண்மைத் தன்மையுடன் இருப்பதே தூதுரைப்பவர் பண்பு.

விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்

வாய்சேரா வன்கணவன். (689)

கூ, தவிர்க்க வேண்டியதை அரசுக்கு எடுத்துரைப்பான் வலிக்காமல் சோர்வற்ற வார்த்தை பயன்படுத்தும் திடமானவன்.

இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு

உறுதி பயப்பதாம் தூது. (690)

கo, இயற்கையின் இறுதிப் பயன் உடனே கிடைப்பினும் எந்தக்குறையும் இல்லாமல் தன் மன்னனின் நிலையை உறுதிப்பட உரைப்பதே தூது.

அதிகார விளக்கம்!

அன்பு நற்குடி மன்னரை மதித்தல் என உள்ளவரே தூதிற்கு சரியானவர். தொகுத்து தேவையானதை மட்டும் தெளிவாக நூல் எழுத வல்லவர் போலும் சிறந்த வேல் வீச்சு போலும் தூது இருக்க வேண்டும். மரணம் வரும் என்றாலும் அஞ்சாமல் மன்னவனுக்கு உண்மை உரைக்கவேண்டும்.

காணொளி:-

https://youtu.be/bCQAAozyGxs

# பொருட்பால் | அமைச்சியல் | எ க, குறிப்பறிதல் (71)

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்

மாறாநீர் வையக் கணி. (701)

க, பேசாது பொழுதும் பார்த்தே குறிப்பறிந்துக் கொள்பவர் எந்நிலையிலும் மாறாது நீரால் நிறைந்த உலகிற்கு அணியாவார்.

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்

தெய்வத்தோ டொப்பக் கொளல். (702)

உ, ஐயம் இல்லாமல் அடுத்தவர் மனதை உணர்பவரை தெய்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்

யாது கொடுத்தும் கொளல். (703)

ங, குறிப்புகளை கேட்டு அதன் உள்நோக்கத்தையும் உணர்பவரை, குழுவுக்குள் எப்பதவியாவது கொடுத்து உறுப்பினராக ஏற்க வேண்டும்.

குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை

உறுப்போ ரனையரால் வேறு. (704)

ச, ஒன்றை குறித்து கூறாமலேயே புரிந்துக் கொள்பவரை ஏனைய உறுப்பினர்களிடமிருந்து வேறுபடுத்திப் பார்க்கவேண்டும்.

குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்

என்ன பயத்தவோ கண். (705)

ரு, குறிப்புகளை கேட்டும் அதன் உள்நோக்கத்தை உணரவில்லை என்றால் கண்கள் இருந்தும் பயன் இல்லை.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்

கடுத்தது காட்டும் முகம். (706)

சூ, அருகில் உள்ளதை பளிங்கு எப்படி காட்டுமோ அப்படி நெஞ்சத்தில் உள்ளதை முகம் காட்டும்.

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்

காயினும் தான்முந் துறும். (707)

எ, மகிழ்வையும், துன்பத்தையும் முகம் போல் எளிதில் வெளிப்படுத்துவது வேறோன்று இல்லை.

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி

உற்ற துணர்வார்ப் பெறின். (708)

அ, அகம் அறிந்து ஆற்ற வல்லவரை துணையாக பெற்றால் அவர் முகம் பார்க்க நிற்பதே போதுமானது.

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்

வகைமை உணர்வார்ப் பெறின். (709)

கூ, பகையையும் நட்பையும் கண்கள் வெளிப்படுத்தும், கண்களின் தன்மையை உணரும் ஆற்றல் பெற்றால்.

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்

கண்ணல்லது இல்லை பிற. (710)

கo, நுட்பமானதை உணர்பவர்கள் அளக்கும் கருவி எது என பார்த்தால் கண்ணே அன்றி வேறு இல்லை.

அதிகார விளக்கம்!

பேசாத ஒருவரின் மன ஓட்டத்தை உணர்பவர் உலகின் அணியாவர், அவரை தெய்வமாக ஏற்க வேண்டும், அவரை நம் கூட்டத்தில் இணைக்க வேண்டும், அவருக்கு தனி இடம் தரவேண்டும், உள்ளத்தை முகம் பிரதிபளிக்கிறது. அது கண்களில் தெளிவாக அறியமுடிகிறது எனவே நுட்பமாக அளக்கும் அளவு கோலாக கண்கள் இருக்கிறது.

காணொளி:-

https://youtu.be/p-61zjDZru8

**காணொளி:** https://youtu.be/p-61zjDZru8

## பொருட்பால் | அமைச்சியல் | எ ௩, அவை அஞ்சாமை (73)

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்

தொகையறிந்த தூய்மை யவர். (721)

க, பேச்சின் வகைகளை அறிந்த வல்லவர், பேச தயங்கமாட்டார். கூட்டத்தின் தேவை தெளிவாய் தெரிவதால்,

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்

கற்ற செலச்சொல்லு வார். (722)

உ, கற்றவர்களில் கற்றவர் என்பவர் கற்று அறிந்தவர்களின் முன் மேலும் கற்று அறியும்படியாக பேசுவார்.

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்

அவையகத்து அஞ்சா தவர். (723)

ந, பகைக்கொண்டு சாகத் துணிபவர்கள் ஏராளம். அரிய சிலரே அவையில் பேச அஞ்சாதவர்கள்.

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற

மிக்காருள் மிக்க கொளல். (724)

ச, கற்றவர்கள் முன்பு தான் கற்றதை எடுத்துச் சொல்லி தன்னைவிட அதிகம் கற்றவரிடத்தில் மேலும் கற்க வேண்டும்.

ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா

மாற்றம் கொடுத்தற் பொருட்டு. (725)

ரு, எடுத்துக் கொண்ட பொருளின் அளவை அறிந்து கற்க வேண்டும். அதன்பொருட்டே அவைக்கு அஞ்சாமலும், மாற்றுக் கருத்துக்கு ஈடுகொடுத்தும் பேச முடியும்.

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்

நுண்ணவை அஞ்சு பவர்க்கு. (726)

சூ, வாள் இருந்து என்ன பயன் வன்மையான குணம் இல்லாதவர்க்கு, நூல்களால் என்ன பயன் நுட்பமானவர்களின் கூட்டத்திற்கு அஞ்சுபவர்க்கு.

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து

அஞ்சு மவன்கற்ற நூல். (727)

எ, போர்களத்தில் கோழையின் கூர்மையான வாள் எப்படி பயனற்றதோ, அப்படியே அவைக்கு அஞ்சுபவர் கற்ற நூல் பயனற்றுப் போகும்.

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்

நன்கு செலச்சொல்லா தார். (728)

அ, பல துறை நூல்களை கற்றும் பயன் இல்லாதவர் நல்லனவற்றை நன்கு விளங்கும்படி எடுத்துச் சொல்லாதவர்.

கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்

நல்லா ரவையஞ்சு வார். (729)

கூ, கல்லாதவர்களைக் காட்டிலும் கடைசியாக எண்ணவேண்டியவர்கள், கற்று அறிந்தும் நல்லவர்கள் கூடியுள்ள அவையில் பேச அஞ்சுபவர்கள்.

உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்

கற்ற செலச்சொல்லா தார். (730)

கo, அறிவு இருந்தாலும் இல்லாதவர்களுக்கு சமமாகவே கருதப்படுவார்கள், அவைக்கு பயந்து கற்றதை தெளிவாய் எடுத்துச் சொல்லாதவர்கள்.

அதிகார விளக்கம்!

கூட்டத்தின் தேவை அறிந்து கற்றவர் முன்னும் அஞ்சாமல் பேச வேண்டும். போருக்கு போகும் துணிவை விட அவையில் பேசுவது கடினம். அறிவு பெற்றும் தக்க இடத்தில் பேசதாவர் அறிவற்றவரே.

காணொளி:-

https://youtu.be/mVqWxRqva88

**காணொளி:** https://youtu.be/mVqWxRqva88

## பொருட்பால் | நட்பியல் | அஉ, தீ நட்பு (82)

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை

பெருகலிற் குன்றல் இனிது. (811)

க, உறவு பாராட்டுவார் என்றாலும் பண்பிலார் நட்பை வளர்காமல் விலகிவிடுதலே இனிமையானது.

உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை

பெறினும் இழப்பினும் என். (812)

உ, தேவை பொருட்டு உறவு பாராட்டும் ஏற்கமுடியாதவர் நட்பை பெறுவதால் அல்லது இழப்பதால் எந்த பயனும் இல்லை.

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது

கொள்வாரும் கள்வரும் நேர். (813)

ங, என்ன பயன் என்று சீர்தூக்கிப் பார்க்கும் நண்பரும், இலாப நோக்கில் செயல்படுபவரும், திருடரும் சமமானவர்களே.

அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்

தமரின் தனிமை தலை. (814)

ச, போர்களத்தில் ஓட மறுக்கும் குதிரைப் போன்ற நட்பைவிட தனிமை தலைச் சிறந்தது .

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை

எய்தலின் எய்தாமை நன்று. (815)

ரு, நன்மை செய்து உறவு பாராட்டாத அற்பமானவர்களின் வறுந்தக் கூடிய நட்பை, அடைவதைவிட விலகி இருப்பதே நன்று.

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்

ஏதின்மை கோடி உறும். (816)

சு, சிந்தை தெளிவில்லாதவரிடம் நெருக்கமான நட்புக் கொள்வதை விட, ஆய்ந்து அறிபவரிடம் பகைமை பாராட்டுவது நிறைந்த நன்மை தரும்.

நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்

பத்தடுத்த கோடி உறும். (817)

எ, போலிச் சிரிப்புடன் பழகும் நட்பைவிட பகைவரால் பல வகையில் நன்மை உண்டாகும்.

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை

சொல்லாடார் சோர விடல். (818)

அ, நடக்கும் செயலை கெடுப்பவர் நட்பை சொல்லிக் கொண்டு இருக்காமல் விட்டோழிக்க வேண்டும்.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு

சொல்வேறு பட்டார் தொடர்பு. (819)

கூ, கனவிலும் துன்பம் தராமல் இருக்குமோ? செயலுக்கும், சொல்லுக்கும் தொடர்பு இல்லாதவர் தொடர்பு.

எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ

மன்றில் பழிப்பார் தொடர்பு. (820)

கo, எல்லா வகையிலும் பழகுவதை குறைத்துக் கொள்ள வேண்டும் நன்கு பழகி சபையில் பழிப்பவர் தொடர்பை.

அதிகார விளக்கம்!

பண்பில்லாதவர் உறவை, தனிமையில் பாராட்டி கூட்டத்தில் பழிப்பவர் உறவை குறைத்துக்கொள்ள வேண்டும். தேவை கருதி பழகி விலகுபவர் திருடனுக்கு சமமானவர். போலியான நட்பைவிட உண்மையான பகைவர் சிறந்தவர்.

காணொளி:-

https://youtu.be/nL4g-NQT0b0

## பொருட்பால் | நட்பியல் | அச, பேதைமை (84)

பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு

ஊதியம் போக விடல். (831)

க, மடமை என்பது என்ன என்றால், சிறு துன்பத்துக்கு அஞ்சி நற்பயனை நழுவ விடுவது.

பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை

கையல்ல தன்கட் செயல். (832)

உ, மடமையானவற்றில் முதன்மையானது தனக்கு பொருந்தாத செயல்களை செய்ய விரும்புவது.

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்

பேணாமை பேதை தொழில். (833)

ந, வெட்கப்படாமை, வேட்கையோடு தேடாமை, இனிமையாக இல்லாமை, எந்த ஒன்றையும் பாதுகாக்காமை, போன்றவைகள் பேதையின் தொழிலாகும்.

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்

பேதையின் பேதையார் இல். (834)

ச, புரிந்துக் கொள்ளும் அளவிற்கு படித்து நன்கு உணர்ந்து பிறருக்கு எடுத்துரைத்து அதன்படி நடக்காத பேதையைப் போல் வேறோரு பேதை இல்லை.

ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்

தான்புக் கழுந்தும் அளறு. (835)

ரு, பேதையின் தன்னிச்சையான ஒரு செயல் அடுத்தடுத்து துன்ப நரகத்தில் அழுத்தும்.

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்

பேதை வினைமேற் கொளின். (836)

*கூ, அர்த்தமற்ற ஒன்றோ சரியாக அமையும்? நுட்பம் அறியாத பேதை செயல்பட மேற்கொண்டால்.*

(பேதை தேவையற்றதையும் செய்ய முடியாது)

*ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை*

பெருஞ்செல்வம் உற்றக் கடை. (837)

*எ, தொடர்பற்றவர்கள் பயனடைவார்கள் உறவினர்கள் பசித்திருப்பார்கள் பேதைக்கு பெருஞ் செல்வம் வாய்ப்பதால்.*

*மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்*

*கையொன்று உடைமை பெறின்.* (838)

*அ, பித்து பிடித்த ஒருவன் கள் உண்டதைப் போல், பேதை தனக்கு உடமையாக ஒன்றை பெற்றால் மாறிடுவான்.*

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்

*பீழை தருவதொன்று இல்.* (839)

*கூ, பெரியது இனிமையானது பேதைகளின் நட்பு, காரணம் அவர்களின் பிரிவு துன்பம் ஒன்றும் தராது.*

*கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்*

குழாஅத்துப் பேதை புகல். (840)

*கο, கழுவாத கால்களுடன் படுக்கைக்குச் செல்வதைப் போன்றது, சான்றோர் கூட்டத்திற்குப் பேதைச் செல்வது.*

*அதிகார விளக்கம்!*

*அடைய வேண்டியதை அலட்சியத்தால் தவறவிடுவது பேதைமை. தனக்கு பொருந்தாததை செய்வதே பேதைமையில் முதன்மை. வெட்கப்படுதல், வேட்கையுடன் தேடல், இனிமையாக இருத்தல், பாதுகாத்தல் என இப்பண்புகள் இல்லாததே பேதைமை. பேதைகளின் பிரிவு துன்பம் தராது. கழுவாத கால்களுடன் படுக்க போவதைப் போன்றது அறிஞர் கூட்டத்திற்கு பேதை போவது.*

*காணொளி:-*

https://youtu.be/zwwG94nUeOk

## பொருட்பால் | நட்பியல் | அகூ இகல் (86)

*இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்*

பண்பின்மை பாரிக்கும் நோய். (851)

*க, இகழ்ச்சி என்பது எல்லா உயிர்க்கும் அதனதன் இயல்பான பகலை ஏற்காமல் மாற்ற முற்படும் நோய்.*

*பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி*

இன்னாசெய் யாமை தலை. (852)

*உ, நடுநிலைமை கருதி விலகிவிடுதல் செய்தாலும், இகழ்வை கருத்தில்கொண்டு துன்பம்செய்யாமல் இருப்பதே முதன்மையானது.*

*இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்*

தாவில் விளக்கம் தரும். (853)

ந, உள்ளபடியே ஏற்க முடியாத இகல் என்ற வரையறுக்க முடியாத நோய் நீங்கினால், வருத்தம் இல்லாது வரும் மாற்றத்தால் தெளிவான விளக்கம் கிடைக்கும்.

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்

துன்பத்துள் துன்பங் கெடின். (854)

ச, இன்பமும் மேலும் இன்பமும் உண்டாகும், துன்பமும் மேலும் துன்பமும் உண்டாக்கும் பகையுணர்வு என்ற இகல் அழிந்தால்.

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே

மிகலூக்கும் தன்மை யவர். (855)

ரு, பகையுணர்வுக்கு எதிராக வாழும் ஒழுக்கத்தில் வல்லவரை, யார் வெல்லும் தன்மை கொண்டவர்?

இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை

தவலும் கெடலும் நணிந்து. (856)

சூ, பகையுணர்வே மிக இனிமையானது என்பவன் வாழ்க்கை எளிதில் கெட்டு அழியும்.

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்

இன்னா அறிவி னவர். (857)

எ, பெருமைக் கொள்பவர் மெய்ப்பொருளை காணாதவர், பகைக் கொள்பவர் தீய அறிவுக்கொண்டவர்.

இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை

மிகலூக்கின் ஊக்குமாம் கேடு. (858)

அ, பகையுணர்வுக்கு எதிராக செயல்பட்டால் ஆக்கம் விளையும்.

பகையுணர்வை மிகைப்படுத்தினால் கேடு உண்டாக்க ஊக்கம் விளையும்.

இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை

மிகல்காணும் கேடு தரற்கு. (859)

கூ, பகையுணர்வு அடையமாட்டார் முன்னேற்றம் வரும்பொழுது, பகையுணர்வை அதிகம் அடைவார் கேடு உண்டாவதற்கு.

இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்

நன்னயம் என்னும் செருக்கு. (860)

கo, பகையுணர்வால் துன்பமெல்லாம் வரும் என்பதால் அதை விலக்கிடும் நன்மை என்ற செருக்கு..

அதிகார விளக்கம்!

இகழ்ச்சி என்பது இயல்பை மறுப்பது. நடுநிலைமையுடன் விலகிடினும் இகழ்வை கருத்தில் கொண்டு துன்பம் செய்தல் கூடாது. இகல் என்ற பகை பாராட்டும் நோய் அழித்தால் சிறப்பான மாற்றம் வரும் இன்பம் வளர்ந்து துன்பம் அழியும். பகை உணர்வு அற்றவரை யாரும் வெல்ல முடியாது, எதிரிகள் வாழ்வின் ஏற்றத்திற்கு வேண்டும் என்பவர் எளிதில் அழிவார். உண்மை அறியாதவன் பெருமை கொள்வதைப் போன்றே தீய குணம் உள்ளவர் பகையுணர்வு அடைவார். நன்மை அடைபவர் இகல் என்ற பகை உணர்வு இல்லாதவர்.

காணொளி:-

https://youtu.be/fGaTzwSj2J0

## பொருட்பால் | நட்பியல் | அஅ, பகைத்திறம் தெரிதல் (88)

பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்

நகையேயும் வேண்டற்பாற்று அன்று. (871)

க, பகை என்ற பண்பில்லாததை ஒருவர் விளையாட்டாகவும் விரும்பக் கூடாது.

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க

சொல்லேர் உழவர் பகை. (872)

உ, கொலைக் கருவி கொண்டு வாழ்பவரை பகைத்துக் கொண்டாலும், சொல் கொண்டு வாழ்பவரை பகைக்க வேண்டாம்.

ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்

பல்லார் பகைகொள் பவன். (873)

ந, தனி மனிதனாய் பலரைப் பகைத்துக் கொள்பவர் இகழ்வானவர்களை விட ஏழை.

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்

தகைமைக்கண் தங்கிற்று உலகு. (874)

ச, பகைவரையும் நட்பாக கொண்டு பழகும் பண்புடையாளரின் மதிப்பு மிகுந்த செயலால் உலகம் நிலைக்கிறது.

தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்

இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று. (875)

ரு, தனக்கு துணை இல்லாமல் பகை கொண்டவர்கள் இரண்டாக இருந்தால் அதில் ஒன்றை இனிய துணையாக ஏற்கவேண்டும்..

தேறினும் தேறா விடினும் அழிவின்கண்

தேறான் பகாஅன் விடல். (876)

சூ, தெளிந்த அறிவு பெற்றாலும், தெளிந்த அறிவு பெறாவிட்டாலும் அழிவு ஏற்படும் காலத்தில் தெளியாதவனை நெருங்காமல் விட வேண்டும்.

நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க

மென்மை பகைவர் அகத்து. (877)

எ, வருந்த வேண்டாம் வருந்தம் என்ன என்று அறியாதவர்களை நினைத்து. விரும்ப வேண்டாம் பகைவர்களின் மென்மையான இடத்தை.

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்

பகைவர்கண் பட்ட செருக்கு. (878)

அ, எப்படி என்ற வகை அறிந்து, தகுதிகளை அறிந்து, தன்னை காக்க அறிந்தால், அழியும் பகைவருக்கு ஏற்பட்ட கர்வம்.

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்

கைகொல்லும் காழ்த்த இடத்து. (879)

கூ, இளசாக இருக்கும் முள் மரத்தை அழிக்க வேண்டும், தவறினால் தேவையற்றதை விலக்கும் பொழுது இயலாது போகும். (பகையை வளரவிடக்கூடாது)

உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்

செம்மல் சிதைக்கலா தார். (880)

கo, உயிரோடு இருப்பவர் எல்லாம் உண்மையாக வாழ்பவர் இல்லை, வெளிப்படையாக குற்றம் செய்பவரின் பெருமையை அழிக்கவில்லை என்றால்.

அதிகார விளக்கம்!

பண்பற்ற பகை விரும்ப வேண்டாம். கொலைக் கருவி கொண்டவனின் பகையைவிட சொல் கொண்டவன் பகை வலிமையானது. எல்லாரையும் பகைத்துக் கொள்பவனே ஏழை. பகைவரை நட்பாக கருதும் பண்பே முதன்மையானது. தெளிவற்றவன் நட்பு நல்லதல்ல. தன்னை காத்துக் கொள்ளவதும் பகையுணர்வை வளரவிடாமல் அழிப்பதும் அவசியமானது. குற்றம் செய்பவரின் செறுக்கை அழிக்காதவர் உண்மையாக வாழ்பவர் இல்லை.

காணொளி:-

https://youtu.be/DQ9hBIIlapU

## பொருட்பால் | நட்பியல் | அகூ, உட்பகை (89)

நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்

இன்னாவாம் இன்னா செயின். (881)

க, இருப்பிடத்தின் தன்மையும் துன்பத்தை போக்காமல் துன்பம் தரும். அதுபோல் உயர்ந்த சுற்றத்தாரின் தன்மையும் துன்பமானதே, துன்பமானதை செய்தால்.

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக

கேள்போல் பகைவர் தொடர்பு. (882)

உ, வாள்போல் நேரடியாய் வெட்டி வீழ்த்தும் பகைவருக்கு அஞ்ச வேண்டாம். அஞ்ச வேண்டும் நட்புடன் உறவாடும் பகைவருக்கு.

உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து

மட்பகையின் மாணத் தெறும். (883)

ங, உட்பகைக்கு அஞ்சி தன்னை காத்தால் வேண்டும். அது சுடாத மண் பானையில் உலை வைத்தல் போன்றது.

மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா

ஏதம் பலவும் தரும். (884)

ச, மனதிற்கு தேவையற்ற உட்பகை தோன்றினால், இனத்திற்கு தேவையற்ற துன்பங்கள் பல வரும்.

உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்

ஏதம் பலவும் தரும். (885)

ரு, உறவுமுறைக்குள் உட்பகை தேன்றினால் உறவுமுறை அற்றவர்களுக்கும் தேவையற்ற துன்பங்கள் பல வரும்.

ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்

பொன்றாமை ஒன்றல் அரிது. (886)

கூ, தனி வேறு சிந்தை உள்ளவர்கள் கூடி இருக்க அடுத்தவரின் சதியால் பிரிந்தால் எக்காலத்திலும் சிறப்புற கூடி இருப்பது அரிது.

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே

உட்பகை உற்ற குடி. (887)

எ, இரு வேறு உலோகத்தையும் இணைக்கும் செம்பு போல் கூடி உறவாடினாலும் கூட முடியாது குடும்பத்திற்குள் உட்பகை ஏற்பட்டால்.

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொழுது

உட்பகை உற்ற குடி. (888)

அ, அரத்தால் தேய்க்க எதிர்க்க இயலாது தேயும் தங்கம் போல், உட்பகையின் வலிமையால் குடும்ப உறவும் தேயும்.

எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்

உட்பகை உள்ளதாம் கேடு. (889)

கூ, உட்பகை எள்ளளவே சிறுமையானதானலும், உள்ளதற்கு எல்லாம் கேடு உண்டாக்கும்.

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்

பாம்போடு உடனுறைந் தற்று. (890)

கூ, முழு சம்மதம் இல்லாதவர் வாழ்க்கை, இருண்ட குகைக்குள் கொடிய பாம்புடன் இருப்பதைப் போன்றது.

அதிகார விளக்கம்!

இன்பம் தராத உறவுகளும் உண்டு அவர்கள் வாள் கொண்டு அழிக்கும் பகைவரை விட கொடுமையானவர்கள். உட்பகை உள்ளவருடன் வாழ்தல் சுடாத பானையில் உலை வைத்தல் போன்றது. உள்ளத்தின் இயல்பை அழிக்கும் உட்பகை குடுப்பத்திற்கு கேடு. உட்பகை கொண்டவருடன் வாழ்வதும் கொடிய பாம்புடன் இருட்டில் இருப்பதும் ஒன்றே.

காணொளி:-

https://youtu.be/bkmSJIHrRrA

## பொருட்பால் | நட்பியல் | கூக, பெண்வழிச் சேறல் (91)

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழையார்

வேண்டாப் பொருளும் அது. (901)

க, தன் இல்லச் சிறப்பை மட்டும் கவனிப்பவர் நற்பயன் அடைய முடியாது. செயல்கள் அற்று சும்மா இருக்க நினைப்பவருக்கு வேண்டாத பொருள் அது.

பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்

நாணாக நாணுத் தரும். (902)

உ, ஆக்கபூர்வமான செயல்களை கவனிக்காமல் பெண்ணை மட்டுமே விரும்புபவன் வெட்கப்படக்கூடிய பெரிய வேட்கக் கேட்டை அடைவான்.

இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்

நல்லாருள் நாணுத் தரும். (903)

௩, இல்லத்தரசியிடம் பணிவு இயல்பாக இல்லை என்றால் எக்காலத்திலும் நல்லவர்கள் முன் நாண வேண்டும்.

மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்

வினையாண்மை வீறெய்தல் இன்று. (904)

௪, குடும்ப தலைவிக்கு அஞ்சும் அடுத்தது அறியும் அறிவில்லாதவன் செயல்திறன் சிறப்பாக இருக்காது.

இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்

நல்லார்க்கு நல்ல செயல். (905)

௫, மனைவிக்கு அஞ்சுபவர் எல்லா வகையிலும் அஞ்சி நல்லார்கும் நல்லதைச் செய்ய மாட்டார்.

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்

அமையார்தோள் அஞ்சு பவர். (906)

௬, இமைக்காது இருக்கும் மனதிடம் உள்ளவராக வாழ்ந்தாலும் நற்கதியை அடையமுடியாது, நல்லபடியாக அமையாத மனைவிக்கு அஞ்சுபவர்.

பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்

பெண்ணே பெருமை உடைத்து. (907)

௭, ஆண் என்ற தாகத்தால் பெண் ஏவிடும் வேலையைச் செய்பவரை காட்டிலும், நாணமுள்ள பெண் பெருமைக்கு உரியவள்.

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்

பெட்டாங்கு ஒழுகு பவர். (908)

௮, நண்பர்களுக்கு முழுமையாக இருக்கமாட்டார், நன்மையானதை செய்யமாட்டார் அழகான நெற்றி உடையவளின் பொட்டு போல் ஒட்டிக் கொண்டவர்.

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்

பெண்ஏவல் செய்வார்கண் இல். (909)

௯, தர்ம செயலும், நிறைந்த பொருளும், பிற நற்செயலும் பெண்மைக்கு மயங்கி அடிமைச் செயல் செய்பவருக்கு இல்லை.

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்ஞான்றும்

பெண்சேர்ந்தாம் பேதைமை இல். (910)

௧௦, நல்லெண்ணமும் மனஉறுதியும் கொண்டவர்கள் இடத்தில் எக்காலத்திலும் பெண்மைக்கு அடி பணிந்தோம் என்ற அறியாமை இல்லை.

அதிகார விளக்கம்!

மனைவி மக்கள் மட்டுமே என வாழ்ந்தால் மான்பு மிகுந்தவராக முடியாது. மனைவியிடம் பணிவுடன் நடந்து நாணமற்று வாழலாம், மாறாக அவள் ஏவல் செய்யும்படி நடந்தால் நற்பேறு அடையமுடியாது. பெண்ணின் அழகிய நெற்றிக்கு திலகம் போல் ஒட்டிக்கொண்டு இருப்பவர் நண்பர்கள் மத்தியில் சிறப்பு அடையமாட்டார். பெண்ணுக்கு ஏவல் வேலை செய்பவரை பெண்ணே மதிப்பதில்லை.

காணொளி:-

https://youtu.be/5q0RCy3tmy8

## பொருட்பால் | நட்பியல் | கூ உ, வரைவின் மகளிர் (92)

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்

இன்சொல் இழுக்குத் தரும். (911)

க, அன்பினால் விரும்பி நாடமல் பொருளுக்காய் நாட்டம் கொள்ளும் ஆய்தொடியாரின் (விலைமாதரின்) இனிய சொற்கள் இழிவைத்தரும்.

பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்

நயன்தூக்கி நள்ளா விடல். (912)

உ, பயனை அறிந்து அதற்கேற்றார் போல் பழகும் பண்புடைய பண்பில்லா பெண்களை, மேன்மை அறிந்து உறவாடமல் தவிர்க்க வேண்டும்.

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்

ஏதில் பிணந்தழீஇ அற்று. (913)

ந, பணத்தையே குறிக்கோளாக கொண்ட பெண்களிடம் பொய்யாக உறவுக் கொள்வது, எந்த உணர்வும் இல்லாத பிணத்தை தழுவுதல் போன்றது.

பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்

ஆயும் அறிவி னவர். (914)

ச, பொருளை மட்டுமே பொருளாக கொள்பவரின் புலன்களை விரும்பமட்டார்கள் அருளாள் வரும் பொருளை தேர்ந்தெடுக்கும் அறிவுள்ளவர்கள்.

பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்

மாண்ட அறிவி னவர். (915)

ரு, பொதுநலத்தாரின் புலன் இன்பத்தை விரும்பமாட்டார்கள், மனதின் நலத்தால் நல்லறிவு பெற்றவர்கள்.

தந்நலம் பார்ப்பார் தோயார் தகைசெருக்கிப்

புன்னலம் பாரிப்பார் தோள். (916)

சு, தனது நலத்தை கவனித்து வாழ்பவர் நாடமாட்டார்கள், இடம் பார்த்து புலன் நலத்தை பறிப்பவர் தோள்.

நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வார் பிறநெஞ்சிற்

பேணிப் புணர்பவர் தோள். (917)

எ, நிறைவான மனம் இல்லாதவரே நாடுவார், அடுத்தவர் மனதை கவனித்து புணர்பவர் தோள்.

ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப

மாய மகளிர் முயக்கு. (918)

அ, சீர்தூக்கி ஆராயும் அறிவற்றவர்களே தெய்வீகம் என்பார்கள் போலியான மகளிரின் உடல் உறவை.

வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்

பூரியர்கள் ஆழும் அளறு. (919)

கூ, வரைமுறை இல்லாத பட்டுப் போன்ற மகளிரின் மென்தோள் குற்றம் எது? என்று அறியாத புரிதல் அற்றவர்கள் மூழ்கும் நரகம்.

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்

திருநீக்கப் பட்டார் தொடர்பு. (920)

கஂ, இருமனம் என்ற அலைபாயும் மனம் கொண்ட பெண்கள், கள், சூதாட்டம் என அடிமைபட்ட திரு நீக்கப்பட்டவர்கள் தொடர்புக் கொள்வர்.

அதிகார விளக்கம்!

அன்புக்கு இணங்காமல் பொருளுக்கு இணங்கும் பெண்களின் ஆசை வார்த்தை அவமானத்தை தேடித்தரும். பிணத்துடன் உறவாடுவது போன்றது அவர்களுடன் உறவாடுவது. நல்லறிவு பெற்றவர்கள் பொதுமகளிரை நாடுவது இல்லை. வரைமுறை அற்ற பெண்கள் அறிவற்றவர்கள் மூழ்கும் நரகம்.

காணொளி:-

https://youtu.be/ebthOCIjOJ4

## பொருட்பால் | நட்பியல் | கூச, சூது (94)

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்

தூண்டிற்பொன் மீன்விழுங்கி அற்று. (931)

க, விரும்பாதே வெற்றி பெற்றாலும் சூதினை, வெற்றிதான் பொன் தூண்டிலின் முள்ளை விழுங்கிய மீன் போல் சிக்கச் செய்யும்.

ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்

நன்றெய்தி வாழ்வதோர் ஆறு. (932)

உ, ஒரு முறை வென்று நூறு முறை தோற்கும் சூதாடிகளுக்கு உண்டாகுமா? நன்மைகள் பெற்று சிறப்புடன் வாழும் வழி.

உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்

போஒய்ப் புறமே படும். (933)

ந, பெற்ற ஆதாயத்தை கூறி இடைவிடாது தாயம்உருட்டி (ஒருவகை சூது) கொண்டு இருந்தாள் உள்ள பொருளும் நிலைக்காது போகும்.

சிறுமை பலசெய்து சீரழக்கும் சூதின்

வறுமை தருவதொன்று இல். (934)

ச, கேடு பல செய்து ஒழுங்குப்பட்ட வாழ்வை, வறுமை தந்து அழிக்கும் சூதினைப் போல் வேறோன்று இல்லை.

கவறும் கழகமும் கையும் தருக்கி

இவறியார் இல்லாகி யார். (935)

ரு, கவர்ந்து இழுக்கும் சூதாட்டக் கழகமும், சூதாட்டக் கருவிகளைக் கொண்ட கையும் அறிந்தவர் ஒன்றுமற்றவராக மாறுவார்.

அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்

முகடியான் மூடப்பட் டார். (936)

சூ, அகநிறைவு அடையாமல் துன்பத்தில் நிலைப்பார்கள் சூது என்ற முட்டாள் தனத்தில் மூழ்கியவர்கள்.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்

கழகத்துக் காலை புகின். (937)

எ, அனுபவித்துப் பழகிய செல்வமும், காலகாலமாய் கடைபிடித்த நற்பண்பும் பாழாகிவிடும், சூதாட்ட கழகத்திற்கு காலையில் போனால்.

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து

அல்லல் உழப்பிக்கும் சூது. (938)

அ, பொருளாதார நிலையை சீரழித்து, பொய்யான வாழ்வை மேற்கொள்ளச் செய்து, அருள் அற்றவராக மாற்றி துன்பத்தில் திண்டாடச் செய்யும் சூது.

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்

அடையாவாம் ஆயம் கொளின். (939)

கூ, உடை, செல்வம், உணவு, சுயஅறிவு, கற்ற கல்வி, என ஐந்தும் சேர்ந்து விலகிவிடும் சூதாட்டத்தை ஏற்றுக்கொண்டால்.

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்

உழத்தொறூஉம் காதற்று உயிர். (940)

கo, இழந்தாலும் காதலிக்கும் சூதினைப் போல் துன்பம் சூழ்ந்தால் காதலிக்காது உயிர். (சூது தற்கொலைக்கு வழி வகுக்கும்)

அதிகார விளக்கம்!

தூண்டில் தங்கம் என்றாலும் மீனுக்கு அது ஆபத்தானது அப்படியே சூது. அது ஒருமுறை வெற்றிகாட்டி பலமுறை தோல்வி தந்து வறுமைக்கு உரிமையாக்கி உள்ளத்தை நிறைவற்றதாக்கி விடும். பண்புடன் உடை, செல்வம், உணவு, சுய அறிவு, கற்ற கல்வி ஐந்தையும் நம்மைவிட்டு விலகச் செய்யும். இத்தனை இழப்புக்கும் பின்னும் காதலிக்கப்படும் சூது போல் உயிரானது துன்பத்தை காதலிக்காது.

காணொளி:-

https://youtu.be/qWN6srgz-LM

## பொருட்பால் | நட்பியல் | கூரு, மருந்து (95)

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்

வளிமுதலா எண்ணிய மூன்று. (941)

க, அதிகமானாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும். அது மருத்துவ நூலில் குறிப்பிடப்பட்ட வாதம் பித்தம் சிலேத்துமம் என எண்ணிய மூன்று.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின். (942)

உ, மருந்து என்பது தேவைப்படாதாம் உடம்பிற்கு, உண்பதையும் செரிப்பதையும் ஆராய்ந்து போற்றி உண்டால்.

அற்றால் அறவறிந்து உண்க அஃதுடம்பு

பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு. (943)

௩, செரிக்கும் அளவை அறிந்து உண்ண வேண்டும். அதுவே உடம்பு பெற்ற துயரத்தை அழிக்கும் வழி.

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல

துய்க்க துவரப் பசித்து. (944)

௪, செரிக்கும் அளவை அறிந்து கடைப்பிடித்து ஒவ்வாமை தராத உணவை உண்க நன்கு பசித்ததும்.

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்

ஊறுபாடு இல்லை உயிர்க்கு. (945)

௫, மனதிற்கும் உடலுக்கும் மாறுபாடு இல்லாமல் விருப்பமான உணவாக இருப்பினும் அளவிற்கு அதிகமாகாமல் மறுத்து அளவுடன் உண்டால் எவ்வித தொல்லையும் இல்லை உயிர்க்கு.

இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்

கழிபேர் இரையான்கண் நோய். (946)

௬, தேவைக்கு அதிகமாக எடுப்பது இழிவானது என்பதை அறிந்து உண்பவர் இடத்தில் நிலைத்து நிற்கும் இன்பம் போல், கட்டுப்பாடற்று உண்பவர் இடத்தில் நிலைக்கும் நோய்.

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்

நோயள வின்றிப் படும். (947)

௭, தீயை எப்படி அளவுடன் பயன்படுத்துவது என்று அறியாதவர் போல் அளவற்று உண்பதால் நோயும் அளவற்று ஏற்படும்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல். (948)

௮, நோய் அறிந்து, நோய்க்கான மூலக்காரணம் அறிந்து, அதை தணிக்கும் வழியை அறிந்து சரியாக செயல்பட வேண்டும்.

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்

கற்றான் கருதிச் செயல். (949)

௯, நோயுற்றவர் உடலின் அளவும், பிணியின் அளவும், பருவ காலத்தின் தட்பவெப்பமும், கற்றவர் எண்ணிப் பார்த்து செயல்பட வேண்டும்.

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று

அப்பால் நாற்கூற்றே மருந்து. (950)

௧௦, நோயுற்றவர், அதை தீர்ப்பவர், மருந்துகள், பயன்படுத்தும் அளவு சொல்பவர் என்று நான்கு கூறுகளை உடையது மருத்துவம்.

அதிகார விளக்கம்!

வாத பித்த சிலேத்துமம் என மூன்றில் அளவு கூடுவதும் குறைவதுமே நோய். உண்ட உணவு செரித்தபின் போற்றி உண்பவருக்கு மருந்து தேவையில்லை. உணவை சரியாக தீர்மானித்தால் அளவை அறிந்து உண்டால் நோய் வராது. நோய் என்ன? ஏன் வந்தது? எப்படி தீர்ப்பது? எந்த மாதரியான காலத்தில் வந்துள்ளது? என்பதை ஆராய்ந்து மருந்து எடுக்க வேண்டும். நோயுற்றவர், அதை தீர்ப்பவர், மருந்துகள், பயன்படுத்தும் அளவு சொல்பவர் என நான்கு கூறுகளை உடையது மருத்துவம்.

காணொளி:-

https://youtu.be/8ZwKEa4RRCU

## பொருட்பால் | குடியியல் | கூஎ, மானம் (97)

இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்

குன்ற வருப விடல். (961)

க, அத்தியாவசியமான சிறப்புகள் உடையது என்றாலும் அதை அற்பமான செயல் செய்து அடையக் கூடாது.

சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு

பேராண்மை வேண்டு பவர். (962)

உ, சிறப்பு அடையலாம் என்றாலும் சிறப்பற்றதை செய்யமாட்டார், சிறப்புடன் திடமான மனிதனாய் வாழ வேண்டுபவர்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய

சுருக்கத்து வேண்டும் உயர்வு. (963)

ங, பெருமைக்குறிய இடம் அடைந்தால் பணிவுடன் இருக்க வேண்டும். சிறுமையான சுருக்கத்தில் தன் உயர்வை காக்க வேண்டும்.

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்

நிலையின் இழிந்தக் கடை. (964)

ச, தலையில் இருந்து திடமற்று உதிர்ந்தாலும் மக்காத மயிர் போன்றவர், மனித கூட்டத்தில் இருந்து தன் நிலை இழிவான இறுதியை அடைந்தவர்.

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ

குன்றி அனைய செயின். (965)

ரு, மலை போன்றவர் என்றாலும் குறைந்து தாழ்ச்சி அடைவார் குற்றமானதை குறைந்தளவு செய்தால்.

புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று

இகழ்வார்பின் சென்று நிலை. (966)

சு, புகழ் இல்லாமல் புதுமை நாடி உயர்வு பெறாமல் என்ன பயன்? இகழ்வானவர்களின் பின் சென்றால் வரும் இழிநிலை.

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே

கெட்டான் எனப்படுதல் நன்று. (967)

எ, ஒத்திசைவு இல்லாமல் புரியாத ஒருவர் பின் சென்று வாழும் அந்த நிலையைவிட கெட்டவன் எனப்படுதல் நன்று.

மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை

பீடழிய வந்த இடத்து. (968)

அ, மருந்தால் சாதிக்க முடியாது ஊனில் உயிர் நிலைக்கும் வாழ்க்கை. எனவே பெருந்தகைமை என்பது பீடை வந்த இடத்திலும் உயிரை மாய்க்காது இருத்தலே.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்

உயிர்நீப்பர் மானம் வரின். (969)

கூ, மயிர் நீங்கினால் கவரிமான் வாழாது என்றால் அதுபோலவே உயிர் நீப்பர் மானம் வரின்.

இளிவரின் வாழாத மானம் உடையார்

ஒளிதொழுது ஏத்தும் உலகு. (970)

கo, அசிங்கம் ஏற்பட்டதால் வாழ்வதை தவிர்த்த மானம் உள்ளவர்களை வழிகாட்டும் ஒளியாக மதித்து வணங்கும் உலகம்.

அதிகார விளக்கம்!

அதிகபட்ச தேவை தீர்க்கும் என்றாலும் அதை குறுக்கு வழியில் அடைய நினைப்பதே மானம் என்பதால் சிறப்பற்ற ஒன்றை செய்யமாட்டர் சிறப்புடன் வாழ நினைப்பவர். தகுதி வளர்ந்தவர் உயர்ந்த நிலையில் பணிவாகவும் தாழ்ச்சி ஏற்படும் பொழுது தன்னை உயர்வாகவும் தற்காத்துக் கொள்வார். உதிர்ந்த மயிர் சிதையாது என உணர்ந்து மனித கூட்டத்திற்கு அற்பாற்பட்டு சிந்தித்து நிலையாக நிறுத்த முடியாத உயிருக்கு மதிப்பளித்து மனித குலத்திற்கே வழிகாட்டியாக வாழ்வதே மானம்.

காணொளி:-

https://youtu.be/MfbyMUYr9iQ

## பொருட்பால் | குடியியல் | கூகூ, சான்றாண்மை (99)

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து

சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. (981)

க, கட்டாயம் செய்யவேண்டிய கடன் என்பது நல்லவைகள். அத்தகைய கடனை அறிந்து செயல்படுவதே சான்றாண்மை.

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்

எந்நலத்து உள்ளதூஉம் அன்று. (982)

உ, குணம் நலமாக இருப்பதே சான்றோர்க்கு நலன். மற்றைய நலன்கள் எப்படி இருப்பினும் குணநலம் போன்றது இல்லை.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு

ஐந்துசால்பு ஊன்றிய தூண். (983)

ந, அன்புசெய்தல், தீங்கு செய்ய நாணுதல், மற்றவர்களோடு இணக்கமாய் இருத்தல், யாவற்றையும் ஆய்ந்து அறிதல், வாய்மையாக இருத்தல் என்ற ஐந்தும் சான்றாண்மை என்ற பாத்திரத்தை தாங்கும் தூண்களாகும்.

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை

சொல்லா நலத்தது சால்பு. (984)

ச, அழிக்காமல் நலமுடன் வாழவைப்பதே நோன்பு. அடுத்தவரின் தீயச் செயல்களை சொல்லாமல் நல்லனவற்றை எடுத்துக் கொள்வதே சால்பு.

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்

மாற்றாரை மாற்றும் படை. (985)

ரு, செயல்படுபவர்களின் செயல்திறன் பணிவுடன் இருப்பது. அதுவே சான்றோருக்கு மாற்றாரை மாற்றும் ஆயுதமாக இருக்கிறது.

சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி

துலையல்லார் கண்ணும் கொளல். (986)

சு, சான்றாண்மைக்கு வரையறை யாதெனில் தோல்வியை ஏற்க தகுதியற்றவர் இடத்திலும் ஏற்றுக் கொளல்.

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்

என்ன பயத்ததோ சால்பு. (987)

எ, துன்பம் தந்தவருக்கும் இனிமையானதை செய்யவில்லை என்றால் சான்றாண்மையால் என்ன பயன்?

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்

திண்மைஉண் டாகப் பெறின். (988)

அ, இன்னல்கள் ஒருவருக்கு இழிவானது இல்லை பெருந்தன்மை என்ற சால்பு திடமாக உண்டானால்.

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு

ஆழி எனப்படு வார். (989)

கூ, கால மற்றம் எனப்படும் ஊழியால் மாற்றங்கள் ஏற்பட்டாலும் தன்னை நிலைத்த தன்மையில் தக்க வைத்திருப்பவர் சான்றாண்மைக்கே பெருங்கடல் எனப்படுவார்.

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்

தாங்காது மன்னோ பொறை. (990)

கo, சான்றாக வாழ்பவர் சான்றாண்மை குறைந்தால் அகம் புறம் என்ற இருவேறுபட்ட நிலைகளும் பொறுத்து ஏற்குமா?

அதிகார விளக்கம்!

அவசியம் செய்ய வேண்டியதை கட்டாயம் செய்வதே சான்றாண்மை. குண நலமுடன் அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என ஐந்துடன் இருப்பதும், நல்லனவற்றை அழிக்காமல் அதை வளர்ப்பதும், தகுதி அற்றவர் இடத்திலும் தோல்வியை ஏற்பதும், துன்பம் தந்தவற்கும் இனியவை செய்வதும், சான்றாண்மையாகும். இப்படியானவர் ஊழி கடந்து போற்றப்படுவர். இவர்கள் சான்றாண்மை குறைந்தால் அகம் புறம் என இரு நிலையும் ஏற்காது.

காணொளி:-

https://youtu.be/cG_LvYqsXho

## பொருட்பால் | குடியியல் | கoக, நன்றிஇல் செல்வம் (101)

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்

செத்தான் செயக்கிடந்தது இல். (1001)

க, சொல்லமுடியா பெரும்பொருளை சேர்த்து வைத்தவர் அதை அனுபவிக்காமல் இறந்துவிட்டார் என்றால் அப்பொருளால் பயன் இல்லை.

பொருளானாம் எல்லாம்என்று ஈயாது இவறும்

மருளானா மாணாப் பிறப்பு. (1002)

உ, பொருளாள் எல்லாம் ஆகும் என்று யாருக்கும் கொடுக்காமல் இருக்கும் யாரும் அருளற்ற மீளா பிறப்பு அடைவர்.

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்

தோற்றம் நிலக்குப் பொறை. (1003)

ந, பொருள் ஈட்டுவதைக் கடந்தவற்றில் இசைவுக் கொள்ளாத ஆடவர் தோற்றம் நிலத்திற்குப் பாரமானது.

எச்சம்என்று என்எண்ணும் கொல்லோ ஒருவரால்

நச்சப் படாஅ தவன். (1004)

ச, மிச்சமாக இருக்கப் போவது ஏது என அறிவனோ? ஒருவராலும் விரும்பப்படாதவன்.

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய

கோடிஉண் டாயினும் இல். (1005)

ரு, கொடுத்து மகிழ்வதும் அனுபவித்து மகிழ்வதும் இல்லாதவருக்கு தொடர்ந்து செல்வம் கோடி உண்டாயினும் வீண்.

ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்று

ஈதல் இயல்பிலா தான். (1006)

சூ, தனக்குத் தானே கேடு செய்கிறான், பெருஞ்செல்வத்தை தானும் அனுபவிக்காமல் தகுதியானவற்கும் கொடுக்காமல் ஈதல் இயல்பில்லாதவன்.

அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்

பெற்றாள் தமியள்மூத் தற்று. (1007)

எ, இல்லாதவற்கு கொடுத்து உதவாதவர் செல்வம், நல்லழகு பெற்றவள் தனித்தே வாழ்ந்து முதுமை அடைந்தது போன்றது

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்

நச்சு மரம்பழுத் தற்று. (1008)

அ, விரும்பி நாட வாய்ப்பளிக்காதவன் செல்வம் ஊர் நடுவே நச்சு மரம் பழுத்ததைப் போன்றது. (எட்டி பழுத்தால் என்ன, ஈயாதான் வாழ்ந்தால் என்ன)

அன்பொரீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய

ஒண்பொருள் கொள்வார் பிறர். (1009)

கூ, அன்பில்லாமல் தன்னை வருத்தி அறம் பார்க்காமல் சேர்த்த அனைத்து பொருளையும் அடுத்தவரே அனுபவிப்பார்.

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி

வறங்கூர்ந் தனையது உடைத்து. (1010)

கo, சீர் பொருந்திய செல்வம் படைத்தவர் சிறு துன்பம், மழைக்காக ஏற்படும் இருள் போன்று தோன்றி, நன்மையாக மாறும் தன்மையுடையது.

அதிகார விளக்கம்!

சொல்லமுடியா பொருள் சேர்த்து அனுபவிக்காமல் இறந்தால் என்ன பயன், அதை தகுதியானவற்கு கொடுக்காதவர் பிறவித்துன்பம் அடைவார். பொருள் சேர்க்கும் பண்பை கடந்து பிறவற்றின் மீது ஆர்வம் இல்லாதவர் பூமிக்கு பாரமானவரே. கொடுப்பது துய்ப்பது என செய்யாத பொருள் வீணே. பயனற்ற செல்வம் பாழான மரம் ஊர் நடுவே இருப்பதை போன்றது. அறமற்று சேர்த்த செல்வம் அடுத்தவரே அனுபவிக்க ஏதுவானது. சீரான செல்வருக்கு வரும் துன்பம் மழைக்கான கார் இருள் போல் வந்து நன்மை பயக்கும்.

காணொளி:-

https://youtu.be/g4og4Yebo34

## பொருட்பால் | குடியியல் | கoந, குடிசெயல் வகை (103)

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்

பெருமையின் பீடுடையது இல். (1021)

க, செயல்களைச் செய்ய என் கைகள் தயங்காது என்ற பெருமையைவிட மேலான ஒன்று இல்லை.

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்

நீள்வினையால் நீளும் குடி. (1022)

உ, ஆழமான செயல்திறனும், ஆழ்ந்த அறிவும் என இரண்டின் தொடர்ச் செயலால் வளரும் வாழ்வு.

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்

மடிதற்றுத் தான்முந் துறும். (1023)

ங, குடும்பம் ஒவ்வொன்றும் சிறப்பாக செயல்பட வேண்டும் என முயலும் ஒருவற்கு தெய்வமும் தேவையானதை முன் வந்து உதவும்.

சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்

தாழாது உஞற்று பவர்க்கு. (1024)

ச, பிற காரணங்கள் இன்றி தானாகவே நல்முடிவு உண்டாகும் தம் குடிப் பெருமை அழியாதபடி செயல்படுபவற்கு.

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்

சுற்றமாச் சுற்றும் உலகு. (1025)

ரு, குற்றம் இல்லாதபடி குடும்பத்தை வழிநடத்தி வாழ்பவரை உறவாக ஏற்று கொள்ளும் உறவு பாரட்டும் உலகு.

நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த

இல்லாண்மை ஆக்கிக் கொளல். (1026)

சூ, நல்லாண்மை என்ற நிறைந்த மனித ஆற்றல் என்பது, ஒருவற்குத் தான் பிறந்த குடியை இல்லாண்மை ஆக்கிக் கொள்வதே.

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்

ஆற்றுவார் மேற்றே பொறை. (1027)

எ, போர்களத்தின் வன்மையாக செயல்படும் வீரரைப் போல், தன் இருப்பிடம் சிறக்க செயல்படுபவருக்கே துன்பம் அழிக்கும் பொறுப்பு முழுமை பெறும்.

குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து

மானம் கருதக் கெடும். (1028)

அ, குடும்பத்தை காத்து போற்றுபவற்கு ஏற்ற பருவம் என்று ஒன்று இல்லை. எல்லா பருவமும் சாதகமானதே. மாறாக சோம்பலுடன் செயல்பட மறுத்தால் சீர் குலையும்.

இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்

குற்ற மறைப்பான் உடம்பு. (1029)

கூ, துன்பத்திற்கே அழிவைத் தரும் கொள்கலன் ஆகும் குடும்பத்தை குற்றமற்றதாக இருக்க உழைப்பவர் உடம்பு.

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்

நல்லாள் இலாத குடி. (1030)

கo, துன்பத் தாக்கத்தால் அழிந்து வீழும், துன்பத்தைக் கடந்துச் செயல்பட்டுக் காக்கும் நல்ல ஒருவர் இல்லாத குடும்பம்.

அதிகார விளக்கம்!

செயல்பட துணியும் கைகளைப் போல் சிறந்தது இல்லை. செயல்திறனும் சிந்தனை திறனும் இணைந்தே வாழ்வை வளமாக்கும். குடி சிறக்க நினைப்பவற்கே தெய்வமும் முன்வந்து உதவும், தானாக நல்முடிவு வரும், உறவுகளும் சூழும். நல்லாண்மை என்ற சிறந்த மனித ஆற்றல் என்பது வாழ்வை வறுமை அற்றதாக மாற்றுவது. போர்களத்தில் போராடும் வீரரைப் போல் கவனமுடன் வாழ்வு சிறக்க செயல்பட வேண்டும். வாழ்வு சிறக்க ஏற்ற பருவம் என்று இல்லை தொடர் முயற்சியே வாழ்வை வளமாக்கும். துன்பத்திற்கு துன்பம் தரும் கொள்கலன் உழைக்கும் ஒருவரின் உடம்பு ஆகும். இக்கட்டான சுழலில் சிக்குண்டு அழியும் அதைக் காக்கும் நல்லாள் இல்லாத குடி.

காணொளி:-

https://youtu.be/ih88anixL_8

## பொருட்பால் | குடியியல் | கoரு, நல்குரவு (105)

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்

இன்மையே இன்னா தது. (1041)

க, இல்லாமையைவிட துன்பமானது என்ன என்றால், இல்லாமையில் இல்லாமையே துன்பமானது. (வறுமையை விட கொடியது வறுமையே).

இன்மை எனவொரு பாவி மறுமையும்

இம்மையும் இன்றி வரும். (1042)

உ, இல்லாமை என்ற ஒரு பாவி வருங்காலம் நிகழ்காலம் என்ற பேதமின்றி வரும்.

தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக

நல்குரவு என்னும் நசை. (1043)

ந, சேர்த்து வைத்தப் பொருளும் திடமான ஆற்றலும் அழியும், இல்லாமை ஏற்படுத்தும் நல்குரவு என்ற நசை மொத்தமாக வந்தால்.

இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த

சொற்பிறக்கும் சோர்வு தரும். (1044)

சு, நிகரற்ற குடும்பத்தில் பிறந்தவரிடத்திலும் இல்லாமை வந்தால் வேதனையான வார்த்தையும் சோர்வும் உண்டாகும்.

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்

துன்பங்கள் சென்று படும். (1045)

ரு, இல்லாமை என்ற வேதனையுள் பல வகைக் குறைபாடுகள் கொண்ட துன்பங்கள் கூடி விடும்.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்

சொற்பொருள் சோர்வு படும். (1046)

சூ, நல்லனவற்றை தெளிவாக பொருள்படும்படி நன்றாக உணர்ந்து சொன்னாலும், இல்லாமையில் இருப்பவர் சொல்லும் பொழுது அப்பொருள் முழுமை பெறாது.

அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்

பிறன்போல நோக்கப் படும். (1047)

எ, அறமற்ற இல்லாமை அடைந்து விட்டால், ஈன்ற தாய் கூட அந்நியனாக பார்ப்பாள்.

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்

கொன்றது போலும் நிரப்பு. (1048)

அ, இன்றும் வருமோ அந்தக் கொடுமை? நேற்றுவரை கொலை செய்வதுப் போல் இருந்த வறுமை. (வறுமை வராதபடி வாழ்)

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்

யாதொன்றும் கண்பாடு அரிது. (1049)

கூ, நெருப்பில் தூங்குவது சாத்தியப்படலாம், நிறைவற்ற நிலையில் எவ்வகையிலும் கண்ணுறக்கம் கொள்வது கடினம்.

துப்புர வில்லார் துவரத் துறவாமை

உப்பிற்கும் காடிக்கும் கூற்று. (1050)

கo, தூய்மையை உரிமையாக பற்றாதவர்கள் முழுமையாக துறக்காமல் இருப்பதால் உப்புக்கும் காடிக்கும் எமனாகிவிடுகிறார்கள்.

அதிகார விளக்கம்!

வறுமையை விட கொடியது வறுமையே இது இன்று நாளை என எப்பொழுதும் வரும் வந்தால் சேர்த்த பொருளும் திட சிந்தனையும் கெடும். நற்குடியில் பிறந்தவரும் தன்நிலை இழக்கச் செய்யும் நல்குரவு வந்தால் தாயும் அந்நியமாக போவாள். நெருப்பிலும் தூங்கலாம் வறுமையில் சாத்தியம் இல்லை எனவே நல்குரவு வராதபடி காக்கவேண்டும். தூய்மையற்ற துறவி உப்புக்கும் காடிக்கும் வழியின்றியே துறவை மேற்கொள்கிறான்.

காணொளி:-

https://youtu.be/5ezm5OajKaE

## பொருட்பால் | குடியியல் | கoஎ, இரவச்சம் (107)

கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்

இரவாமை கோடி உறும். (1061)

க, வெறுப்படையாமல் விருப்பமுடன் கொடுக்கும் கண் போன்றவர் இடத்திலும் கேட்காமல் இருப்பது கோடி நன்மையாகும்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகியற்றி யான். (1062)

உ, கேட்டுப்பெற்றே உயிர் வாழவேண்டிய நிலை ஏற்படும் என்றால் சிதைந்து அழியட்டும் உலகை இயற்றியவன்.

இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்

வன்மையின் வன்பாட்டது இல். (1063)

ங, இல்லாமையையும் துன்பத்தையும் இரவல் பெற்றுத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கொடுமையைவிட கொடுமையானது இல்லை.

இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்

காலும் இரவொல்லாச் சால்பு. (1064)

ச, இருக்கும் இடம் முழுவதும் போதுமானது இல்லை, தனக்கு இடம் இல்லை என்று இரந்து கேட்காதவரின் முன்மாதிரியான பண்புக்கு.

தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது

உண்ணலின் ஊங்கினியது இல். (1065)

ரு, வெறும் தண்ணிர் போல் காய்ச்சிய கூழாக இருப்பினும் உழைத்து உண்ணும் பொழுது அதனிலும் மிகுதியானது இல்லை.

ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு

இரவின் இளிவந்தது இல். (1066)

சூ, பசுவிற்கு தண்ணிர் வேண்டும் என்று இரந்து கேட்பது நாவிற்கு இரப்பதின் இழுவானது இல்லை.

இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்

கரப்பார் இரவன்மின் என்று. (1067)

எ, இரந்து கேட்கிறேன் இரந்து கேட்பவர்கள் எல்லாரையும், இரந்து கேட்க அவமதிப்பவர் இடத்தில் இரந்து கேட்க வேண்டாம் என்று.

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்

பார்தாக்கப் பக்கு விடும். (1068)

அ, இரந்து கேட்டல் என்ற பாதுகாப்பாற்ற தோணி, மறைத்தல் என்ற கடின பாறையால் சிதைந்து விடும்.

இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள

உள்ளதூஉம் இன்றிக் கெடும். (1069)

கூ, கொடுக்கும் பண்புள்ள உள்ளம் உருகும், மறைத்தலை செய்யும் உள்ளம் இருப்பதையும் இல்லாமல் செய்து கெடும்.

கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்

சொல்லாடப் போஒம் உயிர். (1070)

கo, கொடுக்க மறைப்பவர் அழியாமல் எப்படி காப்பார்? கேட்பவர் இல்லை என்ற சொல் கேட்டு போய்விடும் உயிரை.

அதிகார விளக்கம்!

சலிப்பற்ற கண் போல் கொடுக்கும் ஒருவர் இருப்பினும் கேட்காமல் இருப்பதே கோடி நன்மை. கேட்டுப் பெற்றே வாழ வேண்டும் என்றால் கெட்டு ஒழியட்டும் உலகை படைத்தவன். வறுமையை துன்பத்தை அடுத்தவர் உதவியால் அழிக்க வேண்டும் என்பது கொடுமையிலும் கொடுமை. கேட்டுப் பெறாமல் உழைத்து உண்ணும் அரிசி குறைந்த கஞ்சி சிறப்பானது. கேட்பவரை அவமதிப்பவர் இடத்தில் கேட்க வேண்டாம். கொடுப்பவர் உள்ளம் மென்மையாகவும் மேன்மையாகவும் இருக்கும். கொடுக்க மறுப்பவர் தன் உயிரை எப்படி காக்கமுடியும்.

காணொளி:-

https://youtu.be/9hame36JNYY

# பொருட்பால் | அரசியல் | பெரியாரைத் துணைக்கோடல்

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை

திறனறிந்து தேர்ந்து கொளல். (441)

க, அறம் எனப்படும் வாழும் முறை அறிந்து, முன் அனுபவம் பெற்ற சிறந்த அறிவுடையாரின் உறவை அவரின் திறன் அறிந்து விரும்பி ஏற்க வேண்டும்.

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்

பெற்றியார்ப் பேணிக் கொளல். (442)

உ, வந்த துன்பம் விலக்கி, அழிவை வருமுன் காக்கும் பெருமைப் பெற்றவரை விரும்பி ஏற்க வேண்டும்.

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்

பேணித் தமராக் கொளல். (443)

ங, அரிதானவைகளில் அரிதானது பெரியவர்களை மதித்துக் காத்து உறவு கொண்டாடுவது.

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்

வன்மையு ளெல்லாந் தலை. (444)

ச, தன்னை விட பெரியவர்களின் உறவுப் பாராட்டி வாழ்வது வலிமையானவைகளில் எல்லாம் முதன்மையானது.

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்

சூழ்வாரைக் சூழ்ந்து கொளல். (445)

ரு, விரும்பத்தக்கவரின் கண்ணாக வாழ விரும்பும் மன்னவன் விரும்பத்தக்கவரை அருகில் வைத்துகொள்ள வேண்டும்.

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்

செற்றார் செயக்கிடந்த தில். (446)

சு, தகுதியுள்ளவர் கூட்டத்தோடு இணைந்து ஒழுக வல்லவர் இடத்தில், பகைவர் செயல் செயல்படுவது இல்லை.

இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே

கெடுக்குந் தகைமை யவர். (447)

ஏ, அறியாமையை அழுத்தமாய் அழிப்பவரை துணையாக கொண்டவரை யாரும் கெடுக்கும் நோக்கில் அணுக முடியாது.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பா ரிலானுங் கெடும். (448)

அ, அறியாமையை அழிப்பவர் இல்லாத பாதுகாப்பற்ற மன்னன் ஆட்சி, அழிப்பார் இன்றியும் அழியும்.

முதலிலார்க்கு ஊதிய மில்லை மதலையாஞ்

சார்பிலார்க் கில்லை நிலை. (449)

கூ, முதலாகும் உழைப்பு இல்லாதவர்க்கு இல்லை ஊதியமாகும் கூலி. மதில் போல் காக்கும் சான்றோர் இல்லாதவர்க்கு இல்லை சிறந்த நிலை.

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே

நல்லார் தொடர்கை விடல். (450)

கo, பல நபர்கள் பகை கொள்ள பற்று கொள்வதை விட தீமையானது நல்லவர்கள் தொடர்பை விடுவது.

அதிகார விளக்கம்!

அறம் அறிந்த அநுபவம் பெற்ற அறிவாளியை, தன் நோய் போக்கி அடுத்தவர் நோய் போக்க வல்லவரை நட்பு பாராட்டும் திறன் அறிந்து நட்பாக்கிக் கொள்ளவேண்டும். அவர்களை தவறை தண்டிக்கும் இடிப்பாரையாகவும், தகுந்தபடி பாதுகாக்கும் மதிலாகவும் வைத்துக்கொள்ள வேண்டும். பகை வளர்க்கும் பலர் உறவை நாடுவதைவிட நல்லார் தொடர்பை கைவிடாமல் இருப்பதே நல்லது.

காணொளி:-

https://youtu.be/wArNFOXQsmQ

# பொருட்பால் அதிகார விளக்கம்

**அதிகார விளக்கம்**

பொருட்பால், பொதுவாக பால் என்றால் பற்றியிருப்பது என்பதாகும். சமூகத்தோடு இணைந்த எல்லா விசயங்களையும் பொருப்புணர்வோடு எடுத்துரைப்பதனால் பொருட்பால் என்றாகியது. எது எப்படி அமையவேண்டும் என்றும் அதற்கான பொருளை எப்படி ஈட்டுவது என்றும் அதை எப்படி காப்பது என்றும் மேலும் அதன் செயல்களை ஒழுங்குபட வகுப்பது பற்றியும் சிறப்பான விசயங்களை வள்ளுவனார் பொருட்பாலிற்குரிய தரத்தோடு எடுத்தியம்புகிறார்.

அறத்தோடு இந்த உலகை அணுகும் ஒரு மனிதனுக்கு பொருள் சார்ந்த வாழ்க்கையும் வாழ்க்கையின் பொருளும் புரிய வேண்டும் என்பதற்காக வேண்டி இரண்டின் பார்வையோடும் வள்ளுவனார் திருக்குறளில் பாக்களாய் இயற்றியுள்ளார். வாழ்க்கையில் எதுவெல்லாம் பொருள் தருமோ மற்றும் எவையெல்லாம் அர்த்தமாகிறதோ அதற்காக வேண்டி அதை அதிகாரங்களால் அழகு செய்திருக்கிறார் வள்ளுவனார்.

காலச்சூழலுக்கு ஏற்ற மாதிரி சிறிது மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் கூட எல்லா காலத்திற்கும் பொருந்தும் விதமாக இருப்பதனால் பொருட்பால் பொருள் நிறைந்ததாகவும் காலம் கடந்தும் போற்றும் படியாகவும் அமைந்துள்ளது.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க தமிழின் பெருமையை உலகறியச் செய்ததில் வள்ளுவமும் முக்கிய இடம் வகிக்கிறது. வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்று முப்பாலை பாடியிருப்பதில் கூட பலவிதமான சிறப்புகள் உண்டு.

வள்ளுவப் பெருந்தகைக்கு ஏழின் மீது ஏதோ ஈர்ப்பு இருந்திருக்கிறது. அதனால்தான் என்னவோ ஏழு சீர்களில் குறளை எழுதியிருக்கிறார். மேலும் 133 அதிகாரங்களின் கூட்டுத்தொகையும் ஏழாகவே இருப்பதனால் ஏழின் மூலம் எதையோ சொல்கிறார் என்று உணர முடிகிறது.

வள்ளுவர் ஒவ்வொரு அதிகாரத்தின் ஏழாவது குறளையும் சிறப்பாகவே செய்திருப்பதை இங்கு கவனிக்க வேண்டியுள்ளது. பொருளதிகாரம் கூட எழுபது அதிகாரங்களை உள்ளடக்கியதாகவே இருக்கிறது. ஏழு ஏழாய் பிரிப்பதும் தமிழ் மரபாகவே இருந்திருக்கிறது. பெண்ணிண் பருவங்கள் ஏழு, சப்தஸ்வரங்கள் ஏழு, யோகத்தின் ஆதாரங்கள் ஏழு, நாட்கள் ஏழு, இப்படியாக ஏழினை விரித்துரைக்கலாம்.

ஒரு மனிதன் தன் வாழ்க்கையை பொருள் நிறைந்ததாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் அவன் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதை பொருட்பாலின் எழுபது அதிகாரங்களில் சொல்லியுள்ளார். காலப்போக்கில் ஆட்சி அமைப்பு, அதிகார மாற்றம் மாறும் பொழுது வள்ளுவமும் அதற்கேற்றார் போன்று மாறிப் பொருள் தருகிறது.

ஆனாலும் எப்போது எந்த மனநிலையிலிருந்து ஒருவர் அதைப் படித்தாலும் அதற்கேற்றார் போல வள்ளுவம் பக்குவமாய் நம்மோடு பேசுவதை நாம் மறுக்க முடியாததென்பதே வள்ளுவத்தின் தலையாய சிறப்பு.

நாம் வாழும் வாழ்க்கைக்கு பொருள் இருக்க வேண்டும். அதுவும் பொருள் நிறைந்ததாக இருக்க வேண்டும். அந்த பொருளை எப்படியெல்லாம் அடைந்தால் நம் வாழ்வு சிறப்பாக மலரும் என்பதையும் அர்த்தம் நிறைந்ததாக மாறும் என்பதையும் வள்ளுவனார் குறளில் பேசுகிறார்.

மன்னனின் ஆட்சிப் பெருமையை இறைமாட்சியோடு விளங்கச் சொல்லி, எவரும் திருட முடியாத செல்மாகிய கல்வியை கசடற கற்கும் படி வலியுறத்தியும், கல்லாமையால் நம் சொற்பேச்சு எடுபடாது என்று சொல்லி, கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியும், கேள்வியின் மூலம் உயர் ஞானத்தை அடையும் நாதத்தின் சிறப்புரைத்து, அறிவுடைமையோடு திறம்பட செயல்பட்டு, அதனால் உண்டாகும் குற்றங்களை கடிந்து, மானக்கேடான செயல்களை தவிர்த்து, அறமறிந்த பெரியாரைத் துணையாகக் கொள்ள வேண்டும் என்று, வள்ளுவனார் திறம்பட குறளில் தெளிவுபட உரைக்கின்றார்.

தீமை காரியங்களில் ஈடுபடம் சிற்றினத்தாரோடு சேராமையை வலியுறுத்தி, நமக்கு உதவியாய் உள்ளவரோடு, தெரிந்து செயல்படும் வகையை வழியாய் காட்டி, செய்யும் செயலில் எதிராளியின் வலிமையை அறிதல் வேண்டுமெனவும், கொக்கைப் போல் தக்க காலமறிந்து, தடைகளை நன்கு ஆராய்ந்து, இடம் அறிந்து வெற்றி பெற வேண்டுமாயும், எடுத்த வேலையை, நன்கு தெரிந்து தெளிந்தும், பிறகு தெரிந்தே வினையாடலும் செய்தால், சுற்றங்களோடு கூடி இன்பமுற முடியுமெனவும், மேலும் வெகுளித்தனமான பொச்சாவாமையால் ஏற்படும் மறதியால், இழப்பு ஏற்படுமெனவும் வள்ளுவனார் எச்சரிக்கிறார்.

இயற்கையோடு இயைந்த நல்ல ஆட்சியினால், செங்கோன்மை உயர்ந்து புகழப்பெறும் எனவும், ஆனால் மக்கள் வளம்பெற முடியாதவாறு, ஆணைகளால் மட்டுமே ஆளும் கொடுங்கோன்மை யாலும், வெருவந்த செய்யாமையாலும் வெறுப்பு வளர்ந்து, கண்ணோட்டம் என்கிற பக்குவமடைதல் இல்லாமல் போகும். எனவே நல்ல ஆட்சியாளர் ஒற்றாடல் மூலம் நாட்டினையும் மக்களையும் ஊக்கமுடைமை யோடு வழிநடத்தி, மடியின்மை என்கின்ற சோர்வினை களைந்து, ஆள்வினையை உடைமையாக கொண்டு, ஆர்வமாய் செயல்பட்டு இடுக்கண் அழியாமையை உணர்ந்து, இடர்பாடுகளை அழித்து இன்பம் காண வேண்டுமாய் வள்ளுவனார் வழிமொழிகிறார்.

அமைச்சு என்ற நிர்வாகம் சிறப்புற அமைய, முட்டாள்களின் ஆலோசனைகளை தவிர்த்து, சிறந்த சொல்வன்மையால் எவரையும் வெல்லக்கூடிய திறனறிந்து, அதனால் உண்டாகும் வினைத்தூய்மையாலும் அச்செயலை தூய்மையாக செய்பவரின் வினைத்திட்பத்தாலும் தக்க சூழ்நிலையை உணர்ந்து, அதற்கேற்ற கருவிகளோடு வினைசெயல்வகையை மேற்கொண்டு சிறந்த தூதின் மூலம், நாட்டு நடப்புகளை அறிந்து கொண்டு, தக்க நேரத்தையுணர்ந்து தன் கடமையை முடித்திட, அதிகாரத்தில் உள்ளவர்களின் உதவியோடு, நெருப்பினை

பயன்படுத்தும் அளவினைப்போல் மன்னரைச் சேர்ந்தொழுகினால் சிறப்பான வாழ்வு மலரும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

மற்றவர்களின் முகத்தை கவனித்தே குறிப்பறிதல் மூலமும் மேலும் ஆர்வத்தோடு ஒத்த உணர்வுடையவர்கள் அவையறிந்தும், அதன் அளவை மீறாமலும் அவையஞ்சாமையோடு தனது பேச்சாற்றலால் தான் கற்றுணர்ந்ததை சிறப்பாக எடுத்துக்கூறி, நல்ல ஆட்சியினையும் வளங்களை பெருக்குதலையும் நிலை நிறுத்தி, நாட்டின் வளர்ச்சிக்கு துணையாக வேண்டும் என வள்ளுவனார் வரையறுக்கிறார்.

பகைவர்களை வெற்றி கொள்ளும் அரணுடையதாக நாட்டினை நிர்வகித்து, அடைய வேண்டிய பொருளை, பொருள் செயல் வகையை கருத்திற் கொண்டும் வழிநடத்தும் நல்ல ஆட்சிக்குரிய படைமாட்சியோடும், தோல்வியடையாத படைச்செருக்கோடும் தவறை எடுத்துக்கூறவல்ல நிறைவான நல்ல நட்போடு நாட்டை ஆளவேண்டும் என வள்ளுவனார் கூறுகிறார்.

மேலும் கேடு நினைக்கும் உறவு பாராட்டாத நட்பை ஆராய்ந்தும், பழைமை மறவாத நட்பினை வளர்த்தும் பண்பில்லாதவரின் தீநட்பையும் போலியான சிரிப்புடையவர்களின் கூடா நட்பையும், அலட்சியத்தால் தவறவிடும் பேதைமையை கலைந்தும், அறிவில்லாதவரைப் போல் புல்லறிவாண்மையோடு இல்லாமல், நடுநிலை தவறாமல் எவரையும் இகழக் கூடாதென வள்ளுவனார் கூறுகிறார்.

வலிமையானவர்கள் பகைமாட்சியோடு நடந்து, எதிரியின் பகைத்திறம் தெரிந்தும் மேலும் தங்குள்ளாகவே உட்பகை வளர்க்காமல் இருக்கவும் சொல்லி, வழிகாட்டும் பெரியாரைப் பிழையாதும் மதித்தும் நடந்தால், நற்கதி அடையலாம் என்றும் வள்ளுவனார் சொல்கிறார்.

பெண் ஏவும் வேலையை செய்து கொண்டு, பெண்வழிச் சேர்ந்தவன் சிறப்படைய முடியாததைப் போலவே, பொருளுக்காய் உடலின்பம் தரும் வரைவின் மகளிரை நாடுபவன் சிறப்புற முடியாது. கள்ளுண்ணாமையோடும் சூதாடாமலும் ஒருவர் வாழ்ந்தால், அவர் எக்காலத்திலும் எவ்வித உடல் உபாதையின்றியும் உணவே மருந்தென்றும் இன்புற்று வாழலாம்.

சுயக்கட்டுப்பாடு கொண்ட குடிமையில் பிறந்தவர், மானம் என்பதை தன் உயிராய் மதிப்பர். பெருமிதம் இல்லாமல் பணிவுடன் நடந்து பெருமை அடையும் அவர்கள், சான்றாண்மையோடும் பண்புடைமையோடும் வாழ்ந்து சிறப்படைவர். தன்னிடம் உள்ள பொருளை நன்றியில் செல்வமாய், பிறர்க்கு கொடுத்து உதவியும், தன்மீது பழி ஏற்படுமானால் அதற்காக நாணுடைமையும் கொள்வர்.

அவர்கள் குடியின் செயல்வகை அறிந்ததனால், குடும்பத்தை முன்னேற்றப் பாதையில் உயர்த்துவர். மேலும் வாழும் முறையறிந்தவர்களின் தொழிலான, விவசாயத்தினை உழவால் சிறப்பு செய்து, உலகிற்கே உணவிடும் உன்னதம் செய்வதனால், மக்கள் உழுவோரின் பின் செல்வர். நல்குரவாகிய வறுமையை அடைந்தவரும், பிறரிடம் சென்று கேட்கும் இரவு நிலையை அடைந்தால், அந்த இரவச்சத்தினால் கெடுதலே உண்டாகும். மேலும் மக்களைப் போன்ற கயமை குணத்தாரால் உலகம் சீர்கெடும் என்றும் வள்ளுவனார் எச்சரிக்கிறார்.

இப்படி பொருட்பாலில் வள்ளுவனார் பல குறள் மூலம் நல்ல விசயங்களை பதிவு செய்துள்ளார். எனவே அனைவரும் நல்ல அறத்தோடு கூடிய பொருளினை அடைந்து நாட்டின் வளர்ச்சியினை பேணிக்காத்து வாழ்வின் பயனை அடைய வள்ளுவத்தை சிந்தித்து செயல்படுவோம். நலம் வாழ்வோம்.

பொருட்பால்

அதிகாரம் முற்றும்.

# இன்பத்துப்பால் — யோக விளக்கவுரை

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | களவியல் | க கo, குறிப்பறிதல் (110)

இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு

நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. (1091)

க, இருவகை நோக்கு இவளின் கண்கள் பெற்றுள்ளது, ஒரு நோக்கு நோய் உண்டாக்குகிறது மற்றோன்று அந்த நோய்க்கு மருந்து.

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்

செம்பாகம் அன்று பெரிது. (1092)

உ, சிறிய அளவுள்ள கள்ள விழிப் பார்வை காமத்தில் சரிபாதி அல்ல அதனைவிட பெரிது.

நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்

யாப்பினுள் அட்டிய நீர். (1093)

ந, பார்த்தாள் பார்த்து வணக்கமுடன் குனிந்தால் (இறைஞ்சினாள்) அச்செயல் காதல் பயிர் வளர பாய்ச்சிய நீர்.

யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்

தான்நோக்கி மெல்ல நகும். (1094)

ச, நான் பார்க்கும் நேரம் நிலத்தை பார்த்தவள் பார்க்காத நேரத்தில் என்னை பார்த்து மெல்ல சிரிக்கிறாள்.

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்

சிறக்கணித்தாள் போல நகும். (1095)

ரு, காதல் குறிக்கொண்டு நோக்காமல் மாறாக ஒருகண் சிறக்கணித்தாள் (கண்ணடித்தல்) போல மெல்ல சிரிக்கிறாள்.

உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்

ஒல்லை உணரப் படும். (1096)

சு, உறவற்றவர் போல் பேசினாலும் விட்டு விலகாத சொல் விரைவில் உணரப்படும்.

செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்

உறாஅர்போன்று உற்றார் குறிப்பு. (1097)

எ, விலகாத சிறிய சொல்லும் விலக்கச் செய்யும் பார்வையும் உறவற்றவர் போன்ற உறவு பாரட்டுவதற்கான குறிப்பு.

அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்

பசையினள் பைய நகும். (1098)

அ, இணக்கம் உண்டா என்று மாணவனாகிய நான் நோக்கப் இசைவினால் உடனே சிரித்தாள்.

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்

காதலார் கண்ணே உள. (1099)

கூ, எந்தவித உறவும் இல்லாதவர்கள் போல் பொதுவான பார்வை பார்ப்பது காதலர்கள் இடத்தில் உண்டு.

கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்

என்ன பயனும் இல. (1100)

கo, கண்ணோடு கண் இணையாக பார்த்து உறவாடினால் வாய்ச்சொற்கள் பயன் அற்றுப் போகின்றன.

அதிகார விளக்கம்!

நோய் உண்டாக்கவும் அதை தீர்க்கும் மருந்தாகவும் உள்ள இவளின் கண் மறைமுக நோக்கத்திற்கு சரிபாதியல்ல அதைவிட அதிகமானது. காதல் பயிர் வளர்க்கும் அவள் பார்வை நான் வானம் பார்க்கையில் என்மேலும் அவளை பார்க்கையில் மண் மேலும் இருக்கும். ஒரு கண் இமைத்து அவள் காதலை உணர்த்தினாள். அவளது சொல் உறவற்றதாக இருந்தாலும் என்னை விலகாமல் இருந்தது. விலகாத சொல்லும் விலகும் பார்வையும் புதிய குறிப்பாக இருந்தது. ஏதுமற்ற பொதுப்பார்வை காதலர் கண்ணுக்கு உண்டு. கண்ணும் கண்ணும் கலந்தால் வார்த்தைகள் பயன் அற்றுப் போகின்றது.

காணொளி:-

https://youtu.be/W2U0dQ_emN0

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | களவியல் | க க க, புணர்ச்சி மகிழ்தல் (111)

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்

ஒண்தொடி கண்ணே உள. (1101)

க, பார்த்து கேட்டு சுவைத்து நுகர்ந்து தொட்டு அறியும் ஐந்து பொறிகளும் ஒன்றாய் கூடி அனுபவித்தல் உன்னிடத்தில் உள்ளது.

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை

தன்நோய்க்குத் தானே மருந்து. (1102)

உ, பிணிக்கு மருந்துகள் மாறுபட்டே இருக்கும் மெல்லியளாள் உண்டாக்கும் பிணிக்கு அவளே மருந்து.

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்

தாமரைக் கண்ணான் உலகு. (1103)

ந, முழு ஓய்வுக்காய் மென்மையான தோள் உடையாளுடன் உறங்குவதைப் போன்ற இனிமையானது உண்டோ மாறுபட்டதைக் காண்பவர் உலகில்.

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்

தீயாண்டுப் பெற்றாள் இவள். (1104)

ச, விலகினால் அழிவும் நெருங்கினால் இதமான குளிர்ச்சியும் தரும் தீ ஒன்றை பெற்றுள்ளாள் இவள்.

வேட்ட பொழுதின் அவையவை போலுமே

தோட் டார் கதுப்பினாள் தோள். (1105)

ரு, வேண்டிய பொழுது இன்பம் தந்து உதவிடும் ஒன்றைப் போலவே மலர்க் கூந்தல் விளையாடும் தோள்.

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு

அமிழ்தின் இயன்றன தோள். (1106)

௬, ஒவ்வொரு பொழுதும் உயிர் வளர்க்கத் தீண்டுவதால் பேதைக்கு அமிழ்தைப் போன்ற இயல்புடைய தோள்.

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்

அம்மா அரிவை முயக்கு. (1107)

௭, தன்னுடன் இருந்து தன் உழைப்பால் உண்டானதை பகிர்ந்து உண்ணும் மாபெரும் மகிழ்ச்சி பருவ பெண்ணின் முயக்கத்தில் இருக்கிறது.

வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை

போழப் படாஅ முயக்கு. (1108)

௮, காதலில் வீழும் இருவர்க்கு இனிமையானது காற்றும் இடை புகாத முயக்கம்.

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்

கூடியார் பெற்ற பயன். (1109)

௯, சிறிய பிணக்கு, தேவை உணர்தல், புணர்ந்து மகிழ்தல் இவைகள் காமத்துடன் கூடி இணைந்தவர் பெற்ற பயன்.

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்

செறிதோறும் சேயிழை மாட்டு. (1110)

௧௦, அறியும் தருணமெல்லாம் தன்னிடம் உள்ள அறியாமை கண்டறிவதைப் போல் காமத்துடன் உயர்ந்தவளை அணுகும் தருணமெல்லாம் உணரப்படுகிறது.

அதிகார விளக்கம்!

கண்டு கேட்டு சுவைத்து முகர்ந்து தொட்டு கூடி மகிழ்தல் பெண் இடத்தில் மொத்தமாக உள்ளது. நோய் உண்டாக்கிய ஒன்றுக்கு வேறு ஒன்றே மருந்து பெண் இவளோ நோய் செய்து மருந்தாகவும் இருக்கிறாள். பெண்ணுடன் உறங்குதை போல் இனிமையான ஒன்று மாறும் இவ்வுலகில் இல்லை. விலகிச் சென்றால் சுட்டெரிக்கும் புதிய நெருப்பு பெண். அவள் தோள் வேண்டிய பொழுது இன்பம் தரும் என்பதால் அமுதுக்கு ஒப்பானது. இளம் பெண்ணுடன் இணைதல் தன் உழைப்பால் உண்ணும் உணவு போன்றது. காற்றும் இடை புகாத முயக்கம், சிறு பிணக்கு இவை காமத்தின் பயன்கள். அறியாமை அறிந்து அழித்துக் கொள்ளும் பிள்ளை போல் காமத் தொடர்பு செம்மையாக்கும்.

காணொளி:-

https://youtu.be/bnS-TtmFhz4

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | களவியல் | ௧௧௨, நலம் புனைந்து உரைத்தல் (112)

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி

வாலெயிறு ஊறிய நீர். (1121)

௧, பால் உடன் தேன் கலந்ததைப் போன்றது பண்புடன் பேசும் பற்களில் ஊறிய நீர்.

உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன

மடந்தையொடு எம்மிடை நட்பு. (1122)

௨, உடம்பும் உயிரும் எப்படியோ அப்படியே பருவப் பெண்ணுக்கும் எனக்கும் உள்ள நட்பு.

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்

திருநுதற்கு இல்லை இடம். (1123)

ந, கருமணியில் இருக்கும் பாவையே நீ போய்விடு கண்ணில் படும் அழகிய நெற்றியுடைவள் இருக்க இல்லை இடம்.

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்

அதற்கன்னள் நீங்கும் இடத்து. (1124)

ச, வாழ்தலுக்கு உயிர் போன்று வளம் தருபவள் சாதல் அதற்கு காரணமாக நீங்கும் இடத்து இருக்கிறாள்.

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்

ஒள்ளமர்க் கண்ணாள் குணம். (1125)

ரு, நினைப்பதில்லை நான் காரணம் மறப்பதை மறந்தும் அறியவில்லை ஒளி பொருந்திய கண்ணாள் குணத்தை.

கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருகுவரா

நுண்ணியர்எம் காத லவர். (1126)

சூ, கண்களை மூடினாலும் மறைந்து போகமாட்டார் ஆகையால் இமைப்பதால் விலகமாட்டார் அவ்வளவு நுட்பமானவர் என் காதலவர்.

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்

எழுதேம் கரப்பாக்கு அறிந்து. (1127)

எ, கண்களின் உள்ளே காதலர் இருப்பதால் கண்களுக்கு மை எழுதுவதில்லை மறைத்துவிடும் என்பதை அறிந்து.

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்

அஞ்சுதும் வேபாக்கு அறிந்து. (1128)

அ, நெஞ்சில் நிறைந்து என் காதலர் இருக்க சூடாக உண்ண அஞ்சுகிறேன் வெப்பம் தாக்கும் என்பதை அறிந்து.

இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே

ஏதிலர் என்னும்இவ் வூர். (1129)

கூ, இமைத்தால் மறைந்து விடுவார் என்று அறிந்து இமைக்காமல் இருப்பதால் ஒட்டுமொத்தமாக அவரை அன்பற்றவர் என்னும் இவ்வூர்.

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்

ஏதிலர் என்னும்இவ் வூர். (1130)

கo, விருப்பமுடன் எனது உள்ளத்தில் என்றும் இருக்கிறார் பிரிந்து இகழ்ந்து இருக்கிறார் என்று பழிக்கும் இவ்வூர்.

அதிகார விளக்கம்!

பாலில் தேன் கலந்தது போல் முத்தம் தித்திக்கும். உடலும் உயிரும் கலந்தது போல் கலந்த அவள் கண்மணியின் கருவிழியை கடந்து நெற்றியிலும் நிறைகிறாள். வாழ்தலுக்கான உயிராக இருந்து காக்கிறாள். அவளை மறக்கவே இல்லை எனவே நினைப்பதும் இல்லை. அவரோ கண்ணை விட்டு விலகுவது இல்லை, மை கொண்டு மறைக்கவும் இயலவில்லை, நெஞ்சில் நிலைப்பதால் வெப்பமான உணவு உட்கொள்ளவில்லை. கண்ணையும் இமைக்காமல் அவரை காப்பதால் அன்பற்றவராக இந்த மனிதர்கள் அவரை நினைக்கிறார்கள். அவரோ என் உள்ளத்தில் நீங்காமல் இருக்கிறார்.

காணொளி:-

https://youtu.be/U0pxLHl9sww

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | களவியல் | க க ச, நாணுத் துறவு உரைத்தல் (114)

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்

மடலல்லது இல்லை வலி. (1131)

க, காமம் பழகி பின் ஒரு காரணத்தால் வருந்தும் ஒருவருக்கு பாதுகாப்பு பணிமுறை முடங்கல் இன்றி வலி தீராது.

நோனா உடம்பும் உயிரும் மடலேறும்

நாணினை நீக்கி நிறுத்து. (1132)

உ, தாங்கமுடியா காமத்தால் உடம்பும் உயிரும் அச்சப்பட வேண்டிய மடலேறும் எனவே நாணத்தை விலக்கி வை.

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்

காமுற்றார் ஏறும் மடல். (1133)

ங, நாணத்துடன் நல்ல ஆண்மையோடு முன்னர் இருந்தேன் இன்றோ காமத்தால் காமுற்றவர் ஏறும் மடல் அடைந்தேன்.

காமக் கடும்புனல் உய்க்கும் நாணொடு

நல்லாண்மை என்னும் புணை. (1134)

ச, காமம் என்ற கடுமையான நீர் பெருக்கு அழித்துவிடும் வாழ வைக்கும் நாணத்துடன் நல்ல ஆண்மை என்னும் தோணியை.

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு

மாலை உழக்கும் துயர். (1135)

ரு, வளையல் அணிந்த விளையாட்டுப் பெண் தந்தாள் மடலொடு மாலை நேரத்துத் துயரத்தையும்.

மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற

படல்ஒல்லா பேதைக்கென் கண். (1136)

சு, மடலூர்தலை நள்ளிரவிலும் நினைக்கிறேன் காரணம் மாற்ற முடியாத வேதனையை அடைந்தது இளம்பெண்ணாள் என் கண்.

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்

பெண்ணின் பெருந்தக்கது இல். (1137)

எ, கடல் அளவு காமத்தில் ஆட்பட்டாலும் மடலேறாப் பெண்ணின் பெருமை போன்று ஒன்று இல்லை.

நிறையரியர் மன்அளியர் என்னாது காமம்

மறையிறந்து மன்று படும். (1138)

அ, நிறைவை அறியாதவர் மதிக்கத் தாகாதவர் என அறியாது காமம் மறைக்க முடியாமல் வெளிப்படும்.

அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்

மறுகின் மறுகும் மருண்டு. (1139)

கூ, எல்லாரும் அறியமுடியாது என்றே என் காமம் மறைக்க முடியாமல் மறைந்திருப்பதாக சபலமடைகின்றது.

யாம்கண்ணின் காண நகுப அறிவில்லார்

யாம்பட்ட தாம்படா ஆறு. (1140)

கO, நாம் கண்ணில் பார்க்கும் படியே நகைப்பர் அறிவல்லாதவர் நாம் பட்டதை அவர்கள் படாதபடி மாற்று வழியில் நடப்பதால்.

அதிகார விளக்கம்!

காமத்தின் வலி போக மடல் ஏறுதல் ஒருவகை தீர்வு தரும். இதை தவிர்க்க வெட்கத்தை விலக்கிடச் செய்யவேண்டும். நாணமும் நல்ல ஆண்மையும் காமத்தால் மடல் ஏறும். காமம் என்ற கொடிய வெள்ளம் நாணம் என்ற படகை கவிழ்த்துவிடும். மாலை நேரத்து துன்பத்தை வளையல் அணிந்தவள் தந்தாள். எந்த வேலையும் செய்யமுடியாத மடல் அடைந்தேன் பேதை அவளை என் கண் கண்டதால். கடல் அளவு காமம் இருந்தாலும் மடல் அடைய பெண் பெருமைக்குரியவள். நிறைவு அடையாதவர் மதிக்கத் தகுந்தவர் இல்லை என்பதை அறியாமல் மறையாமல் காமம் வெளிப்படுகிறது. நம் ஏக்கம் அறியாதவர் நம் கண்ணில் படும்படியே நகைப்பர்.

காணொளி:-

https://youtu.be/srDSjJ9nLpM

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க க சூ, பிரிவு ஆற்றாமை (116)

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்

வல்வரவு வாழ்வார்க்கு உரை. (1151)

க, பிரியமாட்டாய் என்றால் எனக்குச் சொல் மற்றபடி நீ திரும்ப வரும்வரை வாழ்வார்க்குச் சொல்.

இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்

புன்கண் உடைத்தால் புணர்வு. (1152)

உ, இன்பம் அளிக்கும் அவரது பார்வை பிரிவை நினைக்க துன்பம் உடைய கூடுதலாக இருக்கிறது.

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்

பிரிவோ ரிடத்துண்மை யான். (1153)

ங, அறிவுள்ளோர்க்கும் தேற்றிக் கொள்ளவது அரிதாக இருக்கிறது பிரிவு ஓரிடத்தில் உண்மையாகி விடுவதால்.

அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்

தேறியார்க்கு உண்டோ தவறு. (1154)

ச, இன்பம் அளித்து அஞ்சதே என்று சொன்னவர் பிரிந்தார் என்றால் அவரது தெளிவான சொல்லை கேட்டு தேறியவர்க்கு உண்டோ தவறு.

ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்

நீங்கின் அரிதால் புணர்வு. (1155)

ரு, உறவு பாராட்டுபவர் பிரிவு ஏற்படாதபடி உறவு பாராட்டவேண்டும் மற்றபடி விலகிவிட்டால் அரிதாகிவிடும் கூடுதல்.

பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதவர்

நல்குவர் என்னும் நசை. (1156)

சூ, பிரிவை சொல்லும் அளவிற்கு கடுமையானவராக இருப்பவர் என்றால் அரியதுதான் அவர் நல்லன செய்வார் என்ற நப்பாசை.

துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை

இறைஇறவா நின்ற வளை. (1157)

எ, இன்பதுன்ப போக்குவரத்திற்கு காரணமான துறைவன் என்னை விட்டு விலகியதை நான் தூற்றாமல் இருந்தாலும் இடம் விட்டு நகராத முன்கை வளை இருக்காது.

இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்

இன்னாது இனியார்ப் பிரிவு. (1158)

அ, துன்பமானது இசைவு இல்லாத ஊரில் வாழ்வது அதனினும் துன்பாமனது இனிமையானவரின் பிரிவு.

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல

விடிற்சுடல் ஆற்றுமோ தீ. (1159)

கூ, தொட்டால் சுடும் மற்றபடி காம நோய் போல் விலகி இருக்க சுடும் ஆற்றல் கொண்டதா தீ.

அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்

பின்இருந்து வாழ்வார் பலர். (1160)

க0, அரிய செயல்கள் செய்து கடினமான வேதனையை விலக்கி பிரிவை ஏற்று அதன் பின் வாழ்ந்துக் கொண்டு இருப்பவர் பலர்.

அதிகார விளக்கம்!

பிரிந்து போகமாட்டாய் என்றால் என்னிடம் சொல் பிரிவதாக இருந்தால் அதை தாங்குபவர் இடத்தில் சொல். இன்பம் தந்த அதே கண் பிரிவை நினைத்து துன்பத்தை தருகிறது. அறிவு நிறைந்தவருக்கும் அரிது பிரிவு என்ற உண்மையை கண்டு தன்னை தேற்றிக்கொள்ள. அஞ்சாதே என்று ஆறுதல் சொல்லி பிரிந்தால் துன்பப்படுதல் தவறாகுமா?. பிரிவு உறவை முறிக்கும். பிரிய முடியும் என்றால் நன்மை செய்வது சாத்தியம் இல்லை. நடக்கும் செயல்களுக்கு அஞ்சி துறந்தவர் கைகளும் இறையை இறஞ்சும் என்றால் அது எப்படி உண்மையாகும். மாறுபட்ட மனிதர்களுடன் வாழ்வதை விட துன்பமானது இனிமையான துணையை பிரிந்து வாழ்வது. விலகி இருப்பதால் சுட்டெரிக்கும் காமத்தீயே தீயை விட கொடியது. அரிதான பிரிவை கடந்து அதன்பின் இனிதாக வாழ்பவரும் உண்டு.

காணொளி:-

https://youtu.be/W-CPciy9JNQ

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க க எ, படர் மெலிந்து இரங்கள் (117)

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு

ஊற்றுநீர் போல மிகும். (1161)

க, மறைத்து விடலாம் என முயல்வேன் என் நோயை ஆனால் இறைக்க சுரக்கும் ஊற்று நீர் போல் மிகுந்து விடுகிறது.

கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு

உரைத்தலும் நாணுத் தரும். (1162)

உ, மறைத்து விடவழி இல்லை இந் நோயை நோய் உண்டாக்கியவர்க்கு உரைப்பதும் வெட்கம் தரும்.

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்

நோனா உடம்பின் அகத்து. (1163)

ங, காமமும் நாணமும் என் மனதில் உயிர் என்ற காவரத் தண்டால் நிலைபெறுகிறது வலி அற்ற உடம்பில் வலி உண்டாக்க.

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்

ஏமப் புணைமன்னும் இல். (1164)

ச, காமம் என்ற கடல் சூழும் நிலை உண்டாகும் அதை நீந்திக் கடக்கும் கப்பல்தான் இல்லை.

துப்பின் எவனாவர் மன்கொல் துயர்வரவு

நட்பினுள் ஆற்று பவர். (1165)

ரு, வெறுத்தால் என்ன செய்வாரோ? நட்பாய் இருக்கும் பொழுதே வராமல் துன்பம் தருபவர்.

இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்

துன்பம் அதனிற் பெரிது. (1166)

சு, இன்பத்தை கடல் அளவு மாற்றும் காமத்திற்கு தடை உண்டானால் கடலை விட துன்பம் பெரிதாகி விடும்.

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்

யாமத்தும் யானே உளேன். (1167)

எ, உடல் வேட்கையான காமம் என்ற பெரும் வெள்ளத்தினை நீந்திக் கரை காண முடியவில்லை நள்ளிரவும் நான் தனித்திருக்கிறேன்.

மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா

என்னல்லது இல்லை துணை. (1168)

அ, வாழும் உயிர்களை எல்லாம் உறங்கச் செய்து இசைவு தந்த இரவே உனக்கு என்னை அல்லாது வேறு துணை இல்லை.

கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்

நெடிய கழியும் இரா. (1169)

கூ, கேடு செய்யும் கொடியவர்களை விட கொடுமையானது இந்நாள் (துணையின்றி) நீண்ட நேரம் கடந்து கழியும் இரவு.

உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்

நீந்தல மன்னோஎன் கண். (1170)

கo, உள்ளம் போலவே நினைக்கும் இடம் செல்ல முடியும் என்றால் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்குமோ என் கண்.

அதிகார விளக்கம்!

மறைக்க முடியாதபடி ஊற்று நீராய் வெளிப்படுகிறது என் நோய். இதை உண்டாக்கிய அவரிடம் சொல்லவும் வெட்கமாக இருக்கிறது. காமமும் வெட்கமும் காவடித் தண்டுபோல் இருந்து என்னை வேதனை அடையச் செய்கிறது. காமக்கடல் நீந்திட ஏதுவான கப்பல் இல்லை. நட்பாய் இருக்கும் பொழுதே வராத அவர் வெறுத்தால் என்ன செய்வாரோ. கடல் அளவு இன்பம் தரும் காமமே தடை உண்டானால் கடலைவிட துன்பம் தருகிறது. காமக் கடல் நீந்த முடியாமல் நள்ளிரவிலும் நான் தவிக்கிறேன். எல்லாவற்றிற்கும் ஓய்வு தந்த இரவு என்னை துணையாக விழுத்திருக்கச் செய்தது. கொடியவர்கள் செய்யும் கொடுமைவிட துணை இல்லா இந்த இரவு கொடுமையானது. உள்ளம் போல் நினைக்கும் இடம் எல்லாம் செல்ல முடியும் என்றால் வேதனையான கண்ணீரில் மிதக்காது என் கண்.

காணொளி:-

https://youtu.be/vObfb7gnGTY

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க க கூ, பசப்பு உறு பரவல் (119)

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்

பண்பியார்க்கு உரைக்கோ பிற. (1181)

க, நயம்பட பேசியவர்க்கு ஒப்புக் கொள்ளாமல் உடன்பட்டுப் போனேன் எனவே பசலை படர்ந்ததை பிறர்க்கு எப்படி உரைப்பேன்.

அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்

மேனிமேல் ஊரும் பசப்பு. (1182)

உ, அவர் தந்தார் என்பதால் இவரைப் போல் என் மேனிமேல் ஊர்ந்து பரவுகிறது பசப்பு.

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா

நோயும் பசலையும் தந்து. (1183)

ங, அழகையும் வடிவையும் அவர் கொண்டார் கைம்மாறாக நோயும் பசலையும் தந்து.

உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்

கள்ளம் பிறவோ பசப்பு. (1184)

ச, நினைத்துக் கொண்டே இருக்கிறேன் மற்றபடி அவரது திறத்தை உரைத்துக் கொண்டு இருக்கிறேன் இருப்பினும் கள்ளத்தனமாகவோ பிற வழியிலோ பசலையும் வந்தது.

உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்

மேனி பசப்பூர் வது. (1185)

ரு, அப்பக்கம் காதலர் பிரிந்து செல்வார் இப்பக்கம் எனது மேனியில் பசலையும் வந்தது.

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்

முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. (1186)

சு, விளக்கை அகற்றியதும் பரவ பார்க்கும் இருளைப் போல் கணவன் முயக்கம் அகற்றியதும் பரவ பார்க்கும் பசப்பு.

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்

அள்ளிக்கொள் வற்றே பசப்பு. (1187)

எ, கூடிக்கிடந்தேன் கொஞ்சம் விலகினேன் அதற்குள்ளாகவே அள்ளிக் கொண்டது பசப்பு.

பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்

துறந்தார் அவர்என்பார் இல். (1188)

அ, பசலை இவளுக்கு படர்ந்தது என்பதைத் தவிர இவளை காதலன் துறந்தார் என்று சொல்பவர் இல்லை.

பசக்கமன் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்

நன்னிலையர் ஆவர் எனின். (1189)

கூ, உடலில் பசலை படர்ந்து எப்பாடு பட்டால் என்ன நயமாக பேசி பிரிந்தவர் நல்ல நிலை உடையவர் என்றால்.

பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்

நல்காமை தூற்றார் எனின். (1190)

கo, பசலை படர்ந்தவள் என்று பெயர் பெறுதல் நன்றே நயமாக பேசி பிரிந்தவர் வாக்கு மாறியவன் என தூற்றார் என்றால்.

அதிகார விளக்கம்!

நயம்பட பேசி உடன்படாத என்னை ஒப்புக்கொள்ள செய்தார் என்பதால் என் பசலையை யாரிடமும் சொல்ல முடியவில்லை. பசலையோ அவரைப் போல் என்னில் பரவுகிறது. என் அழகையும் நாணத்தையும் அவர் பெற்றுக்கொண்டு நோயும் பசலையும் எனக்கு தந்தார். அவரது திறத்தை எண்ணியபடி இருப்பினும் பசப்பு வருகிறதே. அவர் என்னை பிரியும் பொழுதே பசப்பு தொற்றுகிறதே. விளக்கை அகற்ற இருல் பரவுவது போல் அவர் முயக்கம் முடிந்ததும் பசலை பரவுகிறது. பசலை படர்ந்தது என்றே கூறுகின்றார் காதலன் பிரிந்தான் என கூறுவது இல்லை. எப்படியோ அவர் நன்றாக இருந்தால் போதும். (பசலை என்பது பிரிவு தாங்காமல் தோலில் ஏற்படும் மாற்றம்)

காணொளி:-

https://youtu.be/RETt01otJrU

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க உ0, தனிப் படர் மிகுதி (120)

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே

காமத்துக் காழில் கனி. (1191)

க, தன்னால் ஒருவரை வீழ்த்தி தானும் வீழ்ந்த நிலைப் பெற்றவரே பெற்றவர் காமத்தால் முழுவதும் சுவைக்கத் தகுந்தக் கனி.

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு

வீழ்வார் அளிக்கும் அளி. (1192)

உ, வாழ்வதற்கு வானம் நன்மை பயப்பது போல் காதலில் வீழ்பவற்கு வீழ்பவரே நன்மை அளிக்கின்றார்கள்.

வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே

வாழுநம் என்னும் செருக்கு. (1193)

ங, காதலில் வீழ்பவர் வீழ்த்தியவர் என இவர்களுக்கு அமையுமே நாம் வாழ்கிறோம் என்ற செருக்கு.

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்

வீழப் படாஅர் எனின். (1194)

ச, காதலில் வீழ்பவர் நட்புக்கு உகந்தவராக ஏற்கமாட்டார்கள் தன்னால் ஒருவர் காதலில் விழுந்தும் தான் வீழப்படவில்லை என்றால்.

நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ

தாம்காதல் கொள்ளாக் கடை. (1195)

ரு, நாம் காதல் கொண்ட அவர் நமக்கு என்ன செய்ய முடியும் தான் காதல் கொள்ளவில்லை என்றால்.

ஒருதலையான் இன்னாது காமம்காப் போல

இருதலை யானும் இனிது. (1196)

சு, ஒருதலையாய் இல்லாமல் காமம் என்பது காவடி போல் இருதலையாய் இருப்பது என்றும் இனியது.

பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்

ஒருவர்கண் நின்றொழுகு வான். (1197)

எ, பருவம் பூப்பதையும் தேவை ஏற்படுவதையும் அறியமுடியாத காமத்திற்கான தேவன் ஒருவர் மீது மட்டும் நின்று செயல்படுகிறான்.

வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து

வாழ்வாரின் வன்கணார் இல். (1198)

அ, காதலில் வீழ்ந்தவர் இடத்தில் இருந்து இனிமையான சொல் பெறாமல் உலகத்தில் வாழ்பவரை விட வன்மையானவர் இல்லை.

நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு

இசையும் இனிய செவிக்கு. (1199)

கூ, நாடி வரவில்லை கொடுக்கவில்லை என்றாலும் அவரிடத்தில் வரும் வார்த்தைகள் இசைபோல் இனிமையானது செவிக்கு.

உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்

செறாஅஅய் வாழிய நெஞ்சு. (1200)

கo, உறவை நாடாதவர்க்கு தான் உற்ற நோயை உரைப்பாய் கடலைத் தூர்பதற்கு முயல்வதைப்போல் என் நெஞ்சே நீ வாழ்க.

அதிகார விளக்கம்!

தானும் வீழ்ந்து தலைபட்டவரையும் விழச் செய்பவரே காமத்தின் கனி உண்டவர். வானம் போல் கொடுத்து வாழ்த்துவது காதலில் விழுந்தவருக்கு தானும் வீழ்ந்து உதவுவது போன்றது. வீழ்ந்தவர் வீழ்த்தப்பட்டவர் வாழ்கிறோம் என்ற செருக்கு அடைகின்றார்கள். வீழாதவர் காதலுக்கு உகந்தவர் இல்லை. காதலருக்கு காதல் செய்வதே உதவி மாற்று இல்லை. காவடி போல் இருபக்கமும் இருப்பதே காதல். இயற்கை மாற்றம் தரும் காமன் ஒருவர் மேல் செயல்படுகிறான். அருகே நாடி வரவில்லை என்றாலும் அவரது வார்த்தைகள் இசை போன்றது.

காதலின் இசை கேட்காதவர் வறுமையான வாழ்வு வாழ்ந்தவர். நெஞ்சே உன்னை வாழ்த்துகிறேன் உறவை நாடாத அவருக்கு சொல் கடலை தூர்க்க முயலும் செயல் என்று.

காணொளி:-

https://youtu.be/iIMoAZm54Ik

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க உ உ, கனவு நிலை உரைத்தல் (122)

காதலர் தூதொடு வந்த கனவினுக்கு

யாதுசெய் வேன்கொல் விருந்து. (1211)

க, காதலரை இணைக்கும் தூதொடு வந்த கனவிற்கு என்ன செய்வேனோ எவ்வகையில் செய்வேனோ விருந்து.

கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்கு

உயலுண்மை சாற்றுவேன் மன். (1212)

உ, மீன் போன்ற கண்கள் உறங்கும் நிலையில் காதலரை கலந்தால் உற்ற உண்மையை எப்படிச் சொல்லுவேன்.

நனவினால் நல்கா தவரைக் கனவினால்

காண்டலின் உண்டென் உயிர். (1213)

ந, நிகழும் காலத்தில் நெருங்காதவரை கனவில் கண்டு உறவாடுவதால் இருக்கிறது என் உயிர்.

கனவினான் உண்டாகும் காமம் நனவினான்

நல்காரை நாடித் தரற்கு. (1214)

ச, கனவில் கண்டு உறவாடி மகிழும் காமத்தால் நேரில் நாடாத அவரை நாட காரணமாய் இருக்கிறது.

நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்

கண்ட பொழுதே இனிது. (1215)

ரு, நேரில் கண்டு இருந்தது எப்படியோ கனவில் கண்ட பொழுதும் இருந்தது அதே இனிமை.

நனவென ஒன்றில்லை ஆயின் கனவினால்

காதலர் நீங்கலர் மன். (1216)

சூ, நேரில் நிகழ்வது என்று ஒன்றில்லை என்றால் கனவில் காதலர் நீங்காமல் இருப்பார் அன்றோ.

நனவினால் நல்காக் கொடியார் கனவினால்

என்எம்மைப் பீழிப் பது (1217)

எ, நேரில் நாடி வராத கொடியவர் கனவில் வந்து ஏன் என்னை வருந்தச் செய்வது.

துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்

நெஞ்சத்தர் ஆவர் விரைந்து. (1218)

அ, உறங்கையில் உறவாடுபவராக இருப்பவர் விழித்தவுடன் நெஞ்சத்திலே நிறைந்து விடுகிறார் விரைந்து.

நனவினால் நல்காரை நோவர் கனவினால்

காதலர்க் காணா தவர். (1219)

க, நேரில் நெருங்காதவரை நொந்துக் கொள்வார்கள் யார் எனப் பார்த்தால் அவர்கள் கனவிலும் காதலரை காணாதவர்கள்.

நனவினால் நம்நீத்தார் என்பர் கனவினால்

காணார்கொல் இவ்வூ ரவர். (1220)

கο, நனவினால் நம்மை பிரிந்து இருப்பவர்கள் என்று சொல்கிறார்கள் கனவினால் உறவாடுவதை காணாத இவ்வூர் மக்கள்.

அதிகார விளக்கம்!

காதலரை இணைக்க வந்த கனவை எப்படி கொண்டாடி மகிழ்வேன். மீன் போன்ற கண்கள் உறங்கும் தருணம் காதலரை கலந்தால் எப்படி உரைப்பேன். நேரில் நெருங்காத என் காதலர் கனவில் கலப்பதால் நிலைக்கிறது என் உயிர். கனவில் என் காமம் நிறைவாகிறது. நேரில் கண்ட சுகம் கனவு தருகிறது. நேரில் நடக்கவே நடக்காது என்றால் கனவில் நீங்காமல் இருக்கலாம். நேரில் வராத கொடிய காதலர் கனவில் வந்து பிழைக்கச் செய்கிறார். உறக்கத்தில் உறவாடி விழிப்பில் நெஞ்சம் நிறைகிறார். நேரில் நெருங்காதவரை நொந்துக் கொள்பவர்கள் கனவிலும் காணதவர்கள். நாங்கள் கூடவில்லை என நினைக்கும் இவ்வூர் மக்கள் கனவில் இணைவதை அறியாதவர்கள்.

காணொளி:-

https://youtu.be/SEBAB6rS3C8

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க உ ங, பொழுது கண்டு இரங்கல் (123)

மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்

வேலைநீ வாழி பொழுது. (1221)

க, மாலைப் பொழுதோ இல்லை மணமானவர்களின் உயிரை உண்ணும் வேலையோ உன்னை வாழ்த்துகிறேன் பொழுதே.

புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்

வன்கண்ண தோநின் துணை. (1222)

உ, மாயமாக தாக்கி மயங்கும் மாலைப் பொழுதே வாழ்க எனது உறவுக்குரியவர் போல் கடினமானதோ உன் துணை.

பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்

துன்பம் வளர வரும். (1223)

ங, பனி போல் மெல்ல அரும்பி வேகமாய் வரும் மாலை சிறு துளி அரும்பித் துன்பம் வளர வரும்.

காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து

ஏதிலர் போல வரும். (1224)

ச, காதலர் உடன் இல்லாத மாலைப் பொழுது கொலைக் களத்தில் இருக்கும் இரக்கமில்லாதவரைப் போல் வரும்.

காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்

மாலைக்குச் செய்த பகை. (1225)

௫, காலைப் பொழுதுக்கு என்ன நன்றி செய்தேனோ எப்படி அறிய முடியுமோ மாலைப் பொழுதுக்கு செய்த பகை.

மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத

காலை அறிந்தது இலேன். (1226)

௬, மாலைப் பொழுது தரும் நோய் எப்படிப்பட்டது என்று மணந்தவர் என்னை விட்டு விலகாத காலத்தில் அறியாமல் இருந்தேன்.

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி

மாலை மலரும்இந் நோய். (1227)

௭, காலையில் அரும்பாகி பகல் பொழுதில் வளர்ச்சி பெற்ற போது என மாறி மாலையில் முழுமையாக மலரும் இந்நோய்.

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்

குழல்போலும் கொல்லும் படை. (1228)

௮, கருகச் செய்யும் மாலைக்கு தூதாகி தாக்குகிறது தேடுபவன் குழல் போன்ற கொல்லும் படை.

பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு

மாலை படர்தரும் போழ்து. (1229)

௯, தலைவனின் மருட்சியால் உறவோர்கள் மயங்குவதைப் போல் நிலவு மருண்டு மாலை படர்தரும் போழ்து.

பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை

மாயும்என் மாயா உயிர். (1230)

௧௦, பொருள் தேடி சென்றத் தலைவனை எண்ணி அச்சம் தரும் மாலைப் பொழுதுக்கு அழியும் என் அழியா உயிர்.

அதிகார விளக்கம்!

மாலையோ இல்லை மணமானவர்கள் உயிர் வாங்கும் வேலையோ எப்படி இருப்பினும் உன்னை வாழ்த்துகிறேன். உன் துணையும் என் துணை போன்று பிரிந்து கூடும் ஒன்றோ பனி போல் துளிர்த்து அரும்புகிறதே. காதலர் இல்லாத பொழுது வரும் மாலை ஒரு கொலைகளத்து ஏதிலர் போல் இருக்கிறது. காலை பொழுதிற்கு நன்றியும் மாலை பொழுதிற்கு பகையும் ஆனாது ஏனோ?. மாலை தரும் துன்பம் அவருடன் இருந்த காலத்தில் அறியவில்லை. காலை அரும்பி பகலில் போதாகி மாலையில் மலரும் இந்த காமநோய். போர்களத்து ஓசையாக இருக்கிறது இந்த மாலை. நிலவும் மயங்கி நிலை குலைகிறது மாலை பொழுதில். ஓயாத உயிரும் மாய்கிறது பொருள் தேடி சென்ற தலைவன் நினைவால்.

காணொளி:-

https://youtu.be/NB2o2lpmVLg

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க உ ச, உறுப்பு நலன் அழிதல் (124)

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி

நறுமலர் நாணின கண். (1231)

க, சிறுமை நமக்கு ஒழிய வேண்டும் என்று தூரம் சென்றவரை எண்ணி நறுமலரைக் கண்டு நாணின கண்.

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்

பசந்து பனிவாரும் கண். (1232)

உ, விரும்பியவர் நெருக்காததை சொல்லுவது போல் உள்ளது பசந்து பனிவாரும் கண்.

தணந்தமை சால அறிவிப்ப போலும்

மணந்தநாள் வீங்கிய தோள். (1233)

ந, பிரிந்திருப்பதை அழுத்தமாய் அறிவிப்பது போல் உள்ளது மணம் முடித்த நாட்களில் வீங்கி இருந்த தோள்.

பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்

தொல்கவின் வாடிய தோள். (1234)

ச, பருமன் குறைந்து வளையல் போல் மெலிந்துவிடும் துணை நீங்கிப் பழைய நினைப்பில் வாடிய தோள்.

கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு

தொல்கவின் வாடிய தோள். (1235)

ரு, என்னை பிரிந்த கொடியவரின் கொடுமையை எடுத்துரைக்கும் வளையலுடன் பழைய நினைப்பில் வாடிய தோள்.

தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்

கொடியர் எனக்கூறல் நொந்து. (1236)

சூ, வளையலுடன் தோள்களும் வேதனையில் நெகிழ்வதால் அவரை கொடியவர் எனக் கூறுகிறேன் நொந்து.

பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்

வாடுதோள் பூசல் உரைத்து. (1237)

எ, பெருமைக் கொள்ள மாட்டாய என் நெஞ்சே கொடியவரின் கொடிமையால் வாடும் தோள் கண்டு எழுந்த பூசலை உரைத்து.

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது

பைந்தொடிப் பேதை நுதல். (1238)

அ, உறவுக் கொண்ட கைகளால் தடவ பசந்தது பழைய வளையல்கள் அணிந்த இளம்பெண் நெற்றி.

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற

பேதை பெருமழைக் கண். (1239)

கூ, உறவுக்கு இடைப்பட்ட குளிர்காற்றால் பசப்புற்ற இளம்பெண் பெருமழையைக் கண்டது கண்.

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே

ஒண்ணுதல் செய்தது கண்டு. (1240)

கo, கண்ணில் பசப்பு கலக்கமடைந்தது அன்று இணங்கி இருந்ததைக் கண்டு.

அதிகார விளக்கம்!

வறுமை போக்க வெளியூர் சென்றவரை எண்ணியபடி நறுமலரை கண்டு நாணுகிறது கண். நாடுபவர் நாடிவாராததை கண்டு கண்களில் பனி வருகிறது. மணமான நாட்களில் பருந்திருந்த தோள் அவர் பிரிவை உணர்த்தும்படி இளைத்திருக்கிறது. பிரிந்த கொடியவரின் கொடுமை உரைக்கிறது என் வளையல்கள். வளையலும் அதை அணிந்த தோள்களும் அவர் கொடியவர் என உரைக்க செய்தது. வாடிய தோள் கண்டு எழும் பூசலால் நெஞ்சே

பெருமைகொள். கூடி மகிழ்ந்த கைகள் தடவிய நெற்றியில் பசலை படர்ந்தது. காற்றும் புகாதபடி அணைத்து மகிழ்ந்த பெண்ணின் கண் இன்று பெரும் மழை உண்டாக்கியது. கண்ணில் பசப்பு கலைந்தது முன்பு கூடி மகிழ்ந்ததை நினைத்து.

காணொளி:-

https://youtu.be/nvyeunK0rFA

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க உ சூ, நிறை அழிதல் (126)

காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்

நாணுத்தாழ் வீழ்த்த கதவு. (1251)

க, காமம் சார்ந்த கணக்கிடுதல் உடைத்துவிடும் நிறை என்ற நாணத்தால் தாழ் போட்ட கதவும் வீழ்த்தும்படி.

காமம் எனவொன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை

யாமத்தும் ஆளும் தொழில். (1252)

உ, காமம் என்ற ஒன்று மட்டுமே கண்ணில் நின்று என் நெஞ்சத்தை இரவிலும் ஆளும் தொழில் செய்கிறது.

மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்

தும்மல்போல் தோன்றி விடும். (1253)

ங, மறைக்க முடியுமா என் காமத்தை. அது முன் அறிவிப்புக் குறிப்பின்றி தும்மல் போல் தோன்றிவிடுமே.

நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்

மறையிறந்து மன்று படும். (1254)

ச, நிறைவானவன் என்றே இருந்தேன் ஏனோ என் மறைக்க முடியா காமம் மறைவாக இருந்து பலர் முன்னிலையில் வெளிப்படுகிறது.

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்

உற்றார் அறிவதொன்று அன்று. (1255)

ரு, விரும்பாது சென்றவர் பின் செல்லாமல் இருக்கும் பெருந்தகைமை, காமநோய் அடைந்தவர் அறியக்கூடிய ஒன்று இல்லை.

செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ

எற்றென்னை உற்ற துயர். (1256)

சூ, விரும்பாது சென்றவர் பின் சென்று சேரும் சூழலை அளித்ததே என்னை ஏற்ற நானடைந்த துயரம்.

நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்

பேணியார் பெட்ப செயின். (1257)

எ, நாணம் என்ற ஒன்றை அறியாமல் போகலாம் காமத்துடன் நமக்கு வேண்டியதை பேணுபவர் பெறச் செய்தால்.

பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்

பெண்மை உடைக்கும் படை. (1258)

அ, பலவிதமான மாயத்தை செய்யும் கள்வன் பணிவாக பேசியே வார்த்தை அன்றோ நம் பெண்மை உடைக்கும் படை.

புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்

கலத்தல் உறுவது கண்டு. (1259)

கூ, புணரக் கூடாது என சென்றேன் ஆனால் மேய்ந்து கூடினேன் நெஞ்சம் கலக்க ஏங்கியதைக் கண்டு.

நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ

புணர்ந்தூடி நிற்பேம் எனல். (1260)

கo, கொழுப்பை தீயில் இட்டது போல் உருகும் நெஞ்சினார்க்கு உண்டோ புணராமல் ஊடி நிற்போம் எனல்.

அதிகார விளக்கம்!

நிறையான நாணம் என்ற கதவு உடைபடும் காமம் கணிந்தால், காமம் கண்ணில் நிறைந்து இரவும் பகலுமாய் நெஞ்சை ஆள்கிறது. காமம் தும்மல் போல் தோன்றுவதால் மறைக்க இயலவில்லை. நிறையானவன் என்றே இருந்தேன் இறையான அவன் மேல் கொண்ட காமம் மறைக்க முடியாமல் பலர் முன்னிலையில் வெளிப்படுகிறது. அவன் (இறை) என்னை மறந்து விலகினாலும் அவன் மேல் உள்ள காமத்தால் பெருந்தகைமை இல்லாமல் போயிற்று. நம்மை காக்கும் இறை மேல் காமம் நாணம் என்ற ஒன்றை இல்லாமல் செய்திடும். பலவிதமான மாயத்தை செய்யும் கள்வனான இறைவன் பணிவாக பேசியே வார்த்தையாகிய நாதம் அன்றோ நம் பெண்மை என்ற அச்சம் உடைக்கும் படை. யோகம் என்ற புணர்தல் கூடாது என சென்றேன் ஆனால் மேய்ந்து கூடினேன் நெஞ்சம் கலக்க ஏங்கியதைக் கண்டு. கொழுப்பை தீயில் இட்டது போல் உருகும் நெஞ்சி உடைய பக்தனுக்கு உண்டோ புணராமல் ஊடி நிற்போம் எனல்.

காணொளி:-

https://youtu.be/syBZHYqgptg

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க உ எ, அவர்வயின் விதும்பல் (127)

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற

நாளொற்றித் தேய்ந்த விரல். (1261)

க, வழி பார்த்து செயல் இழந்த கண்ணும் அவர் சென்ற நாட்களை எண்ணியதால் தேய்ந்த விரலும் என வேதனையானது.

இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்

கலங்கழியும் காரிகை நீத்து. (1262)

உ, சிறுபிள்ளை போல் இன்று மறந்திருந்தாலும் என் தோள் மேல் உள்ள அழகு நீர்த்து அழிகின்றது.

உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்

வரல்நசைஇ இன்னும் உளேன். (1263)

ந, உறுதியான நெஞ்சை துணையாகச் சென்றார் என்றாலும் வருவார் என விருப்பமுடன் இன்னும் உளேன்.

கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்

கோடுகொ டேறும்என் நெஞ்சு. (1264)

*ச, காமத்துடன் கூடியவர் பிரிந்தார் அவரது வரவை எண்ணி கொம்பை பற்றும் கொடி அதன் அளவை மீறியதுப் போல் அளவைக் கடக்கிறது என் நெஞ்சு.*

*காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்*

*நீங்கும்என் மென்தோள் பசப்பு.* (1265)

*டு, காணும் பொழுதே காமத்துடன் கனை தொடுப்பவரை கண்ணாரக் கண்டபின் நீங்கிவிடும் எனது மெல்லிய தோளில் தோன்றிய பசப்பு.*

*வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்*

*பைதல்நோய் எல்லாம் கெட.* (1266)

*சு, அவசியம் வருவார் அவதியுறச் செய்தவர் ஒருநாள். அன்று பருகுவேன் பிரிதலால் உண்டான நோய் எல்லாம் கெட.*

*புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்*

*கண்அன்ன கேளிர் விரன்.* (1267)

*எ, தழுவிக் கொள்வேன் ஊடுதலும் செய்வேன் கூடி மகிழ்வேன் கண் போல் உறவு கொண்ட வீரனை.*

*வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து*

*மாலை அயர்கம் விருந்து.* (1268)

*அ, செயலில் ஈடுபட்டு வெற்றி பெறட்டும் நம் வேந்தன் ஆதலால் மாலை வீட்டில் உண்டாகும் விருந்து.*

*ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார்*

*வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு.* (1269)

*கூ, ஒரு நாள் எழு நாட்கள் போல் செல்லும், தூரம் சென்றவர் வருகின்ற நாளை கணக்கு வைத்து ஏங்குபவர்க்கு.*

*பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறின்என்னாம்*

*உள்ளம் உடைந்துக்கக் கால்.* (1270)

*கo, பெற வேண்டியதை எல்லாம் பெறப்படுவதால் என்ன பயன் இப்பொழுது இன்றி உள்ளம் உடைந்துவிட்டது என்றால்.*

*அதிகார விளக்கம்!*

*மங்கிய வாள் போல் ஒளி இழந்தன கண்கள் மெலிந்து போயின கைகள் நாம் பிரிந்த நாட்களை எண்ணி. தோள்களும் இளைத்து இளம்பிள்ளை தோள் போல் ஆனது. உள்ளத்து உறுதியை துணையாக கொண்டவர் என்பதால் வரவுக்காக காத்திருக்கிறேன். படர்ந்த கொடி கொம்பை மீறுவது போல் காமம் எல்லை கடக்கிறது அவரது வருகையை எண்ணி. வருகையை கண்டபின் தோளில் படந்த பசலையும் மனதின் நோயும் மறைந்துவிடும். தழுவிக் கொண்டு ஊடுதல் செய்து கூடி மகிழ்வேன் கண் போன்ற என் காதலனை. வேலை முடிந்து வருவார் என மாலை விருந்துடன் காத்திருக்கிறேன். ஒருநாள் ஏழு நாட்கள் போல் கடக்கும் பிரிந்தவர் வரவுக்கு காத்திருப்பவற்கு. எல்லாம் இருந்தும் பயன் இல்லை இப்பொழுது உள்ளம் விரும்பும் ஒன்று கிடைக்கவில்லை என்றால்.*

*காணொளி:-*

https://youtu.be/zFLfm7S-I0I

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க உ கூ, புணர்ச்சி விதும்பல் (129)

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்

கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு. (1281)

க, நினைப்பதால் களிப்பூட்டுவதும் பார்ப்பதால் மகிழ்ச்சி தருவதும் மதுவிற்கு இல்லை காமத்திற்கு உண்டு.

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்

காமம் நிறைய வரின். (1282)

உ, தினை அளவும் ஊடுதல் கூடாது பனை அளவு காமம் நிறைந்து வரும்பொழுது.

பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்

காணா தமையல கண். (1283)

ங, என்மீது அக்கறையின்றி தன் செயல் செய்தாலும் கொண்டவனை காணாமல் அமைதி அடைவதில்லை கண்.

ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து

கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு. (1284)

ச, பிணக்குடன் பிரிந்து சென்றேன் தோழி ஆனால் அதை மறந்து கூடிட சென்றது என் நெஞ்சு.

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்

பழிகாணேன் கண்ட இடத்து. (1285)

ரு, மை தீட்டும் பொழுது அந்த கோலை காணாத கண் போல் கொண்டவரின் குற்றத்தை காணது போகிறது அவரை பார்த்த உடன்.

காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்

காணேன் தவறல் லவை. (1286)

கூ, பார்க்கும் பொழுதில் அவரது குற்றங்களை பார்க்க மறுக்கிறேன் பார்க்காத பொழுதோ குற்றமற்றதை பார்க்க மறுக்கிறேன்.

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்

பொய்த்தல் அறிந்தென் புலந்து. (1287)

எ, அடித்துச் செல்லும் என்று அறிந்தும் ஆற்றில் பாய்ப்பவர் போல் பொய்யாக போகும் என்று அறிந்தே ஊடல் கொள்கிறேன்.

இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்

கள்ளற்றே கள்வநின் மார்பு. (1288)

அ, ஏளனமாய் துன்பம் செய்தாலும் மயங்கியவர் மீண்டும் மதுவை நாடுவது போல் கள்வனே உன் மார்பை நாடுகிறேன்.

மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்

செவ்வி தலைப்படு வார். (1289)

கூ, மலரை விட மென்மையானது காமம் சிலர் மட்டுமே அதை செம்மையுடன் அறிந்து ஈடுபடுவார்.

கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்

என்னினும் தான்விதுப் புற்று. (1290)

கο, கண்ணில் ஆறுபோல் கலக்கமாகி இருந்தாலும் வெட்டிக் கொள்ளாமல் என்னைவிட விரைந்து பற்றிக்கொண்டாள்.

அதிகார விளக்கம்!

எண்ணத்தால் போதையும் பார்வையில் மகிழ்ச்சியும் தருவது காமம் ஆனால் அது குடிபோதைக்கு இல்லை. தினை அளவும் வெறுப்பு இன்றி இருந்து பனையளவு காமத்தை அனுபவிக்க வேண்டும். என்னைப் பற்றிய அக்கறை இல்லை என்றாலும் காதலனான இறைவனை காணாமல் அமைதியடையாது என் கண். வெறுப்படைந்து விலகினாலும் அவனை கூட நினைக்கும் நெஞ்சு. மை எழுதும் கோல் கண்ணுக்கு மை இடும்பொழுது மறைவது போல் அவன் குற்றம் அவனை கண்டால் தெரிவதில்லை. நெருங்கும் பொழுது குற்றத்தை மறந்து விலகிய நேரம் அவனது நற்பண்பையும் மறுக்கிறேன். நீந்த முடியாத ஆற்றில் குதிப்பது போல் ஊடல் கொண்டு தோல்வியடைகிறேன். துன்பம் தந்தாலும் மது உண்டவர் மீண்டும் மதுவை நாடுவது போல் உன் மார்பை நாடுகிறேன். மலரைவிட மென்மையான காமத்தை சிலரே செம்மையாக அனுபவிக்கின்றனர். கண் கலங்கி ஆறுபோல் ஆனாலும் பற்றிக் கொள்வதில் அவளுக்கே முதலிடம்.

காணொளி:-

https://youtu.be/MeALMWerS40

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க ௩ο, நெஞ்சொடு புலத்தல் (130)

அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே

நீஎமக்கு ஆகா தது. (1291)

க, அவரின் எண்ணமும் அவரின் காதலும் நன்கு அறிந்து எதனால் என் மனமே நீ எனக்கு எதிராக இருக்கிறாய்.

உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்

செறாஅரெனச் சேறியென் நெஞ்சு. (1292)

உ, உறவு பாராட்டாதவர் என்று கண்டு அறிந்த பின்பும் அவர் வெறுக்கமாட்டார் என்று விரும்புகிறாயே என் நெஞ்செ.

கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ

பெட்டாங்கு அவர்பின் செலல். (1293)

௩, கெட்டுப் போனவர்களுக்கு நாடக்கூடியவர்கள் இல்லை என்பது போல் நெஞ்சே நீ என்னை விட்டு அவர் பின் செல்கின்றாய்.

இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே

துனிசெய்து துவ்வாய்காண் மற்று. (1294)

ச, இனிமேல் நின்னொடு உறவு பாராட்டுபவர் யார் என்நெஞ்சே துன்பம் தந்து இன்பம் துய்க்க மறுக்கிறாயே.

பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்

அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு. (1295)

ரு, உறவு பெறாமல் இருந்தாலும் அஞ்சும், பெற்றாலும் அஞ்சும் தீராத துன்பம் தருவது ஏன் என் நெஞ்சே.

தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்

தினிய இருந்ததுஎன் நெஞ்சு. (1296)

சு, தனியை இருந்து நினைத்திருந்த பொழுது என்னை தின்பது போல் இருந்தாயே என் நெஞ்சே.

நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்

மாணா மடநெஞ்சிற் பட்டு. (1297)

எ, வெட்கத்தையும் மறந்தேன் அவரை மறக்காத என் மாறாத மடத்தனமான நெஞ்சத்துடன் சேர்ந்து.

எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்

உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. (1298)

அ, நகைப்பது இகழ்வானது என்று எண்ணி அவரது திறத்தை உள்ளத்தில் அசைபோடுகிறது உயிர்க்காதல் கொண்ட என் நெஞ்சு.

துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய

நெஞ்சம் துணையல் வழி. (1299)

கூ, துன்பம் வரும் பொழுது யார்தான் துணையாக இருப்பாரோ தன்னுடைய நெஞ்சு துணையாக இல்லாமல் போனால்.

தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய

நெஞ்சம் தமரல் வழி. (1300)

க0, அடைக்கலம் தர உறவுகள் ஏதுமில்லை தன்னுடைய நெஞ்சே தனக்கு உறவு இல்லை என்றால்.

அதிகார விளக்கம்!

நெஞ்சே அவர் காதல் எண்ணம் புரிந்த பின்னும் ஏன் கவலை கொள்கிறாய். உறவு பாராட்டாதவர் என்றாலும் அவரையே நாடுவது ஏனோ என் நெஞ்சே. கெட்டுப் போனவர்களை நாடக்கூடியவர்கள் இல்லை என்றா என்னை விட்டு அவர் பின் செல்கிறாய் என் நெஞ்சே உன்னை இனி யார் ஏற்பார் துன்பம் ஏற்று இன்பம் மறுக்கிறாயே. உறவாடவில்லை என்றாலும் அஞ்சுகிறாய் உறவாடும் பொழுது பிரிவை எண்ணி அஞ்சி தீராத துன்பத்தை தருகிறாய். தனிமையிலும் வாட்டுகிறாய். நாணமும் மறந்தேன் நெஞ்சே உன் செயலால். அவர் திறமையை கூட எண்ணி சிரிக்காமல் என்னுள் அசைபோடுகிறேன். துன்பத்திற்கு யார் துணை வருவார் என் நெஞ்சே நீயே எனக்கு துணை இல்லை என்றால் அடைக்கலம் யார் தருவார்.

காணொளி:-

https://youtu.be/WkTUxCfk8D0

## இன்பத்துப்பால் (காமத்துப்பால்) | கற்பியல் | க ௩ உ, புலவி நுணுக்கம் (132)

பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்

நண்ணேன் பரத்தநின் மார்பு. (1311)

க, பெண்தன்மைக் கொண்ட எல்லோரும் கண்களால் பொதுப் பொருள் போல் கண்டதால் நாட மாட்டேன் பரந்த உனது மார்பை.

ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை

நீடுவாழ் கென்பாக்கு அறிந்து. (1312)

உ, ஊடலாக இருந்த பொழுது தும்மினார் நான் அவரை நீடுவாழ் என்பேன் என்பதை அறிந்து.

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்

காட்டிய சூடினீர் என்று. (1313)

ங, புதுவித மலர் சூடி அழகு செய்து கொண்டால் நினைவில் சுமக்கும் ஒருத்திக்கே குறிப்பு காட்டு சூடினீர் என்கிறாள்.

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்

யாரினும் யாரினும் என்று. (1314)

ச, உன்னைவிட காதலிக்க யார் இருக்கிறார்கள் என்றதும் ஊடினால் அப்படி யார் யார் அது என்று.

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்

கண்நிறை நீர்கொண் டனள். (1315)

ரு, இப்பிறவியில் பிரியாமல் இருக்கலாம் என்ற உடன் கண்கள் முழுவதும் நீர் நிரம்ப நின்றாள். (எப்பிறவியிலும் பிரியக்கூடாது என்ற நினைப்பில்)

உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்

புல்லாள் புலத்தக் கனள். (1316)

சு, நினைத்தேன் என்றேன் அப்படி என்றால் மற்றபடி மறந்திருந்தீர்கள் என்று என்னை விலகினாள் நெருங்கி இருந்தவள்.

வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்

யாருள்ளித் தும்மினீர் என்று. (1317)

எ, வழக்கப்படி தும்மினேன் வாழ்த்தினாள் உடனே மாறி அழுதாள் யார் உம்மை நினைக்க தும்மினீர் என்று.

தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்

எம்மை மறைத்திரோ என்று. (1318)

அ, தும்மலை தடுத்து  நிறுத்த அழுதாள் உங்கள் எண்ணத்தை எனக்கு மறைக்கின்றீர் என்று.

தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்கும்நீர்

இந்நீரர் ஆகுதிர் என்று. (1319)

கூ, பாராட்டி தான்படும் இன்னலை உணர்த்தினாலும் வறுந்தும், பிறரையும் இப்படித்தான் சமாதானம் செய்கிறீர் என்று.

நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்

யாருள்ளி நோக்கினீர் என்று. (1320)

க0, அவளை நினைத்தபடியே பார்த்தாலும் வருந்துவாள் யாரை நினைத்து என்னை பார்க்கிறாய் என்று.

அதிகார விளக்கம்!

பெண்ணும் பெண்தன்மை கொண்டவரும் உன் பரந்த மார்பு மேல் பார்வை செலுத்துவதால் அதை நாட மறுக்கிறேன். நீடு வாழ்க என வாழ்த்துவேன் என்று ஊடலாக இருக்கும் பொழுது தும்மினார். புது மலர் சூடி இருந்தால் யாரை எண்ணிச் சூடினீர் என்கிறாள். உன்னிலும் அழகி யாரும் இல்லை என்றாலும் யாருடன் ஒப்புமை செய்கிறீர் என்று கேட்கிறாள். இப் பிறவியில் உன்னை பிரியேன் என்றாலும் கண்ணீர் வழிய வாடினாள் அடுத்த பிறவிக்கு ஆள் கிடைத்ததோ என்பதைப் போல். நினைத்தேன் என்றதும் மறத்தீரோ என்று விலகினாள். தும்பினேன் வாழ்த்தினாள் மறுகணமே யாரை எண்ணி தும்மினீர் என்கிறாள் சரி அடக்கினேன் அதற்கும் அறியாதபடி மறைக்க முயல்கிறாய் என்கிறாள். அவளது நற்செயலை பாராட்டினாலும் வறுந்துகிறாள் இப்படித்தான் அடுத்தவளையும் தேற்றுகிறாயா என்று. அவளையே நினைத்தபடி பார்ப்பினும் வருந்துகிறாள் யாரை நினைத்து என்னை பார்க்கிறாய் என்று.

காணொளி:-

https://youtu.be/Yy0Bh63yxvs